

# யோவான் ஸ்நானகன்

பாஸ்டர் மா. ஜான்ராஜ்

V. மதன்ராஜ் ஏஞ்சல்

# யோவான் ஸ்நானகன்


## பாஸ்டர் மா. ஜான்ராஜ்


CARMEL PRAYER FELLOWSHIP
ZIM
ZIONFORT INTERNATIONAL MINISTRIES

*சீயோன்கோட்டை*
*சர்வதேச ஊழியங்கள்*


வெளியிடுபவர்:
**உள்ளங்கை மேகம் பப்ளிகேஷன்ஸ்**
26/D, காந்தி ரோடு, பஸ் ஸ்டாண்டு மேற்குபுறம்,
சிவகாசி-626 123.
போன்: 0091-4562-230491
சபை : 0091-4562-277209
பேக்ஸ்: 0091-4562-230491
இமெயில்: pastor_m_johnraj@yahoo.com
*Website* : www.carmel.org.in

**யோவான் ஸ்நானகன்**

| | |
|---|---|
| புத்தக வரிசை | : 27 |
| முதற் பதிப்பு | : ஏப்ரல் 1998 |
| இரண்டாம் பதிப்பு | : ஜனவரி 2012 |
| வெளியிடுவோர் | : **உள்ளங்கை மேகம் பப்ளிகேஷன்ஸ்** |
| மொத்தப் பிரதிகள் | : 1000 |
| உரிமை | : பாஸ்டர் மா. ஜான்ராஜ் |
| விலை | : Rs. 40/- (வெளிநாடுகளில் 5 US டாலர்கள்). |


## புத்தகங்கள் கிடைக்குமிடம்:

**இந்தியாவிலுள்ள அனைத்து கிறிஸ்தவ புத்தக நிலையங்களிலும் கிடைக்கும்.**

## To Buy Online

**www.TamilChristianStore.in**

**புத்தக தேவைக்கும் புத்தக ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புவதற்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:**

**பாஸ்டர் மா. ஜான்ராஜ்**
**உள்ளங்கை மேகம் பப்ளிகேஷன்ஸ்**
**26.D, காந்தி ரோடு**
**சிவகாசி - 626 123**
**அலுவலக போன் : 0091-4562-277209**
**செல் : 99947 18879**

# பல்லாவரம் பாஸ்டர் ஸ்டீபன் நினைவாக



பாஸ்டர். ஸ்டீபன் அவர்கள் ஒரு வைராக்கிய கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர். 15 ஆண்டுகள் இராணுவத்தில் பணி புரிந்தார். அந்நாட்களில் இரட்சிக்கப்பட்டு தன்னால் இயன்ற மட்டும் கர்த்தருடைய ஊழியர்களுடன் இணைந்து ஊழியம் செய்தார். உபதேச சட்டங்களை நன்றாகக் கற்றுக் கொண்டார். பல ஆண்டுகளாக சென்னை பல்லாவரத்தில் கர்த்தரின் ஊழியத்தைச் செய்தார்.

சிறந்த விசுவாச வீரர். ஜெபவீரர். வெளிப்படுத்தலோடு நன்கு வசனத்தைப் பேசுவார். ஆவியின் ஏவுதலோடு ஜீவித்தவர். மிகுந்த ஆத்மபாரம் உள்ளவர்.

கடந்த 27.11.97 வியாழன் காலை 7 மணி அளவில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். சிறந்த பத்திரிக்கை ஆசிரியர். நல்ல புத்தக எழுத்தாளர். இவரின் பிரிவு கிறிஸ்தவ உலகுக்கோர் பேரிழப்பு. இவரின் நினைவாக இப்புத்தகம் வெளியிடப்படுகிறது.

## அர்ப்பணம்

அன்பிலே கரும்பு
ஆவியிலே இரும்பு
அருட்பணியிலே எறும்பு
அடக்கத்திலே துரும்பு - இது யோவானின் துவக்கம்

இடுப்பிலே வார்க்கச்சை
இதயத்திலோ பரிசுத்தம்
உடுப்பிலே ஒட்டகமயிர்
உண்பதோ வெட்டுக்கிளி - இது யோவானின் தோற்றம்

வார்த்தையில் அன்பு
வாழ்க்கையிலோ வம்பு
உதட்டில் முத்தம்
உள்ளத்திலோ பித்தம் - இது யோவானின் எதிரிகள்

பரிசேயர் பதறினர்
சதுசேயர் சாடினர்
மன்னர் வாடினர்
மக்கள் மனம் திரும்பினர் - இது யோவானின் ஊழியம்

ஆவியில் எலியா
ஆதங்கத்தில் இயேசு
புவியில் அருணோதயம்
பூரணத்தில் இரத்தசாட்சி - இது யோவானின் முடிவு

சின்னவன் ஆயிரமாகிட
சிறியவன பலத்தவனாகிட
சீறிய தேவபணியில்
சிங்கமான யோவான்கள்

எழும்பிட இந்நூல்... அர்ப்ப

**ஆக்கியோன். மா. ஜான்ராஜ்**

# பொருளடக்கம்


| | | P. No. |
|---|---|---|
| 1. | அருணோதயமாகிய யோவான் ஸ்நானகன் | 7 |
| 2. | ஆசீர்வாதமான யோவான் ஸ்நானகன் | 23 |
| 3. | ஆவிக்குரியவனான யோவான் ஸ்நானகன் | 31 |
| 4. | ஆயத்தப்படும் யோவான் ஸ்நானகன் | 36 |
| 5. | அருள்வாக்கு பெற்ற யோவான் ஸ்நானகன் | 47 |
| 6. | அருட்பணியாளனாகிய யோவான் ஸ்நானகன் | 59 |
| 7. | ஆவிகளோடு போராடும் யோவான் ஸ்நானகன் | 77 |

## திறவுகோல் வசனம்

"தேவனால் அனுப்பப்பட்ட ஒரு மனுஷன் இருந்தான்." அவன் பேர் யோவான்.

*(யோவான் 1 : 8)*

"யோவான் ஒரு அற்புதத்தையும் செய்யவில்லை. ஆகிலும் இயேசுவைக் குறித்து யோவான் சொன்னதெல்லாம் மெய்யாயிருக்கிறது" *(யோவான் 10 : 41)*

# 1

# அருணோதயமாகிய யோவான் ஸ்நானகன்

**"உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயம் நம்மை சந்தித்திருக்கிறது" லூக் 1 : 79.**

தேவ மனிதனாகிய யோவான் ஸ்நானகனைக் குறித்து அவருடைய தகப்பனாகிய சகரியா பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு சொன்ன ஒரு வார்த்தையைத்தான் நீங்கள் இப்பொழுது மேலே வாசித்தீர்கள். இந்த வசனத்திலே யோவான் ஸ்நானகனை அருணோதயம் என்று சகரியா உறைக்கின்றார். ஆங்கிலத்திலே இதற்கு Spiringing up of light = (G.K) ANATOLE - Rising sun உதயசூரியன் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

யோவான் ஸ்நானகன் ஒரு உதய சூரியனாக எழும்பினான். உதய சூரியன் எப்போது எழும்புகிறது? 12 மணி நேர இருளுக்குப் பின்பு உதய சூரியன் எழும்புகிறது. நீதியின் சூரியன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஆவார். ஆனால் யோவான் ஸ்நானகனோ உதய சூரியன் என்று அழைக்கப்பட்டார். இந்த அருணோதயம் என்ற வார்த்தை யோவான் ஸ்நானகனையேக் குறிக்கிறது என்று DAKES என்ற வேத பண்டிதரும் தன்னுடைய விளக்க உரையில் எழுதுகிறார். (DAKES Bible - page N.T. 58 Col - 1 - a -)

யோவான் ஸ்நானகன் உதித்த காலம் ஒரு இருளுள்ள காலமே. மல்கியா தீர்க்கதரிசி முதல் மத்தேயு எழுதின சுவிசேஷம் வரைக்கும் 400 ஆண்டுகள் ஆவிக்குரிய உலகத்திலே ஒரு இருண்ட காலமாகக் காணப்பட்டது. கட்டளையே விளக்கு. வேதமே வெளிச்சம். வேத வசன வெளிப்பாடு இல்லாத காலம் ஒரு இருண்ட காலமே. 400 வருடங்களாக எவ்வித தீர்க்கதரிசியோ, எந்த ஒரு தீர்க்கதரிசனமோ ஒருவருக்கும் கிட்டாதபடியால் வேத பண்டிதர்கள் அதை இருண்ட காலம் என்றே அழைக்கிறார்கள். அந்த இருண்ட காலத்திலே திடீரென்று ஒரு தீர்க்கதரிசியாக தேவ மனிதனாக யோவான் பிறந்தபடியினாலே யோவானைக் குறித்து பரிசுத்த ஆவியானவர் அருணோதயம் என்றே சொல்லுகிறார்.

இன்று வாழ்ந்து கொண்டிருக்கிற தேவனுடைய பிள்ளைகளே! உங்களுக்கும், எனக்கும் இதே போன்ற அழைப்புதான் என்பதை

உங்களுக்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன். நம்மை சுற்றி இருக்கும் ஜனங்கள் வெளிச்சத்தின் பிள்ளைகள் அல்ல. அனைவரும் இருளின் பிள்ளைகளும், இரவின் பிள்ளைகளுமாக இருக்கிறார்கள். "இருள் பூமியையும் காரிருள் தேசத்தையும் மூடும். ஆனாலும் கர்த்தர் உன்மேல் உதிப்பார்" உதிக்கிற உன் ஒளியினிடத்திற்கு ராஜாக்கள் நடந்து வருவார்கள் என்றே தீர்க்கதரிசி சொல்கிறார். (ஏசா 60 : 1 : 3) எனவே நாமும் பாவமுள்ள ஜனத்தின் மத்தியில் பரிசுத்த கூட்டமாய் எழும்ப வேண்டும். இருள் நிறைந்த மக்கள் மத்தியில் வெளிச்சமுள்ள அருணோதயமாக, உதய சூரியனாக எழும்ப வேண்டும்.

யோவான் ஸ்நானகன் அருணோதயமாக அழைக்கப்படுவதற்கு காரணம் என்ன? வேத வசன வெளிச்சம் உள்ளவனே அருணோதயமாக அழைக்கப்படுகிறான். வேதவசனம் இல்லாத காலத்தையே இருண்ட காலமாகக் கர்த்தர் அழைக்கிறார். அன்பான கர்த்தருடைய பிள்ளைகளே! உங்களுக்குள்ளும் வேத வசன வெளிச்சம் இருந்தால் நீங்கள் அருணோதயமாக இருப்பீர்கள். பலருக்கு வெளிச்சம் காட்டும் கர்த்தருடைய பிள்ளைகளாய் ஜீவிக்க முடியும். வேத வசன வெளிச்சம் அல்லது வெளிப்பாடு இல்லாவிட்டால் இருளிலே நடந்து, தடவித் திரிகிற ஆவிக்குரிய குருட்டாட்டம் உள்ளவர்களாய்த்தான் இருக்க முடியும். இதை ரூபகாரப்படுத்த ஏசாயா தீர்க்கதரிசியின் வார்த்தைகளைக் கவனியுங்கள்.

"வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்க வேண்டும். இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால் அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சம் இல்லை" என்று ஏசா 8 : 20-ல் சொல்லுகிறார்.

வேத வசன வெளிச்சமே, வேத வசன வெளிப்பாடுகளே நம்மை விடியற்காலத்துப் பிள்ளைகளாக மாற்றுகிறது என்பதை அனுபவமுள்ள பேதுரு அப்போஸ்தலன் அடித்துக் கூறுகிறார். "அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு. பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்கும் அளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கின்ற விளக்கைப் போன்ற வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும்" (II பேதுரு 1 : 19) என்று சொல்லுகிறார்.

யோவான் ஸ்நானகனுக்கு வேத வசன வெளிச்சமிருந்தது. அதனால் தான் அவர் அருணோதயமாகக் காணப்பட்டார். இதை நாம் அறிந்து கொள்ள அருணோதயம் என்று சொல்லப்பட்ட வேத வசன

தொடர்ச்சிகளை நாம் பார்க்கும் போது லூக் 3 : 1 முதல் 5 வசனம் வரைக்கும் நாம் பார்த்தால் அது விளங்கும். இந்த வசனத்திலே ஏழுவிதமான மனிதர்கள் வாழ்ந்தார்கள். அந்த மனிதர்கள் மத்தியிலே வேத வசன வெளிச்சம் வீசும் மனிதனான யோவான் காணப்பட்டார். யோவானைச் சுற்றிலும் உள்ள மனிதர்கள் 7 பேரும் இருளின் பிள்ளைகளாய் இருந்தார்கள்.

**திபேரியுராயன் ராஜ்யபாரம் பண்ணின பதினைந்தாம் வருஷத்திலே பொந்தியுபிலாத்து யூதேயாவுக்குத் தேசாதிபதியாயும், ஏரோது காற்பங்கு தேசமாகிய கலிலேயாவுக்கு அதிபதியாயும், இவன் சகோதரனாகிய பிலிப்பு காற்பங்கு தேசமாகிய இதுமேயாவுக்கும், திராசொனித்தி நாட்டிற்கு அதிபதியாயும், லிசானியா காற்பங்கு தேசமாகிய அபிலேனேக்கு அதிபதியாயும் அன்னாவும், காய்பாவும் பிரதான ஆசாரியராயும் இருந்த காலத்தில் வனாந்தரத்திலே சகரியாவின் குமாரனாகிய யோவானுக்கு தேவனுடைய வார்த்தை உண்டாயிற்று. (லூக். 3 : 1, 2)**

யோவான் ஸ்நானகனை தன் காலத்திலே வாழந்த மனிதர்கள் மத்தியில் சூழ்நிலைகளை ஜெயித்தவன் என்று நாம் அழைக்கலாம். நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் என்றும் கர்த்தர் சொல்லுகிறார். சூழ்நிலைகளால் தோற்கடிக்கப்பட்ட அநேக ஊழியர்கள் உண்டு. சூழ்நிலை என்னும் வலையில் சிக்குண்டு முடமாகிப்போன பலர் உண்டு. யோவான் தன்னைச் சூழ இருந்த சூழ்நிலைகளை ஜெயித்தான். அருணோதயம் போல் எழும்பினான். அபிஷேகம் பெற்ற கர்த்தருடைய பிள்ளைகளை சூழ்நிலைகள் மேற்கொள்வது இல்லை. நாமே சூழ்நிலைகளை ஜெயிக்கக் கூடியவர்கள். அன்பு நண்பா! ஆவியானவரைப் பெற்ற கர்த்தருக்காக ஜீவிக்கிற உன் சூழ்நிலை உனக்கு விரோதமாய் செயல்படுகிறதோ? கோலியாத் போன்ற பயங்கர ராட்சதர்கள் உனக்கு முன்னால் நின்று பயமுறுத்துகிறார்களோ? மகதலேனாள் மரியாளுக்கு முன்பாக இயேசு கிறிஸ்துவை அடைத்துப் போட்டிருந்த மகா பாறாங்கல் போன்று உன்னுடைய ஆசீர்வாதத்தின் வாசல்கள் அடைக்கப்பட்டிருக்கிறதோ? செரூபாபேலுக்கு முன்பாக தரியுராஜா தடைக்கல்லாக நின்றது போல உன்னுடைய வாழ்க்கைக்கும், ஊழியத்துக்கும் எதிராக பல தடைக்கற்கள் இருக்கின்றதோ? அந்த சூழ்நிலைகளால் நீ நொந்து வெந்து போகின்றாயோ? இந்த செய்தியைப் படித்துப் கொண்டிருக்கிற இந்த வேளையில் நான் ஜெபத்தோடு இதை

எழுதிக் கொண்டதால் பரிசுத்த ஆவியானவர் உங்கள் மேல் இறங்குவார். உங்களைத் தோற்கடிக்கிறதான சூழ்நிலைகளை தேவன் அப்புறப்படுத்துகிறார். விசுவாசித்து எழும்புங்கள். நம்முடைய தேவன் காலங்களையும், சமயங்களையும் மாற்றுகிறவர். ராஜாக்களைத் தள்ளி ராஜாக்களை ஏற்படுத்தக்கூடியவர்.

யோவான் ஸ்நானகன் தன்னை சூழ இருக்கிறதான ஏழுவிதமான மனிதர்களைப் பார்த்து பயந்திருப்பான் என்று சொன்னால் அவன் அருணோதயமாக எழுந்திருக்க முடியாது. பலருக்கு வெளிச்சம் கொடுத்திருக்க முடியாது. அவன் வெளிச்சத்திலே பலர் களிகூற மனதாய் இருந்தார்களே அந்த தேவ திட்டமெல்லாம் பாழாய் போயிருக்கும். இன்றும் தேவன் உங்களுக்கு வைத்திருக்கும் மகிமையான திட்டங்களுக்காக அரசாட்சி செய்து கொண்டிருக்கிற நம் ஆண்டவரைப் பாருங்கள். தேவன் தாமே உங்களுக்கு முன் நிற்கும் எதிர் சூழ்நிலைகளை உங்கள் பாதங்களுக்குக் கீழ்ப்படுத்துகிறவர்.

அபிஷேகம் பண்ணப்பட்ட தாவீது அவலட்சணமான பாவத்திலே விழுந்து போனான். அதற்கு தன்னுடைய சூழ்நிலைகளின் மேல் பழியைப் போட்டான். "நான் துர்க்குணத்தில் உருவானேன். என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்" என்று சங். 51 : 5ல் சொல்லுகிறான். பாவமான சூழ்நிலையினால் பாவத்தில் விழுந்தேன் என்கிறார்.

அற்புதமான தீர்க்கதரிசியாகிய ஏசாயா அசுத்த உதடு உள்ள ஒரு மனிதனாய்க் காணப்பட்டான். அசுத்த உதடுகளுக்கு காரணமாய் தன்னை நொந்து கொள்ளவில்லை. தன்னைச் சூழ இருக்கிற ஜனங்கள் மேல் குறைகூறுகிறவனாகக் காணப்பட்டான். அசுத்த உதடுகளுக்கு காரணம் நான் அசுத்த உதடுகளுள்ள ஜனத்தின் நடுவில் வாசமாயிருக்கிறேன் என்று (ஏசாயா 6 : 5)-ல் சொல்லுகிறார். இவையெல்லாம் தோற்கடிக்கப்பட்ட சாட்சிகள். ஆனால் புதிய ஏற்பாட்டிலே நம் ஆண்டவர் உங்களையும், என்னையும் யோவானைப் போல் எழுந்து பிரகாசிக்கச் சொல்லுகிறார். அதற்குத் தேவை நிலைவரமான விசுவாசமாகும். நம்முடைய விசுவாசமே உலகத்தைச் ஜெயிக்கிற ஜெயம். தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும். இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறவனேயன்றி உலகத்தை ஜெயிக்கிறவன் யார்? (I யோவான் 5 : 4, 5).

அன்பு நண்பர்களே! அருமை விசுவாசிகளே! உடன் ஊழியர்களே! உங்கள் வாழ்க்கையின் தோல்விக்கும், ஊழியத்தின் தோல்விக்கும் உங்களோடிருக்கிற ஜனங்கள் மேல் பழி போடாதிருங்கள். முழு உலகமும் பொல்லாங்குக்குள் கிடக்கிறது. ஒரு இடத்தை விட்டு இன்னொரு இடத்திற்குச் சென்றாலும் சூழ்நிலைகளைச் ஜெயிக்க முடியாது. நமது சூழ்நிலைகளைச் ஜெயிக்க விசுவாசமே பிரதானமாய் இருக்கிறது.

யோவான் ஸ்நானகனை சுற்றியுள்ள ஏழுவித மனிதர்களும் யோவானுக்கு முன்பாக எழும்பின பெரிய இமயமலை போல் காட்சி அளித்தார்கள். அவர்களை அப்புறப்படுத்துவதும், அவர்களுக்கு முன்பாக கர்த்தருக்காக தீர்க்கதரிசியாக, தேவ மனிதனாக வாழ்வதும் யோவானுக்கு ஒரு சிம்ம சொப்பனமாகக் காணப்பட்டது என்றாலும் தாயின் வயிற்றிலே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட யோவான் தன்னைச் சுற்றியுள்ள ஏழுவித மனிதர்களால் உண்டான எதிர்ப்புகளின் மத்தியிலே ஆண்டவராகிய இயேசுவின் வெளிப்பாடுகளைப் பெற்று வல்லமையுள்ள தீர்க்கதரிசியாகக் காணப்பட்டான். இந்த செய்தியைப் படிக்கிற நீங்களும் யோவானைப் போல சூழ்நிலைகளை ஜெயித்து விடுங்கள். சோர்வடையாமல் முன்னேறுங்கள். தடைகளைத் தகர்த்துப் போடுகிற கர்த்தர் உங்களுக்கு முன்பாகச் சென்று உங்கள் சூழ்நிலைகளைச் ஜெயிக்க பெலன் தருவார்.

## 1. யோவானைச் சுற்றியுள்ள ஏழு மனிதர்களும் எப்படிப்பட்டவர்கள்? திபேரியுராயன் :

யோவான் ஸ்நானகன் ஊழியத்திற்காக அழைக்கப்பட்டு வந்த போது யோவான் சந்தித்த முதல் மனிதன் திபேரியுராயன் என்பவனாகும். அக்காலத்திலே திபேரியுராயன் ராஜ்யபாரம் பண்ணிக் கொண்டிருந்தான் என்று வேதம் சொல்லுகிறது. அரசன் எவ்வழியோ குடிகளும் அவ்வழியே. தலைவன் எப்படியோ தொண்டர்களும் அப்படியே. குருக்கள் எப்படியோ சீடர்களும் அப்படியே. இதுதான் இன்றைய நாள் வரை நடக்கும் உலக வழக்கம். ஆனால் யோவான் ஸ்நானகனுடைய வாழ்க்கையிலே அது முற்றிலும் தவறானது ஆகும். யோவானைச் சூழ இருந்த திபேரியுராயனுடைய எதிர் சக்திகள் யோவானை ஒன்றும் சேதப்படுத்த முடியவில்லை.

திபேரியுராயன் என்ற பெயருக்கு சந்தேகம் உள்ளவன் என்று அர்த்தம். சந்தேகம் உள்ள திபேரியுராயன் காலத்தில் ஜனங்களும் சந்தேகம் உள்ளவர்களாகத்தான் இருப்பார்கள். சந்தேகம் என்ற சரக்கு

அது சாத்தானிடத்தில் இருந்து இறக்குமதி ஆகிறது. ஆதி 3 : 1ல் நம் ஆதித்தாய் ஏவாளை சந்தேகத்தால் நிரப்பியவன். இன்று முழு உலகமும் சந்தேகத்திற்குள்தான் இருக்கிறது. சந்தேகப்படுகிற மனிதனும், கடன்பட்ட மனிதனும் ஒரு போதும் தலை நிமிர்ந்து முன்னேறுவதில்லை என்று ஒரு பக்தன் சொல்லுகிறார். கடன்பட்ட மனிதன் கடனிலிருந்து விடுபடுவது அவ்வளவு எளிதல்ல. கடன் எப்போதும் பெருகித்தான் போகுமே தவிர கடன் என்ற அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறுவது மகாக்கடினம். இப்படிப்பட்ட மனிதன் தேசத்தைக் ஆண்டு கொண்டிருக்கும் வேளையில் 400 ஆண்டுகள் இருண்ட காலமாகக் காணப்பட்டது.

சந்தேகத்திற்கு எதிர்ப்பதம் விசுவாசமாகும். விசுவாசிப்பவர்கள் இதயத்தில் சந்தேகம் தங்கமுடியாது. இதை வாசித்துக் கொண்டிருக்கிற - நண்பர்களே! உங்களுக்கும், எனக்கும் கர்த்தருடைய வார்த்தையின் பெயரிலே உண்மையுள்ள விசுவாசம் வேண்டும். கர்த்தருடைய வாக்குத்தத்தத்தின் மேல் திடமான விசுவாசம் வேண்டும். தேவன் நமக்கு வைத்திருக்கிற ஐக்கியத்தைக் குறித்து நல்லதோர் நம்பிக்கை நமக்கு வேண்டும். நமக்குக் கொடுத்திருக்கும் சபை நம் எதிர்காலம் முழுவதற்கும் நல்ல ஒரு பாதுகாப்பு உள்ளது என்பதான விசுவாசம் உங்களுக்கு வேண்டும். சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான். அப்படிப்பட்டவன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறமுடியாது என்று யாக்கோபு 1 : 6, 7-ல் சொல்லுகிறார்.

சந்தேகமுள்ள மனிதர் மத்தியில் யோவானுக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று. ஆகவேதான் சந்தேகப்படுகிற மனிதர்களெல்லாம் இருளுக்குள் இருக்கும்போது யோவான் ஸ்நானகனோ அருணோதயமாக எழும்பினான். அன்பானவர்களே! ஆண்டவரிடத்தில் சிரம் தாழ்த்தி உண்மையாய் ஜெபிப்பீர்களா? உங்கள் உள்ளத்தின் சந்தேகங்களையும், குடும்பத்தின் சந்தேகங்களையும் கர்த்தர் அப்புறப்படுத்துவாராக! உதவிச் செய்வாராக! சந்தேகத்தை அகற்றுவதற்கு ஒரே வழி கர்த்தருடைய வார்த்தையை அதிகமாக வாசிக்க வேண்டும். தியானிக்க வேண்டும்.

## 2. பொந்தியு பிலாத்து :

யோவான் ஸ்நானகன் ஊழியத்திற்காக எழும்பின போது இரண்டாவதாக சந்தித்த மனிதன் பொந்தியு பிலாத்து. இவன் யூதேயாவுக்கு தேசாதிபதியாக இருந்தான் என்று லூக். 3 : 1 சொல்லுகிறது.

இவன் நாட்களிலே யோவானுக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று என்று பார்க்கிறோம். பொந்தியு பிலாத்து என்றால் கை கழுவுகிறவன் என்று அர்த்தம்.

இயேசு கிறிஸ்துவை பிடித்து சிலுவையில் அறையும்படியாக விசாரணைக்கு கொண்டு வரும் போது இந்த பொந்தியு பிலாத்து இயேசுவை விசாரிக்கிறவனாக இருந்தான். தீர்ப்பு சொல்லுகிற பொறுப்பிலும் அவன் இருந்தான். (யோவான் 19 : 10) இந்த பொந்தியு பிலாத்து இயேசு கிறிஸ்துவை விசாரித்த போது யூதர்கள் பொறாமையினால் ஒப்புக்கொடுத்தார்கள் என்று அறிந்தான். (மத். 27 : 17) இயேசு கிறிஸ்து குற்றமற்றவர், பரிசுத்தமுள்ளவர், நீதியுள்ளவர். ஆனால் ஜனங்கள் அவர் மேல் கொண்ட பொறாமையினாலே பிராது சொல்லுகிறார்கள் என்பதை அவன் அறிந்து கொண்டான். இவனுக்கு இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறையவும், விடுதலைப் பண்ணவும் அதிகாரம் இருந்தது. அந்த அதிகாரத்தை பயன்படுத்தி நீதியின் பக்கம் நின்று நியாயம் செய்து இயேசுவை விடுதலை செய்திருக்கலாம். ஆனால் அவன் அப்படிச் செய்யவில்லை.

இயேசு கிறிஸ்து நீதிமான். அவருக்கு ஒரு தீங்கும் செய்யக்கூடாது என்று பொந்தியு பிலாத்தின் மனைவிக்கு தேவன் சொப்பனத்திலே வெளிப்பாடுகளைக் கொடுத்தார். அவர் நிமித்தம் என் தூக்கத்தில் உண்டான சொப்பனத்தில் வெகுபாடு பட்டேன் என்று வேலைக்காரன் மூலமாக செய்தி அனுப்பினார்கள். அதை பொந்தியு பிலாத்து வாசித்துப் பார்த்தான். (மத் 27 : 19) இரண்டாவதாக இயேசு கிறிஸ்து நீதிமான் என்று தெளிவாகத் தெரிந்தாலும் இயேசு கிறிஸ்துவை விடுதலை செய்யாமல் கைகளைக் கழுவி பொறாமைக்காரர்கள் வசமாய் ஒப்புவித்தான். (மத் 27 : 24).

இன்று நமது சபைகளிலும், நமது ஊழியங்களிலும், கைகழுவும் மனிதர்கள் பலரைப் பார்க்க முடியும். கையைவிட்டு நழுவிப் போகும் விசுவாசிகளையும், ஊழியர்களையும் நாம் பார்க்க முடியும். நமது சபைகளிலே நடக்கும் கன்வென்ஷன் கூட்டங்களிலே கைகழுவும் பொந்தியு பிலாத்துக்களை அடையாளம் காணமுடியும். பல்லாயிரக் கணக்கான ரூபாயிலே கூட்டம் நடக்கும் போது 10 ரூபாய் கூட கொடுக்க மனமற்றவர்கள் கைகழுவும் பிலாத்துக்களே. இரவு பகலாய் மேடைபோட்டு வால்போஸ்ட்டுகளை நகரங்களிலும், கிராமங்களிலும், விநியோகம் செய்யும் சபையின் பக்கம் எட்டிப் பாராமல் கூட்டம் நடக்கும்போது விருந்தாளிகளைப் போல் வந்து போகிறவர்கள் கைகழுவும் பொந்தியு பிலாத்துக்களே. சபையிலே பலர் ஞானஸ்நானம் எடுக்கும் போது எவ்வித பாரமும் அற்று, ஞானஸ்நான ஆராதனைக்கு வராமல் வீடுகளிலே உல்லாசமாய் தூங்குகிறவர்களும், ஓய்வு

எடுக்கிறவர்களும் கை கழுவும் பிலாத்துக்களே. வட இந்தியாவிலும் கிராமங்களிலும் ஜனங்கள் அழிந்து கொண்டிருக்கிறபோது வாரந்தோறும் சபை ஆராதனையில் கூடி மகிழ்ச்சியாய் பாட்டுக்களைப்பாடி உற்சாகமாய் செய்திகளைக் கேட்டு, நான்கு சுவருக்குள் அடங்கிக் கிடப்பவர்களும், முடங்கிக் கிடப்பவர்களும் கைகழுவும் பிலாத்துக்களே.

நண்பர்களே! நீங்கள் கை கழுவும் குணத்திலிருந்து விலகும்படி கர்த்தர் சொல்லுகிறார். நீங்கள் கைகழுவுகிறவர்களாக இருக்கக் கூடாது. கை கொடுக்கிறவர்களாக இருக்க வேண்டும். அந்நியோந்நிய ஐக்கியத்திற்கு அடையாளமாக ஆக்கிலாவும், பிரிஸ்கில்லாவும் தங்கள் கழுத்தைக் கொடுத்தார்கள். தங்கள் வலது கரத்தைக் கொடுத்தார்கள். கழுத்தைக் கொடுப்பது என்பது பிரயாசத்தினால் உதவி செய்வதைக் குறிக்கிறது.

கரத்தைக் கொடுப்பது என்பது காணிக்கையாலே உதவி செய்வது என்பதைக் குறிக்கிறது. இப்படியாக நீங்கள் செய்யுங்கள். இயேசு கிறிஸ்துவின் பிரசன்னம் உங்களோடிருக்கும்.

கை கழுவும் பிலாத்து மத்தியிலே யோவானுக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று என்றால் என் மனதிலே பெரிய மகிழ்ச்சி உண்டாகிறது. கடந்த 20 வருட ஊழியங்களிலே கை கழுவும், கை நழுவும் பலரை நான் பார்த்திருக்கிறேன். அப்படிப்பட்ட வேளையிலே நாம் எதிர்பார்த்த மனிதர்கள் நமக்கு உதவி செய்யாமல், நாம் நினைத்திருந்த சகோதரர்கள் நம் பாரத்தை பகிர்ந்து கொள்ளாமல் விலகி செல்லுகிறபோது அல்லது ஒதுங்கிச் செல்லுகிறபோது நாமே தனியாக பாரத்தை சுமக்கும்படி தனியே விட்டு விடும் போது யோவான் ஸ்நானகனுடைய வாழ்க்கை என்னை உற்சாகப்படுத்தியிருக்கிறது.

நண்பர்களே! உங்களைச் சூழ இருப்பவர்கள் உங்களைக் கைகழுவி விட்டார்களோ! சத்துருவினிடத்தில் உங்களை ஒப்புக் கொடுத்துவிட்டு உங்கள் துயரங்களை வேடிக்கைப் பார்க்கிறார்களோ! கலங்காதிருங்கள். யோவான் ஸ்நானகன் அருணோதயமாக எழும்பினான். வனாந்தரத்தில் தனிமையாக ஜெபித்த அவனுக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று. உங்களைத் தேற்றக்கூடிய ஒரே நிவாரணம் கர்த்தருடைய வார்த்தையில்தான் இருக்கிறது. கர்த்தருடைய வாக்குத்தத்தங்களே உங்களைத் தேற்றும், ஆற்றும், உற்சாகப்படுத்தும். தனிமையிலும் இனிமை காண உங்களுக்கு உதவிச் செய்யும். தனித்திருந்து போராடி ஜெயம் எடுக்க கர்த்தருடைய வார்த்தை உங்களுக்குப் பெலன் தரும். சிங்கங்கள் வேட்டையாட கூட்டமாகச் செல்லாது. தனித்தே செல்லும். யூதா கோத்திரத்து சிங்கம் உங்களோடிருக்கிறார். சீறிப்பாய்கிற இளம் சிங்கங்களாக நீங்கள் எழும்புங்கள். உன்னதத்திலே வாசம் பண்ணக்கூடிய

கழுகுகள் தனிமையில்தான் பறந்து கொண்டிருக்கும். ஜெபிக்கிற மனிதன் தன்னைச் சூழ இருக்கிறவர்கள் உதவி செய்யவில்லையே என்று சோர்ந்து போக மாட்டான். கர்த்தருக்குக் காத்திருப்பவர்கள் புது பெலன் அடைந்து கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள். அவர்கள் ஓடினாலும் இளைப்படைய மாட்டார்கள். நடந்தாலும் சோர்ந்து போக மாட்டார்கள்.

## 3. ஏரோது :

அருணோதயமாய் எழும்பின யோவான் ஸ்நானகன் கர்த்தருடைய வார்த்தையைப் பெற்றுக் கொண்ட காலம் இருண்ட காலம் என்றறிந்தோம். அதற்கு மூன்றாவது காரணம் ஏரோது அரசனாவார். ஏரோது மன்னன் காற்பங்கு தேசமாகிய கலிலேயாவுக்கு தேசாதிபதியாய் இருந்த காலத்தில்தான் யோவானுக்கு கர்த்தருடைய வார்த்தை கிடைத்தது. ஏரோது என்றால் மாம்ச இச்சை உள்ளவன் என்று அர்த்தம். இந்த ஏரோதுடைய குடும்ப பின்னணியத்தை நாம் சற்று ஆராய்ந்துப் பார்த்தோமானால் நம் புருவங்கள் உயரும். நம்முடைய ஆவியிலே வைராக்கியம் பெருகும். இப்படிப்பட்ட ஏரோதுகளாலே நாம் சோர்ந்து போக வேண்டிய அவசியம் இல்லை.

பெரிய ஏரோதுதான் இயேசுவைக் கொலை செய்யும்படி சட்டம் போட்டவன் (மத் 2-ஆம் அதிகாரம்) இந்த ஏரோதுக்கு இரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள். ஒருவன் பெயர் ஏரோது அந்திப்பா, மற்றொருவன் பெயர் ஏரோது பிலிப்பு. முத்தவனாகிய ஏரோது அந்திப்பா அரபு நாட்டின் மன்னன் அரீடாஸின் மகளை முதலாவது திருமணம் செய்திருந்தான். அரபு நாட்டின் மன்னனுடைய மகளை திருமணம் செய்தது பொருளாசையின் நிமித்தமே. பிற்பாடு அவன் அதிலே திருப்திபடாமல் தன் உடன் பிறப்பான சகோதரன் பிலிப்புவின் மனைவியையும் தனக்காக திருடிக் கொண்டான். மாம்ச இச்சையுள்ள மனிதர்களால் தேசத்தை இருள் மூடும். இவனே யோவான் ஸ்நானகனை சிறையிலே தள்ளி தலையைக் கொய்தவன். இந்த ஏரோதே இயேசுவையும் விசாரித்தவன். இந்த ஏரோதைக் குறித்து நரி என்று நம் ஆண்டவர் சொன்னார். ஏரோது உம்மைக் கொலை செய்யத் தேடுகிறான் என்று இயேசு கிறிஸ்துவுக்கு பரிசேயர்கள் சொன்னபோது அதற்காக அவர் பயப்படவில்லை. "நான் இன்றைக்கும், நாளைக்கும் பிசாசுகளைத் துரத்தி வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்கி மூன்றாம் நாளில் நிறைவடைவேன். இன்றைக்கும், நாளைக்கும், மறுநாளைக்கும் நான் நடமாட வேண்டும். எருசலேமுக்குப் புறம்பே ஒரு தீர்க்கதரிசியும் மடிந்து போவதில்லையென்று நான் சொன்னதாக நீங்கள் போய் அந்த நரிக்குச் சொல்லுங்கள்" என்றார். (லூக் 13 : 32, 33)

நரி தந்திரமுள்ளது. சாத்தானும் தந்திரமுள்ளவனே. ஏரோதும் தந்திரமுள்ளவனே. இன்று நம்மை சூழ உள்ள சிலர் தந்திரக்காரர்களும், மந்திரக்காரர்களுமாய் இருக்கிறார்கள். நண்பர்களே! இப்படிப்பட்டவர்களால் உங்கள் வாழ்க்கைக்கும், உங்கள் குடும்பத்துக்கும், உங்கள் ஊழியத்துக்கும் விரோதமாய் பல தீமைகள் காணப்பட்டாலும் யோவான் ஸ்நானகன் கர்த்தருடைய வார்த்தையைப் பிடித்து எழும்பினது போல் நீங்களும் எழும்புங்கள். ஏரோதின் நரித் தந்திரங்களால் உங்கள் ஊழியத்திற்கு தடை செய்யவும் முடியாது. உங்கள் குடும்பத்திற்கு இடையூறு செய்யவும் முடியாது. உலகத்தை ஜெயித்த கிறிஸ்து நம்மோடிருக்கிறார். தேவ ஞானத்தினால் வழி நடத்துகிற தேவன் நம்மோடிருக்கிறார். ஏரோது மாம்ச இச்சைகளை, பொருளாசையைத் தேடினான் என்றால் யோவான் கர்த்தருடைய வார்த்தைகளைத் தேடி தனிமையாக வனாந்தரத்திற்குப் போனான். இதையே இன்று நாமும் செய்வோமாக. கர்த்தருடைய வார்த்தை ஏரோதின் நரித் தந்திரங்களையும், ஏரோதின் மாம்ச இச்சைகளையும் ஜெயிக்க போதுமானதாக உள்ளது.

## 4. பிலிப்பு :

அருணோதயமாக எழும்பின யோவான் ஸ்நானகன் கர்த்தருடைய வார்த்தையைப் பெற்றுக் கொண்ட காலத்திலே தன்னைச் சூழ இருந்த மனிதர்களில் நான்காவதானவன் பிலிப்பு என்பவனாகும். இவன் காற்பங்கு தேசமாகிய இதுமேயாவுக்கும் திராகொனித்துக்கும் தேசாதிபதியாக இருந்தவன். (லூக் 3 : 1) இவனுடைய மனைவியைத் தான் முந்தி நாம் பார்த்த ஏரோது எடுத்துக் கொண்டான். பிலிப்புவின் வாழ்விலிருந்து நாம் படிக்கும் பாடம் என்னவென்றால் குடும்ப வாழ்வில் சீர்குலைவு என்பதாகும். மனைவியை இழந்த நிலையிலே பிலிப்பு எப்படிப்பட்ட வாழ்வு வாழ்ந்திருப்பான் என்பதை சற்று நீங்களே நிதானித்துப் பாருங்கள். குடும்பமாகிய பலிபீடம் தகர்க்கப்பட்டவன். குடும்ப வாழ்வின் சீர்குலைவுகள் தேசத்தை இருளால் மூடிவிடும். இன்று உலகின் பல பாகங்களிலும் சீர்குலைந்த குடும்பங்களைப் பார்க்கிறோம். பிலிப்புவால் தலைநிமிர்ந்து நடக்க முடியாது. தலை குனிவோடு தான் அவன் நடந்திருப்பான். தன் குடும்ப வாழ்க்கையில் உண்டான தோல்வி, அதனிமித்தம் பொது வாழ்க்கையில் உண்டான தலைகுனிவு அவன் வாழ்க்கையில் சந்தோஷத்தையும், சமாதானத்தையும் கெடுத்தது. தேசத்தை இருள் மூடியது. ஆனால் கட்டுப்பாடும் பரிசுத்தமும் உள்ள யோவானால் தேசத்தில் வெளிச்சம் வீசியது.

"தகப்பன் தேசாந்திரி"
"தாய் ஊர் சுற்றுபவள்"
"பிள்ளை அடங்காப்பிடாரி"

இப்படிப்பட்ட குடும்பங்கள் இன்று ஏராளம், ஏராளம். நம்மைச் சூழ உள்ள மக்கள் மத்தியிலும் ஊழியத்திலும், சில வேளைகளில் சபைகளிலும் சீர் குலைந்த குடும்பங்களை நாம் பார்க்கிறோம். இப்படிப்பட்டவர்களுக்கு நிவாரணம் தேவனுடைய வார்த்தையே. தேவனுடைய வார்த்தைகளை நோக்கிப் பார்ப்பவர்களுக்கு தலைகுனிவு ஒருநாளும் வரப்போவது இல்லை. இயேசு கிறிஸ்து தலை சாய்த்தது எதற்காக? நம்முடைய தலையை உயர்த்துவதற்காக. இயேசு கிறிஸ்து குற்றவாளிக் கூண்டில் நின்றது எதற்காக? நம்மை நீதிமானுடைய வரிசையில் நிறுத்துவதற்காக. இயேசு கிறிஸ்து தனது கரங்களில் ஆணிகள் அடிக்க ஒப்புக் கொடுத்தது எதற்காக? நம்முடைய கரங்களை விடுதலை செய்வதற்காக. இயேசு கிறிஸ்து கல்லறையில் வைக்கப்பட்டது எதற்காக? நம்மை தேவனுடைய சிங்காசனத்தில் அமர வைப்பதற்காக. எனவே ஆவிக்குரிய வாழ்க்கை வாழ்பவனே யோக்கியனாக தலைநிமிர்ந்த வாழ்க்கை வாழ முடியும். பாவம் எந்த ஜனத்திற்கும் இகழ்ச்சிதான். நீதியோ ஜனத்தை உயர்த்தும்.

நண்பர்களே! உங்கள் குடும்ப வாழ்க்கையை சீர்குலைக்க சத்துரு பயங்கரமான வஞ்சகத்தைப் போடுகிறானா? இன்றே இந்த குடும்ப வாழ்க்கை உண்மையோடும், சமாதானத்தோடும், பரிசுத்தத்தோடும், ஒருமனதோடும் கட்டி எழுப்புவதற்கு கர்த்தருடைய வார்த்தைகளுக்கு இடம் கொடுங்கள். யோவான் ஸ்நானகனுக்கு மனைவியோ, பிள்ளைகளோ கிடையாது. ஆனாலும் குடும்ப வாழ்வில் சீர்குலைந்த மனிதர்கள் மத்தியிலே தைரியங்கொண்டு தலை நிமிர்ந்து நின்று கர்த்தருடைய வார்த்தையை அறிவித்தான். கர்த்தருடைய வார்த்தையே உங்களை ஜெயிக்க வைக்கும். எனவே வேதமும் கையுமாக ஜெபமும், உபவாசமுமாக தனிமையில் சில நாள் செலவழித்துப் பாருங்கள். உங்கள் குடும்ப வாழ்விலே வருகிற சீர்குலைவுகளை கர்த்தர் மாற்றுவார். தேவனுக்காய் எழும்பிப் பிரகாசிக்க வைப்பார்.

### 5. லிசானியா :

அருணோதயமாய் எழும்பின யோவான் ஸ்நானகன் அற்புத சாட்சியாய் ஜீவிக்கிற காலத்திலே, சூழ்நிலைகள் அனுகூலமாக இல்லை. லிசானியா என்ற மனிதன் காற்பங்கு தேசமாகிய அபிலேனேக்கு என்ற இடத்திற்கு அதிபதியாக இருந்தவன். லிசானியா என்றால் எதிலும் சேராதவன் என்று அர்த்தம். ஆவிக்குரிய உலகத்திலே, ஊழியத்திலே

எந்த கொள்கையிலும் இல்லாதவர்களை நாம் சில வேளைகளில் பார்க்கிறோம். இப்படிப்பட்டவர்கள் லிசானியா போன்றவர்களே. எதிலும் சேராதவர்களை களி மண்ணுக்கு ஒப்பிடலாம். எந்த உருவத்திற்கும் அது ரெடிதான், அது ஆயத்தம்தான். ஆனால் குறிப்பிட்ட உருவத்தில் அது தொடர்ந்து இருக்கப் போவதும் இல்லை. களிமண் காய்ந்த பிற்பாடு உடைந்து போவது போல எதிலேயும் சேராத லிசானியர்கள் எந்த ஒரு குணத்திலும் நிரந்தரமாக இருக்கப் போவதில்லை. உபதேசத்திலே பிடிப்பில்லை. சத்தியத்திலே வாஞ்சை இல்லை. பரலோகத்தின் மேல் வாஞ்சை இல்லை. இயேசு கிறிஸ்துவின் வருகையைக் குறித்து எதிர்பார்ப்பு இல்லை. எதிலும் சேராத அநேகம் பேரை நாம் இன்று பார்க்கிறோம்.

சமீபத்திலே நான் ஒருவரை சந்தித்தேன். அவர் என்னுடைய சபையிலே ஞானஸ்நானத்திற்காய் கரம் உயர்த்தி முன்னால் வந்தார். அவரை விசாரித்த போது அவர் சொன்னார். நான் இப்போ எடுக்கும் ஞானஸ்நானம் பன்னிரண்டாவது முறை என்றார். அதிர்ந்து போனேன். ஏன் பதினொரு முறை ஞானஸ்நானம் எடுத்து, இப்போது பன்னிரண்டாவது முறையாக எடுக்கிறீர்கள் என்று நான் கேட்டபோது அவர் சொன்னார். யெகோவா சாட்சிக்காரர்கள் தங்கள் உபதேசத்தை அழுத்திச் சொன்னபோது அதிலும் ஞானஸ்நானம் எடுத்துக் கொண்டேன். இலங்கை பெந்தேகோஸ்தேக்காரர்கள் தங்கள் சபையே சரியானது என்று சொன்ன போது அதிலும் ஞானஸ்நானம் எடுத்துக் கொண்டேன். ஏழாம் நாள் ஆசாரிப்புக்காரர்கள் 10 நாள் கூட்டம் நடத்தி வேதாகமம் பரிசாக தருகிறார்கள் என்று கேட்டபோது அதிலும் ஞானஸ்நானம் எடுத்துக் கொண்டேன். இன்னும் அரிசிக்காக, பணத்துக்காக, புது புத்தாடைக்காக, திருமணத்திற்காக என்ற பல சூழ்நிலைகளிலும் நான் ஞானஸ்நானம் எடுத்துக் கொண்டேன். இப்போது வயது 80 ஆகிவிட்டது. இயேசுவின் ராஜ்யத்திற்கு ஆயத்தமாக வேண்டுமென்று நினைக்கின்றேன். இப்போது உங்கள் சபையின் உபதேசங்கள் ஆராதனையும் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. ஆகவே கடைசியாக ஒருமுறை ஞானஸ்நானம் எடுத்துக் கொள்கிறேன் என்று சொன்னார். இப்படிப்பட்டவர்களே எதிலும் சேராதவர்கள். இன்னும் சில ஊழியர்களை விசாரித்தால் நீங்கள் எந்த ஐக்கியத்தில் உள்ளீர்கள் என்று கேட்டால் நாங்கள் சபைப்பாகுபாடு இல்லாமல் யாவரோடும் ஐக்கியம் கொண்டுள்ளோம் என்பார்கள். சபை என்பது ஆவிக்குரிய குடும்பம். எனவே நமக்கென ஒரு ஆவிக்குரிய குடும்ப ஐக்கியம் வேண்டும். பாகுபாடு இல்லாமல் எல்லோரையும் நேசித்து ஊழியம் செய்ய வேண்டும். ஆனால் கர்த்தருடைய பந்திக்கென நமக்கு ஒரு ஸ்தல சபையின் ஐக்கியம் வேண்டும்.

இந்த அபிலேனேக்கு என்ற பகுதியில்தான் லீபனோன் மலையும், எர்மோன் மலையும் இருந்தது. யோர்தான் நதி இங்கிருந்துதான் புறப்பட்டது. செழிப்பான தேசமாக இந்த அபிலேனேக்கு பட்டணம் இருந்தது. இவ்வளவு செழிப்பாய் இருந்த லிசானியா எதிலும் சேராதவனாக இருந்தான்.

**''வாணிபமே கோயில்**
**வாடிக்கையாளர்களே தெய்வம்"**

என்ற கொள்கை கொண்டவன் இந்த லிசானியா, சோறு கண்ட இடம் சொர்க்கம் என்று சொல்லுவார்களே. அப்படிப்பட்ட இடத்திலே சங்கமம் ஆனவன் இந்த லிசானியா.

ஆனால் யோவான் ஸ்நானகன் முற்றிலும் வித்தியாசமானவன். இயேசுவே வழி, இயேசுவே சத்தியம். இயேசுவே ஜீவன். அவரே பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுப்பவர். இவருக்கு செவி கொடுங்கள் என்று திட்டவட்டமாய்ச் சொல்லக்கூடிய, உபதேசத்தில் பிடிப்புள்ளவன். நமது இடங்களில் கூட்டம் கூடுவதற்காய், காணிக்கை பெருவதற்காய் உபதேசங்களை தளர்த்திவிடக்கூடாது. எதிலும் சேராத லிசானியாவால் தேசத்திலே இருள் மூடியது. கர்த்தருடைய வார்த்தையில் பிடிப்புள்ள யோவானால் அருணோதயத்தின் வெளிச்சம் வீசியது. உங்களால் தேசத்தில் என்ன நடக்கிறது?

## 6. அன்னா :

யோவான் ஸ்நானகன் கர்த்தருடைய வார்த்தையை பெற்றுக் கொண்ட காலத்தில் ஆறாவதாக வாழ்ந்தவன் அன்னா என்பவன். இந்த அன்னா எனபவன் காய்பா என்ற பிரதான ஆசாரியனுக்கு மாமனாக இருந்தான். இவன் முந்தின நாட்களிலே பிரதான ஆசாரியனாயிருந்தவன். இந்த அன்னாவை ஒரு வியாபாரி என்று சொல்லலாம்.

வியாபாரியின் பிரதானமான குறிக்கோள் பொருளீட்டுதலாகும். அதற்காக கள்ளத்தராசை உபயோகிக்கவோ, பொய்களை ஊதிவிடவோ அஞ்சமாட்டான். வியாபாரியின் ஒரே நோக்கம் பணம் பெருக்குவதே. இந்த அன்னா என்பவன் கி.பி. 6 ஆம் வருடம் முதல் கி.பி. 15ஆம் ஆண்டு வரை பிரதான ஆசாரியனாயிருந்தவன். இவன் பிரதான ஆசாரியன் பதவியிலிருந்து ரோம அரசரால் தள்ளப்பட்டான்.

அதற்குப்பிறகும் இவன் தேவாலயத்தில் அதிகாரம் உடையவனாய்க் காணப்பட்டான். தேவாலயத்தின் பலிக்கு வேண்டியவைகள் இவன்

கைவசத்திலும் இவன் பிள்ளைகளுடைய கைவசத்திலும் இருந்ததினால் இவர்கள் அவைகளில் வியாபாரம் செய்து அதிக ஆஸ்திக்காரர் ஆனார்கள். தேவாலயத்திலிருந்த காசுக்காரர் பலகைகளும் (money exchangers) புறா விற்கிறவர்களின் ஆசனங்களும் இவன் பொறுப்பில் இருந்தது. இயேசு தேவாலயத்திலிருந்து வியாபாரிகளைத் துரத்தினது இவனுக்கு விசனத்தை உண்டாக்கியது. (CLATON Commentary - page - 56)

அன்னாவின் தீமையால்தான் தேவாலயம் வியாபார வீடாய் மாறியது (யோவான் 2 : 16) என்று இயேசு கிறிஸ்து முதல்முறை கடிந்து கொண்டார். மறுபடியும் என் பிதாவின் வீட்டை கள்ளர் குகையாக்காதிருங்கள் என்று இயேசு இரண்டாம் முறையாக கடிந்து கொண்டார். (மத் 21 : 13) இது அன்னாவுக்கு அதிக எரிச்சலூட்டியது. எனவே இயேசுவுக்கு விரோதியாய் செயல்பட்டான்.

இயேசுவைப் பிடித்தவர்கள் முதலாவது இந்த அன்னாவினிடத்தில்தான் விசாரிக்கக் கொண்டு போனார்கள். இயேசுவைப் பிடிக்கும்படி ஆலோசனை சொன்னவன் இந்த அன்னாவே (யோவான் 18 : 14, 18 : 24) பரிசுத்த தீர்க்கதரிசிகளான யோவான் ஸ்நானகனுக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் இவன் விரோதியே.

இன்றும் உண்மையான விசுவாசிகளுக்கும், உத்தம ஊழியர்களுக்கும் பணப்பிரியம் கொண்ட, வியாபார நோக்கம் கொண்டோர் விரோதிகளே. பணப்பிரியம், பொருளீட்டம் கொண்ட அன்னாவால் தேசத்தில் இருள் மூடியது. ஆனால் பணப்பிரியத்தையும், செல்வப் பிரியத்தையும், முற்றிலும் வெறுத்துவிட்ட யோவானால் தேசத்தில் வெளிச்சம் விசியது. யோவான் அருணோதயமாய் எழும்பினான். ஊழியங்களில் வியாபார நோக்கம் கொஞ்சமும் இருக்கக்கூடாது.

## 7. காய்பா :

யோவான் ஸ்நானகன் அருணோதயமாய் எழும்பிய காலத்தில் சபையிலே காய்பா என்பவன் பிரதான ஆசாரியனாக இருந்தான். தேவாலயத்து பணிவிடைகளில் தீவிரமாய் பற்று கொண்ட இந்த காய்பா மேசியாவை குறித்த விசுவாசமில்லாமல் இயேசுகிறிஸ்துவுக்கு எதிராக செயல்பட்டவன். இவன் பிரதான ஆசாரியனாகிய "அன்னா"வின் மருமகன். அன்னாவைத் தொடர்ந்து பிரதான ஆசாரியனாக வந்தவன். (மத்தேயு 26 : 59) காய்பாவின் குணம் என்ன? இவன் பொய்சாட்சி சொல்லுகிறவன். இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறைவதற்காக எத்தனையோ சாட்சியங்களை எழுப்பினான். ஒன்றும் ஒவ்வவில்லை. கடைசியாக இரண்டு பொய் சாட்சிகளை இவன் எழுப்பினவன்.

இன்றைக்கும் உங்கள் வாழ்க்கைக்கு விரோதமாகவும், உங்களுடைய ஊழியத்துக்கு விரோதமாகவும் உங்கள் சாட்சியைக் கெடுத்து விடும்படி பொய்சாட்சி சொல்லும் பொய்யர்கள் உங்களை சூழ எழும்பலாம். மொட்டைத் தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சு போடலாம். பொல்லாதவைகளை யோசித்து பிணைக்கின்ற பொய்காரர்கள் பலர் உங்களுக்கு விரோதமாக எழும்பலாம். பயப்படாதே கர்த்தருடைய பிள்ளையே! பொய்களைக் குறித்து வேதம் பதர் என்று சொல்லுகிறது. பதருக்குள் ஜீவன் இல்லாதபடியால் அவைகள் முளைத்து பலன் தரப்போவது இல்லை. உங்களைக் குறித்து ஆயிரக்கணக்கான விமர்சனங்கள் பொய்யாய் சொன்னால் நீங்கள் பாக்கியவான் களாயிருப்பீர்கள். அவைகள் நிச்சயமாய் உங்களை சேதப்படுத்தாது.

இந்த காய்பா இயேசுவைப் பிடிப்பதற்காக முப்பது வெள்ளிக் காசு யூதாஸ்க்கு கொடுத்தான். அதாவது லஞ்சம் கொடுத்தான். லஞ்ச லாவண்யம் என்பது இன்று தமிழகத்திலே அல்லது வட இந்தியாவிலே தோன்றியது என்று நினைக்காதீர்கள். லஞ்சம் என்கிறதான பரிதானமாகிய இந்த பாவம் சாலொமோன் நாட்களிலே இருந்தது. அது முதலாம் நூற்றாண்டில் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையை பாதித்தது. இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பிற்பாடு கூட அவருடைய சீஷர்கள் அவரைத் தூக்கிக் கொண்டு போனார்கள் என்று பொய் சொல்வதற்கு சிலருக்கு லஞ்சம் கொடுக்கப்பட்டது. லஞ்சம் என்கிறதான மரம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே வேர் கொண்டது. அது இன்றும் கிளைகள் விட்டு ஆலமரமாய் படர்ந்து கொண்டிருக்கிறது. நண்பர்களே! உங்களுக்கு விரோதமாக கைக்கூலி கொடுத்து யாராவது உங்கள் வாழ்க்கைக்கு விரோதமாக செயல்பட்டால் பயப்படாதிருங்கள். யோவான் ஸ்நானகன் லஞ்சம் கொடுக்கிற மக்கள் மத்தியிலே கர்த்தருடைய வார்த்தையை பெற்றுக் கொள்கிற மனுஷனாக இருந்தபடியால் அவன் அருணோதயமாக எழும்பினான். அநேகர் அவன் வெளிச்சத்திலே களிகூர மனதாயிருந்தார்கள். இந்த காய்பா வசனம் தெரிந்திருந்தும் வசனத்துக்கு எதிராக ஜீவிக்கிற மனுஷன். இவன் பிரதான ஆசாரியனாயிருந்து தன்னுடைய ஆசாரிய வஸ்திரத்தைக் கிழித்தவன். (மத்தேயு 26 : 65) லேவியராகமம் 10 : 6ம் வசனத்தின்படி ஆசாரியன் தன் வஸ்திரத்தைக் கிழிக்கக்கூடாது. ஆசாரியன் தன் வஸ்திரத்தைக் கிழிக்கும் போது முழு சபையின் மேலும் தேவனுடைய கடுங்கோபம் உண்டாகும். இதை சரியாக அறிந்து வைத்திருந்த காய்பா துணிகரமாக தன் வஸ்திரத்தைக் கிழிக்கிறான். இரட்சிப்பின் வஸ்திரத்தை இழக்கிறான். பரிசுத்த வஸ்திரத்தை இழக்கிறான். எனவே இவன் ஒரு துணிகரக்காரன்.

இன்றைக்கும் மேன்மையான, மகிமையான, பரிசுத்தமான இரட்சிப்பை அற்பமாக அசட்டையாக எண்ணி அனுதின வாழ்விலே வருகிற சிறிய சிற்றின்பங்களுக்காக இரட்சிப்பை மறுதலிக்கிற கூட்டங்கள் ஏராளம் உண்டு. இப்படிப்பட்டவர்கள் காய்பாவை போன்றவர்களே. ஆனால் இந்த காய்பாவாலே யோவான் ஸ்நானகனுடைய எழுப்புதலை தடுக்க முடியவில்லை. நண்பர்களே! இதை வாசித்துக் கொண்டிருக்கும் போது உங்கள் உள்ளத்திலே விசுவாசம் வீறுகொண்டு எழும்பட்டும். எதிரிகளைப் பார்த்து சோர்ந்து போகாதிருங்கள். எத்தர்களைக் காலின் கீழ் போட்டு மிதித்து, அதற்கு மேலாக நடந்து உலகத்தை ஜெயிக்கிற யோவான் ஸ்நானகனாக எழும்புங்கள்.

பொய்சாட்சி, லஞ்சம், துணிகரம் ஆகியவற்றின் மொத்த உருவமே காய்பா. இவனால் தேசத்தில் இருள் மூடியது. ஆனால் யோவானால் வசனத்தின் வெளிச்சம் தேசத்தில் வீசியது. கடந்த ஏழு பொல்லாத மனிதர்களால் யோவானின் எதிர்காலத்தையும், உயர்வையும் தடுக்க முடியவில்லை. உங்களையும் ஒரு மனிதரும் கெடுக்க முடியாது என்று விசுவாசியுங்கள். யோவான் ஸ்நானகன் கர்த்தருடைய வார்த்தையின் வெளிச்சம் பெற்று அருணோதயமாய் எழும்பினது போல நீங்களும் எழும்புங்கள்.

1. **தீபேரியு ராயன் - சந்தேகம் உள்ளவன்**
2. **பொந்தியு பிலாத்து - கை கழுவுகிறவன்**
3. **ஏரோது - மாம்ச இச்சை உள்ளவன்**
4. பிலிப்பு - **குடும்ப வாழ்வில் சீர்குலைவு உள்ளவன்**
5. **லிசானியா - எதிலும் சேராதவன்**
6. **அன்னா - வியாபாரி**
7. **காய்பா - பொய்சாட்சி, லஞ்சம், துணிகரக்காரன்**

ஆகியோர்களால் தேசத்தில் இருள் சூழ்ந்தது. ஆனால் வனாந்திரத்தில், தனிமையில் ஜெபத்தில் தரித்திருந்த யோவானுக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று. வசனத்தின் வெளிச்சம் உள்ள அருணோதயமாக, உதயசூரியனாக யோவான் எழும்பினது போல் நீங்களும் எழும்ப என்ன செய்ய வேண்டும் என்பதற்கு அடுத்த அத்தியாயத்திற்குள் செல்லுங்கள்...

# 2

# ஆசீர்வாதமான யோவான் ஸ்நானகன்

**"உத்தமமான ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும்படியாக" (லூக். 1 : 17)**

தேவ மனிதனாகிய யோவான் ஸ்நானகன் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்காக ஆசீர்வாதமான பாத்திரமாக இருந்தான். யோவானின் ஊழியம் நம் ஆண்டவருக்கு ஆசீர்வாதம் மட்டுமல்லாமல், அன்று வாழ்ந்த ஜனங்களுக்கும் ஆசீர்வாதமாக இருந்தது. யோவானுடைய ஊழியத்தின் மூலம் பிதாக்களுடைய இருதயங்களைப் பிள்ளைகளிடத்திற்கும், கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களுடைய ஞானத்திற்கும் திருப்பி, உத்தமமான ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தினான். இவ்விதமான ஊழியத்தைச் செய்த யோவானை பரிசுத்த ஆவியானவர் ஆசிர்வாதமான யோவான் என்று அழைக்கிறார் என்பதில் எவ்வித தவறும் இல்லை.

முதல் மனிதனாகிய ஆதாமுடைய மீறுதல் நிமித்தமும், பாவத்தின் நிமித்தமும் முழு உலகத்திற்கு சாபம் வந்தது. (ஆதி 3 : 17) இன்றைக்கும் சிலருடைய வாழ்க்கையின் பாவங்களால் அவர்களுடைய பட்டணத்திற்கும், அவர்களுடைய தேசத்திற்கும், இன்னும் பல குடும்பங்களுக்கும் அவர்கள் சாபமாகக் காணப்படுவார்கள். ஆனால் அதே சமயத்திலே நம்முடைய பரிசுத்தத்தின் நிமித்தமும், ஆவிக்குரிய ஜீவியத்தின் நிமித்தமும் நாம் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாகவும் இருக்க முடியும்.

யாக்கோபின் நிமித்தம் அவனுடைய மாமனார் ஆசீர்வாதமாக இருந்ததாக ஆதி 30 : 2ல் பார்க்கிறோம். யோசேப்பினிமித்தம் எகிப்தியனாகிய போத்திபாரின் வீடு ஆசீர்வதிக்கப்பட்டது என்பதை ஆதி 39 : 5ல் பார்க்கிறோம். இந்த யாக்கோபு, யோசேப்பு போன்றோர் தாங்கள் வாழ்ந்த நாட்களிலே தன்னைச் சூழ இருந்தவர்களுக்கு ஆசீர்வாதமாக ஜிவித்த தேவ மனிதர்கள். அதே வேளையில் தன் ஊழியக்காரருக்கு ஆசீர்வாதமான சபையாரையும் நாம் பார்க்க முடியும். தாவீதின் நாட்களிலே I நாளா 14 : 2ஆம் வசனத்திலே "கர்த்தர் தன்னை இஸ்ரவேலின் மேல் ராஜாவாகத் திடப்படுத்தி, இஸ்ரவேல் என்னும், தம்முடைய ஜனத்தினிமித்தம் தன்னுடைய ராஜ்யத்தை மிகவும் உயர்த்தினார் என்று தாவீது அறிந்து கொண்டான்" என்று போட்டிருக்கிறது. இவ்விதமாக தன் ஊழியக்காரருக்கு ஆசீர்வாதமான சபையாரையும் நாம் பார்க்கின்றோம்.

என்னுடைய ஊழியத்தைப் பொறுத்த மட்டிலே இவ்விதமான சாட்சியை நான் சொல்ல முடியும். எங்களுடைய சபையார் ஜெபிக்கிறவர்களாகவும், ஊழியத்தை தாங்குகிறவர்களாகவும், ஊழியத்தை நேசிக்கிறவர்களாகவும் இருக்கிறபடியினாலே ஒவ்வொரு முறையும் நான் தேவ சமூகத்திற்குச் செல்லும் போதெல்லாம் தேவனுடைய அளவில்லாத பிரசன்னமும், அபிஷேகமும் என்மேல் இறங்கி முதலாவது என்னை ஆசீர்வதிக்கிறது. உடனே நான் அதை உணறுகிறேன். என்னுடைய விசுவாசிகளினிமித்தமே தேவன் என்னை ஆசீர்வதிக்கிறார். அன்பான நண்பர்களே! இனிய விசுவாசிகளே! நீங்கள் பிறருக்கு ஆசீர்வாதமாக இருங்கள். உங்களுடைய வாழ்க்கை மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கட்டும். யோவான் ஸ்நானகன் ஒரு ஆசீர்வாதமான பாத்திரம் என்பதை கீழே 5 குறிப்புகள் மூலமாக நாம் இப்போது தெரிந்து கொள்ளப்போகிறோம்.

## 1. உத்தம ஜனத்தை எழுப்பினான் : (Enthrone Ministry)

யோவான் ஸ்நானகனுடைய ஊழியத்தின் மூலம் உத்தமமான ஜனம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தப்பட்டார்கள். உத்தம ஜனம் என்பதை upright people என்று வேதம் சொல்லுகிறது. (லூக் 1 : 17) உத்தம ஜனம் என்பதை விளங்கிக் கொள்வதற்கு வேதாகமத்திலே சொல்லப்பட்ட சில ஒத்து வாக்கியங்களையும், இணை சம்பவங்களையும் சற்று நாம் கவனிக்க வேண்டும்.

தேவ மனிதனாகிய தாவீதின் இருதயம் உத்தமமாக இருந்தது என்றும், ஆனால் அவன் மகனாகிய சாலமோனின் இருதயம் உத்தமமாக இல்லை என்றும் நம் ஆண்டவர் குறைபட்டுக் கொண்டார். (I இராஜா 11 : 4) தேவன் தம்முடைய பிள்ளைகளை அபிஷேகிக்கும் முன்னும், தம்முடைய கனமான ஊழியத்திலே நியமிக்கும் முன்னும் சரீர வளர்ச்சியையோ, முகத்தின் பொலிவையோ, தோளின் உயரத்தையோ பார்ப்பது கிடையாது. அதற்குப் பதிலாக அழைக்கப்பட்ட மனிதனின் இதயத்தையே தேவன் பார்க்கிறார். மனிதன் பார்க்கிறபடி நான் பார்ப்பது இல்லை. மனிதன் முகத்தைப் பார்க்கிறான். கர்த்தரோ இதயத்தைப் பார்க்கிறார் என்று I சாமு 16 : 7-ல் நம் ஆண்டவர் சொன்னார்.

தாவீதின் இருதயம் தேவனுக்கு முன்பாக உத்தமமாக இருந்தது. ஆனால் அதே நேரத்திலே சாலமோனின் இருதயமோ கர்த்தருக்கு முன்பாக உத்தமமாக இல்லை. இதிலிருந்து நாம் அறிகிற உண்மை என்னவென்றால் உத்தமம் என்ற வார்த்தைக்கு மேல் நோக்கிய இருதயம், அல்லது உன்னதத்தை நோக்கிய இருதயம் அல்லது விண்ணை நோக்கிய இருதயம் என்று அறிகிறோம். (up Right Heart)

சாலமோனின் இருதயமோ தாவீதின் இருதயத்தைப் போல் இராமல் உத்தமத்தை விட்டு விலகி விட்டது என்று கர்த்தர் சொன்னார்.

சாலொமோனின் இருதயம் எவ்விதமாக இருந்தது என்பதற்கு மூன்று வசனங்களை நாம் இப்போது பார்க்கப் போகிறோம்.

1. சாலொமோனின் இதயம் சாய்ந்தது (I இராஜா 11 : 2)

2. சாலொமோனின் இதயம் வழுவினது (I இராஜா 11 : 3)

3. சாலொமோனின் இதயம் திரும்பியது (I இராஜா 11 : 9)

எனவே உத்தமம் என்பது மதியம் 12 மணிக்கு கடிகாரத்தின் மூன்று முட்களும் மேல் நோக்கி நிற்கிறது போல் நமது ஆவி, ஆத்மா சரீரமாகிய மூன்றும் உன்னதத்தை நோக்கி வாழுமானால் அதுவே உத்தம ஜீவியமாகும். கடிகாரத்தின் முள் பிற்பாடு கொஞ்ச கொஞ்சமாய் சாய்கிறது. பிற்பாடு வழுவுகிறது. மாலை 6 மணி வருகிறபோது மூன்று முட்களும் தலைகீழாக திரும்பி நிற்கிறது. அப்பொழுது மூன்று முட்களம் பூமியைப் பார்த்து நிற்கிறது. அந்த வேளையிலே பூமியெங்கும் மாலை 6½ மணிக்கு இருள் மூட ஆரம்பிக்கிறது.

இதேபோல் நம் இதயமும் மதியம் 12 மணிக்கு கடிகாரத்தின் மூன்று முட்களும் மேல் நோக்கி பார்க்கிறது போல தேவனை நோக்கியும், ஆவியானவருடைய சத்தத்தை நோக்கியும் மேல் நோக்கி இருக்குமானால் நம்முடைய வாழ்க்கையும், ஊழியமும், வெளிச்சமாய் இருக்கும். நம்முடைய பாதையிலும் அநேகர் வெளிச்சத்தில் நடப்பார்கள். அதே நேரத்திலே நம்முடைய இருதயம் உலகத்தை நோக்கியும், உலகத்தின் சிற்றின்பத்தை நோக்கியும், உலகத்தின் ஆசாபாசங்களை நோக்கியும், மனுஷரை நோக்கியும் திரும்புமானால் உலகத்தை இருள் மூடுவது போல உங்கள் வாழ்க்கையையும், உங்கள் ஊழியத்தையும் இருள் மூடிவிடும். சாலொமோனின் இருதயத்தை அந்நிய ஸ்தீரிகள் சாயப் பண்ணினது போலவும், வழுவப் பண்ணினது போலவும், திரும்பப் பண்ணினது போலவும் உங்கள் இருதயத்தை பூலோகத்தை நோக்கி திரும்ப இடங்கொடாதிருங்கள். விண்ணை நோக்கிய இதயமே உத்தம இருதயம். மண்ணை நோக்கிய இதயம் உத்தமத்தை விட்டு வழுவிய இதயமே - யோவானின் ஊழியத்தின் மூலம் உத்தமமான ஜனம் கர்த்தருக்காக எழும்பினர். உங்களை யாதொரு தீமையான சக்திகளும் வழுவிப்போக செய்யாதபடி கவனமாயிருங்கள்.

நமது ஊழியத்தின் மூலம் சந்திக்கப்படுகின்ற ஆத்துமாக்களின் இருதயம் கர்த்தரை நோக்கிக் கொண்டிருக்க வேண்டும். விண்ணை நோக்கிக் கொண்டிருக்க வேண்டும். கர்த்தருடைய வருகையை நோக்கி ஜீவிக்க வேண்டும். அப்படிப்பட்டவர்களே உத்தமமான ஜனங்கள். யோவான் ஸ்நானகனின் ஊழியத்தின் மூலம் இயேசு கிறிஸ்துவின் முதலாவது வருகையை எதிர்நோக்கி இருக்கிற ஒரு கூட்ட ஜனங்கள் எழும்பினார்கள். நண்பர்களே! நம்முடைய வாழ்க்கையின் மூலம் கர்த்தருடைய வருகைக்கு ஒரு கூட்ட மக்கள் ஆயத்தப்பட வேண்டும்.

சாலொமோனுடைய இருதயம் உத்தமமாக இராதபடியினாலே இரண்டு விசை கர்த்தர் அவனுக்கு தரிசனமாகி அவனை எச்சரித்தார். சாலொமோன் தன்னுடைய இருதயத்தை பூமியை நோக்கி பார்க்க வைத்தானே தவிர விண்ணை நோக்கிப் பார்க்க வைக்க, விண்ணை நோக்கி திருப்ப மனமற்றவனாயிருந்தான். எனவே கர்த்தர் அவன் பேரிலே கோபமானார். இராஜ்ய பாரத்தை அவனுடைய கரத்திலிருந்து பிடுங்குவதாகவும் அவனுடைய ஊழியக்காரனாகிய யெரொபெயாம் கையிலே அவைகளை கொடுப்பதாகவும் தேவன் சொன்னார். மேலும் சில விரோதிகளையும் கர்த்தர் எழுப்பினார். இதினிமித்தம் சமாதானம் நிறைந்த சாலொமோனின் ஜீவியத்தில் யுத்தங்கள் காணப்பட்டது.

இன்றைக்கும் சபைகள் ஏன் உடைகிறது? ஆத்துமாக்கள் சபையை விட்டு சிதறி பல்வேறு இடங்களுக்கு ஏன் போகிறார்கள்? சபையில் இருக்கிற ஊழியனுக்கும் ஜனங்களுக்கும் இருதயம் உத்தமமாய் இருக்குமானால் உடைவுகளுக்கும், சரிவுகளுக்கும், பிரிவுகளுக்கும் இடம் இருக்காது. யோவான் ஸ்நானகனுடைய ஊழியத்தின் மூலம் உத்தமமான ஜனங்கள் எழும்பினார்கள். ஆகவே யோவானுடைய ஊழியத்தை சிங்காசனத்தில் இருந்த ராஜரீகமான ஊழியம் என்று அழைக்கலாம். (Enthrone Ministry)

## 2. பெருங்கூட்டத்தை எழுப்பினான் : (Enlarge Ministry)

யோவான் ஸ்நானகன் ஊழியத்தனிமித்தமாக திரள் கூட்ட ஜனங்கள் இரட்சிக்கப்பட்டார்கள். பெருங்கூட்ட மக்கள் மனந்திரும்பினார்கள். யோவானுடைய பிரசங்கம் காரசாரமாய் காணப்பட்டது. இடித்துரைக்கும் கடின வார்த்தைகளால் அவர் பிரசங்கித்தார். முகஸ்துதி செய்து பிரசங்கம் செய்யாதபடி முகத்திரைகளை கிழிக்கிறபிரசங்கமே அவர் செய்தார். பிரசங்க பீடத்தில் நிற்கும் போது மனிதர்களைக் கண்டு பயப்படவில்லை. பரிசேயரைக் கண்டு பதறவில்லை. மக்களைக் கண்டு மயங்கவில்லை. ஆசாரியரைக் கண்டு அஞ்சவில்லை. யோவான் ஸ்நானகன் பிரசங்கத்தில் வீரனாக காணப்பட்டான். கடிந்து கொண்டு கண்டனம் பண்ணி புத்தி சொல்லுகிறவனாகக் காணப்பட்டான். யோவானின் ஊழியத்தில் தரமுள்ள ஜனங்களும், எண்ணிக்கையுள்ள மக்களும் மனந்திரும்பினர்.

யோவானுடைய பிரசங்க வார்த்தைகள் கடினமாயிருந்தாலும் அது ஆவியானவரிடத்திலிருந்து வந்ததினாலே ஜனங்கள் இருதயத்திலே குத்தப்பட்டு மனந்திரும்பினார்கள். திரள் திரளாய் அவனிடத்தில் ஞானஸ்நானம் எடுக்க ஓடி வந்தார்கள். மத் 3 : 5ன்படி "அப்பொழுது எருசலேம் நகரத்தாரும், யூதேயா தேசத்தார் அனைவரும், யோர்தானுக்கு அடுத்த சுற்றுப்புறத்தார் யாவரும் அவனிடத்திற்குப் போய் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு யோர்தான் நதியில் அவனால் ஞானஸ்நானம் பெற்றார்கள்" என்று பார்க்கிறோம். இந்த வசனத்திலே முதலாவதாக

★ எருசலேம் நகரத்தார் - பின்பு

★ யூதேயா தேசத்தார் அனைவரும் - அடுத்து

★ யோர்தானுக்கு அடுத்த சுற்றுப் புறத்தார் யாவரும்

என்ற வார்த்தையிலிருந்து திரள் கூட்ட மக்கள் திரண்டார்கள் என்பதை நாம் அறிகிறோம். யோர்தானுக்கடுத்த சுற்றுப்புறத்தார் என்பது குறிப்பிட்ட கிராமத்தைக் குறிக்கிறது. எருசலேம் என்பது ஒரு பட்டணம் முழுவதையும் குறிக்கிறது. எனவே யோவானுடைய ஊழியம் ஒரு கிராமத்தையும் அசைத்தது. முழு பட்டணத்தையும் பிடித்தது. முழு மாவட்டம் முழுவதையும் மாற்றி அமைத்தது. எனவே யோவானின் ஊழியத்தின் மூலம் திரள் கூட்ட மக்கள் எழும்பினார்கள்.

இன்றைக்கும் இப்புஸ்தகத்தை வாசிக்கும் போதே உங்கள் உள்ளத்தில் ஒரு பெரும் விசுவாசம் உண்டாவதாக. உத்தமமான ஜனங்கள் 10 பேர் இருந்தால் போதும் என்று நாம் கடினமாக ஊழியத்தைச் செய்யக் கூடாது. ஏராளமான ஜனங்கள் கூடி வரும்படியாக கர்த்தரிடத்தில் விசுவாசித்து ஜெபிக்க வேண்டும். நம் ஆண்டவர் தயாள சிந்தையுள்ளவர். நாம் வண்கண்ணராய் இருக்கக் கூடாது.

> "ஜனத்திரட்சி ராஜாவுக்கு மகிமை
> ஜனக்குறைவு தலைவனின் முறிவே" (நீதி 14 : 28)

என்று சாலமோன் ஞானி சொல்கிறபடியினாலே சபையிலும், நம்முடைய கூட்டங்களிலும் ஏராளமான ஜனங்கள் கூடி வருவது நம்முடைய ஆசீர்வாதம். யோவான் ஆசீர்வாதமான பாத்திரமாக இருந்தான் எவ்விதமாக? என்று நாம் பார்க்கும் போது அவன் மூலம் ஒரு திரள் கூட்ட ஜனங்கள் இயேசு கிறிஸ்துவின் முதல் வருகைக்கு ஆயத்தப்பட்டார்கள்.

## 3. ஆற்றில் துவங்கி அரண்மனையில் முடித்தான் :
## (Exalted Ministry)

யோவான் ஸ்நானகனுடைய ஊழியம் யோர்தான் நதியிலே தொடங்கியது. (மாற்கு (1 : 4) அனால் யோவான் ஸ்நானகன் ஊழியம் முடியும் போது ஏரோது ராஜாவின் அரண்மனையிலே முடித்தான். (மத் 14 : 5) அதற்கப்புறம் சிறையிலே தள்ளப்பட்டார். பின்பு இரத்த சாட்சியாக சிரச்சேதம் பண்ணப்பட்டார். என்றாலும் யோவானுடைய ஊழியம் ஒரு உயர்ந்த ஊழியம்தான். துவக்கம் அற்பமாக இருந்தது. முடிவு சம்பூரணமாக இருந்தது. ஆற்றில் தொடங்கிய யோவானுடைய ஊழியம் அரண்மனையிலே முடிந்தது என்பது எவ்வளவு பெரிய ஆசீர்வாதம்.

பவுல் அப்போஸ்தலன் அரேபியாவின் வானந்தரத்திலே தன் உழியத்தைத் தொடங்கினான். அகிரிப்பா ராஜாவுக்கு முன்பாக தன் ஊழியத்தை முடித்தான். நீதிமானுடைய பாதை நடுப்பகல் வரைக்கும் அதிகமதிகமாய் பிரகாசிக்கிற சூரிய பிரகாசத்தைப் போல் இருக்கும் என்று வேதம் சொல்லுகிறது. தாவீதோடு கர்த்தர் இருந்தார். அவன் நாளுக்கு நாள் விருத்தி அடைந்தான் என்று வேதம் சொல்லுகிறது. (II சாமுவேல் 5 : 10) கர்த்தருடைய பிள்ளைகளே! ஒவ்வொரு தேவ பிள்ளைகளுக்கும் தேவன் வைத்திருக்கிறதான பாதை இதுதான். ஆடு மேய்க்கிற தாவீது முதலில் தனிமையில் இருந்தான். பிற்பாடு அவனை அபிஷேகம் பண்ணிய பிற்பாடு அவன் குடும்பத்தார் மட்டுமே அவனோடு காணப்பட்டார்கள். நாட்கள் சென்றபோது 600 பேர் தாவீதோடு இருந்தார்கள். இன்னும் சில வருடங்கள் கழித்து அவனுடைய கோத்திரமாகிய யூதா வம்சத்தார் மாத்திரம் தாவீதைப் பின்பற்றினார்கள். பிற்பாடு 37 வயதாகும்போது முழு இஸ்ரவேலரின் சமஸ்த 12 கோத்திரங்களும் தாவீதை அண்டிக் கொண்டார்கள். தாவீதுடைய ராஜ்ய பாரமும், ராஜ்யத்துடைய விஸ்தீரமும் இஸ்ரவேலில் மட்டுமல்ல அண்டைய நாடுகள் ஒன்பதுக்கும் ராஜ்ய பாரம் பரவினது என்பதை நாம் (சங் 60 : 9) சங்கீத புஸ்தகங்களில் வாசிக்கும் போது நாம் அறிகிறோம். மோவாப், ஏதோம், மெசப்பெத்தோனியா, சீரியா சீகேம், சுக்கோத், கீலேயாத், மனாசே, எப்பீராயீம் வரைக்கும் தாவீதின் ராஜ்யபாரம் பரவியது. ஆகவே உங்களுடைய துவக்கம் அற்பமாய் இருந்தாலும் உங்களுடைய முடிவு சம்பூரணமாய் இருக்கும் என்பதை அறியுங்கள். இந்த புஸ்தகத்தின் செய்தியை வாசிக்கும் போது யோவான் எவ்விதமாக கர்த்தருடைய ஊழியத்திற்கு தன்னை ஆயத்தப்படுத்தினான் என்பதை அறிந்து உங்களையும் ஆயத்தப்படுத்துங்கள். யோவானை விரிவான ஊழியத்திலே பயன்படுத்தினதுபோல உங்களையும் பயன்படுத்தி உங்களை ஆசீர்வதித்து, ஆசீர்வாதமான தேவ மனிதனாக தேவன் உங்களை உயர்த்துவார். உங்கள் கிராமத்திலும், உங்கள் மாவட்டத்திலும் பின்பு வெளிதேசங்களிலும் கர்த்தர் பயன்படுத்துவார்.

### 4. பிறப்புக்கு முன்னே பெயரிடப்பட்டான் : (Extra-Ordinary Ministry)

யோவான் ஸ்நானகன் பிறப்பதற்கு ஒரு ஆண்டுக்கு முன்னதாகவே தகப்பனாகிய சகரியாவுக்கு கர்த்தர் வெளிப்படுத்தி பெயரையும் சொன்னார். வேத புத்தகத்திலே பிறப்புக்கு முன்னே பெயரிடப்பட்டவர்கள் 7 பேர். இந்த 7 பேருமே Super-man ஆக இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்திலே தேவனால் பயன்படுத்தப்பட்டார்கள். அவர்கள் முறையே :

1. இஸ்மவேல் (ஆதி 16 : 11)
2. ஈசாக்கு (ஆதி 17 : 19)
3. சாலமோன் (நாளா 22 : 9)
4. யோசியா (இராஜா 13 : 2)
5. கோரேஸ் (ஏசா 44 : 28; 45 : 1)
6. யோவான் ஸ்நானகன் (லூக். 1 : 13)
7. இயேசு கிறிஸ்து (மத். 1 : 21)

இப்பொழுது நாம் பார்க்கும் இந்த ஏழு பேருமே பிறப்புக்கு முன்னே பெயரிடப்பட்டவர்கள். அவர்கள் மற்றமனிதர்களைவிட வித்தியாசமானவர்களாக, முக்கியமானவர்களாக தேவனால் உபயோகிக்கப்பட்டார்கள். கர்த்தரால் கனப்படுத்தப்பட்டார்கள். அப்போஸ்தலனாகிய பவுலும் தன்னுடைய பிறப்பிலே தேவன் அற்புதம் செய்திருக்கிறார். அகாலப்பிறவி போன்ற எனக்கும் அவர் தரிசனமானார் என்று சொல்லுகிறார். எனவே யோவான் ஸ்நானகன் ஒரு ஆசீர்வாதமான பாத்திரம்.

உங்களையும், என்னையும் குறித்து நீங்கள் தாழ்வாக எண்ணிக் கொள்ளாதிருங்கள், நம்மையும் கூட தேவன் இதே வரிசையில்தான் தம்முடைய ஜீவ புஸ்தகத்தில் எழுதி இருக்கிறார் என்பதற்கு வேத புஸ்தகத்திலிருந்து ஒரு வசனத்தை உங்களுக்கு நான் காட்ட விரும்புகிறேன். தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும், குற்றமில்லாதவர்களுமாய் இருப்பதற்கு அவர் உலக தோற்றத்திற்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டார். (எபே 1 : 5) இந்த வசனத்தின்படி நீங்களும், நானும் கூட பிறக்கும் முன்னே மட்டுமல்ல, உலகம் தோன்றும் முன்பே தேவனால் அழைக்கப்பட்டிருக்கிறோம். தெரிந்து கொள்ளப்பட்டிருக்கிறோம். எனவே யோவான் ஒரு ஆசீர்வாதமான பாத்திரமாய் அந்நாட்களில் இருந்த மக்களுக்கு வாழ்ந்தது போல நீங்களும், நானும் ஒரு ஆசீர்வாதமான பாத்திரமாய் வாழ முடியும். நீங்களும் ஒரு Super-man என்பதை மறந்து போகாதிருங்கள். நீங்கள் பிறப்பதற்கு முன்னமே உங்களைக் குறித்து தேவன் மகாபெரிய திட்டம் வைத்திருக்கிறபடியால் தான் இந்த இரட்சிப்பு உங்களுக்குக் கிடைத்திருக்கிறது. இந்த கனமான அழைப்பு உங்களுக்கு கிடைத்திருக்கிறது. இந்த புஸ்தகத்தை நீங்கள் வாசித்து நீங்களும் ஒரு சாதனையாளரான மனிதன் என்பதை நிரூபித்து விடுங்கள். தொடர்ந்து புத்தகத்தை வாஞ்சையுடன் படியுங்கள். உங்கள் மூலம் திருச்சபையின் கடைசி அத்தியாயம் எழுதப்படட்டும்.

## 5. இறப்புக்கு பின்பும் பிரசங்கித்தவன் : (Evangelistic Ministry)

யோவான் ஸ்நானகன் ஒரு சிறந்த நற்செய்தியாளர் என்பதை யோவானின் வாழ்க்கையின் ஆரம்பத்திலிருந்து கடைசி வரைக்கும் நாம் பார்க்க முடிகிறது. ஒரு காலத்திலே 10 ஆண்டு தொடர்ந்து பயன்படுத்தப்படுகிற சிலர் அதுக்கப்புறம் விலாசம் கூட விசாரித்து அறியும் அளவுக்கு மறைந்து போகிற காலமாக இருக்கிறது. வெளி

தேசமாகிய அமெரிக்க சுவிசேஷகர்களானாலும், இந்திய தேசத்தில் இருக்கிறஊழியர்களானாலும் முன்பொரு காலத்தில் வல்லமையாய் பயன்படுத்தப்பட்ட சிலர் பிந்திய காலங்களில் பெயர் மறைந்து போகிறார்கள். அது வேதனைக்குரியது. யோவானோ அப்படி அல்ல. அவன் அழைக்கப்பட்ட அந்த நாள் முதல் இறப்பு வரைக்கும் வல்லமையான சுவிசேஷகனாக இருந்தான். இறந்த பிற்பாடு கூட அவன் தொடர்ந்து தேசத்தை நோக்கிப் பிரசங்கித்துக் கொண்டிருந்தான்.

யோர்தான் கரையிலே முன்பு யோவான் ஞானஸ்நானம் கொடுத்துக் கொண்டிருந்த இடத்திற்கு இயேசு கிறிஸ்து திரும்பிப் போய் அங்கே தங்கினார். அநேகர் அவரிடத்தில் வந்தார்கள். யோவான் ஒரு அற்புதமும் செய்யவில்லை. ஆகிலும் இயேசுவைக் குறித்து யோவான் சொன்னதெல்லாம் மெய்யாயிருக்கிறது என்று சொன்னார்கள். **"அவ்விடத்தில் அநேகர் அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள்" (யோவான் 10 : 42)**

யோவான் இறந்து சில மாதங்களுக்கு அப்புறம் நடந்த ஒரு உண்மை சரித்திரத்தை நாம் இந்த வசனத்தில் பார்க்கிறோம். இயேசு கிறிஸ்துவைக் குறித்து யோவான் என்னவெல்லாம் சொன்னாரோ அப்படியே அவரில் நிறைவேறிக் கொண்டிருக்கிறது என்று அறிந்து கொண்டனர். யோவான் ஏற்கெனவே பேசிய பிரசங்கத்தினிமித்தம் அநேகம் பேர் அன்று கிறிஸ்துவின் பெயரிலே விசுவாசிகளானார்கள் என்பதை நாம் இந்த இடத்திலே பார்க்கிறோம். ஆகவே யோவான் ஸ்நானகன் செத்த பின்பும் பிரசங்கித்த ஒரு பிரசங்கியார் என்று சொல்லலாம்.

"செத்தும் கொடுத்த சீதக்காதிகளும் உண்டு.
செத்தும் கெடுத்த சாதிக் கொடுமைகளும் உண்டு
செத்த பின்பும் அற்புதம் செய்த எலிசாக்கள் உண்டு
செத்த பின்பும் பிரசங்கித்த யோவான் ஸ்நானகனும் உண்டு."

உங்களுக்கு எப்படிப்பட்ட சாட்சி இருக்கிறது? பிரசங்க அபிஷேகம் இன்று உங்கள் மேல் உண்டா? உற்சாகமுள்ளஆவி உங்கள் மேல் உண்டா? ஆனந்த தைல அபிஷேகம் உங்கள் மேல் உண்டா? ஆதி நாட்களிலே ஜனங்கள் மேல் உண்டாயிருந்த மன உருக்கத்தோடு இன்றைக்கும் நீங்கள் உங்கள் ஊழியத்திலே நிற்கிறீர்களா? யோவானுடைய ஊழியத் துவக்கம் அருமையாயிருந்தது. முடிவு அற்புதமாயிருந்தது. ஆகவே இந்த ஐந்து காரியங்களாலே நாம் அறிகிறஉண்மை என்னவென்றால் யோவான் ஸ்நானகன் ஒரு ஆசீர்வாதமான பாத்திரம். இதை வாசித்துக் கொண்டிருக்கிறநண்பர்களே இப்படிப்பட்ட மகிமையான வாழ்வுக்கு உங்களை அர்ப்பணிப்பீர்களா? ஆதாமைப் போல நீங்கள் சாபத்தின் அடையாளமாக இருக்கிறீர்களா? அல்லது யோவானைப் போல ஆசீர்வாதத்தின் பாத்திரமாய் இருக்கிறீர்களா? ஆசீர்வாதமான பாத்திரமாய் இருக்க தொடர்ந்து அடுத்த அத்தியாயத்தின் உள்ளே உங்கள் கவனத்தை செலுத்துங்கள். புத்தகம் முடிவதற்குள்ளாக ஒரு ஆசீர்வாதமான பாத்திரமாய் நீங்கள் எழும்ப தேவன் உங்களை ஆயத்தப்படுத்துவார்.

# 3

# ஆவிக்குரியவனான யோவான் ஸ்நானகன்

**யோவான் நீதியும், பரிசுத்தமும் உள்ளவனென்று ஏரோது அறிந்து அவனுக்குப் பயந்திருந்தான். (மாற்கு 6 : 20)**

யோவான் ஸ்நானகன் ஆவிக்குரியவனாக காணப்பட்டான் என்பதை நாம் இந்த அத்தியாயத்திலே தியானத்தோடு ரூபகாரப்படுத்தி இருக்கிறோம். இன்றைய கிறிஸ்தவ மக்கள் மத்தியிலே ஆவிக்குரிய மக்கள் என்றும், மாம்சத்துக்குரிய மக்கள் என்றும் இரண்டு வித மக்களை நாம் பார்க்க முடியும். ஊழிய வட்டத்திலும் "ஆவிக்குரிய ஊழியர்கள்" என்றும், "மாம்சத்துக்குரிய ஊழியர்கள்" என்றும் இரண்டுவித ஊழியர்களை நாம் பார்க்க முடியும். இதை நாம் அறிந்து கொள்வதற்கு விசுவாசியின் தகப்பனாகிய ஆபிரகாம் குடும்பத்தை சற்று கண்ணோக்கிப் பார்க்க வேண்டும். ஆபிரகாமுக்கு இரண்டு மனைவிகள் இருந்தனர். ஒருத்தி கர்த்தரால் கொடுக்கப்பட்டவள். மற்றொருத்தி மாம்ச இச்சையால் புகுந்து கொண்டவள். சாராளோ வாக்குத்தத்தத்தின்படி இணைக்கப் பட்டவள். ஆகாரோ மாம்சத்தின்படி சேர்த்துக் கொள்ளப்பட்டவள். இருவருடைய வாழ்க்கையும் உற்றுக் கவனிக்கிறபோது அடிமைப் பெண்ணாகிய ஆகாருக்கு முதலாவது ஒரு மகன் பிறந்தான். அவன் பெயர் இஸ்மவேல். வாக்குத்தத்தத்தின்படி பிறந்த ஈசாக்கு இரண்டாவதாக பிறந்தான். இந்த இரண்டு பிள்ளைகளையும் கூட நாம் ஒப்பிடும் போது ஈசாக்கு ஆவிக்குரியவன் என்றும், இஸ்மவேல் மாம்சத்திற்குரியவன் என்றும் நாம் அறிகிறோம்.

ஆவிக்குரியவனான ஈசாக்கும், மாம்சத்திற்குரியவனான இஸ்மவேலும் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுப் போராடிக் கொண்டிருந்தார்கள். மாம்சத்தின்படி பிறந்த இஸ்மவேல் ஆவியின்படி பிறந்த ஈசாக்கை அவ்போது துன்பப்படுத்தினான். இப்போதும் ஆவிக்குரிய மக்களை மாம்ச மக்கள் துன்பப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆவிக்குரிய ஊழியங்களை மாம்சத்தின்படி நடக்கிற ஊழியங்கள் துன்பப்படுத்திக் கொண்டிருக்கிறது. இதை வாசித்துக் கொண்டிருக்கிற அருமை தேவ பிள்ளைகளே! நீங்கள் எந்தக் கூட்டத்தில் சேர ஆவலாய் இருக்கிறீர்கள்? ஆவிக்குரிய கூட்டத்திலா? அல்லது மாம்சக் கூட்டத்திலா?

ஒரு ஊழியக்காரனுடைய செய்தி 52 வாரங்களும் உலகப் பிரகாரமான ஆசீர்வாதத்தின் செய்தியாக இருக்குமானால் அந்த இடத்திலே ஆவிக்குரிய ஊழியம் நடப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

சுகமடைவது எப்படி? ஐசுவரியவனாவது எப்படி? பெரிய உத்தியோகத்திற்கு உயர்த்தப்படுவது எப்படி? வெளிநாடுகளுக்கப் போவது எப்படி? என்கிறதான ஆசீர்வாதமான செய்திகளை ஆயுட்காலம் முழுவதும் பிரசங்கித்துக் கொண்டிருக்கிற ஊழியங்கள் மாம்சத்திற்குரிய ஊழியங்கள்தான். அதேவேளையில் பரிசுத்தமடைவது எப்படி? வரங்களைப் பெற்றுக் கொள்வது எப்படி? ஆண்டவருடைய ராஜ்யத்திற்குத் தகுதிப்படுவது எப்படி? என்றசெய்திகள் ஒரு பிரசங்க பீடத்திலிருந்து வருமானால் அந்த ஊழியங்கள் ஆவிக்குரிய ஊழியங்களாக இருக்கும். உண்மை, நேர்மை, பரிசுத்தம், நீதி, நியாயம் இவைகளை முக்கியப்படுத்தக்கூடிய ஊழியங்களே ஆவிக்குரிய ஊழியங்கள்.

இப்படிப்பட்ட ஆவிக்குரிய ஜீவியத்தை வாஞ்சிக்கிறமக்களே ஆவிக்குரிய சபையாராக எழும்ப முடியும். இந்த செய்தியிலே யோவான் ஸ்நானகன் அவிக்குரியவனாகக் காணப்பட்டான் என்பதற்கு மூன்று குணங்களை நாம் பார்க்கப் போகிறோம். அவை முறையே :

1. நீதிமான்
2. பரிசுத்தவான்
3. தீர்க்கதரிசி

என்ற வார்த்தைகளாலே நாம் வேதப்புத்தகத்தில் பார்க்கிறோம்.

### 1. நீதிமான் :

யோவான் ஸ்நானகன் நீதிமானாய் இருந்தான் என்று மாற்கு 6 : 20-ல் சொல்லி இருக்கிறது. அவன் நீதிமானாய் வாழ்வதை எதிரிகள் கூடக் கண்டு கொண்டார்கள். யோவான் நீதியும், பரிசுத்தமும் உள்ளவன் என்று ஏரோது அறிந்து அவனுக்கு பயந்து, அவனைப் பாதுகாத்து அவனுடைய யோசனையின்படி அநேகக்காரியங்களை செய்து விருப்பத்தோடு அவன் சொல்லைக்கேட்டிருந்தான் என்று நாம் பார்க்கிறோம்.

வேதப்புஸ்தகத்திலே முதல் நீதிமான் நோவா. (ஆதி 6 : 9) அந்த நீதிமான் அழிவிலிருந்து காக்கப்பட்டான். நீதிமானுக்குத் தீங்கு செய்ய எவராலும் முடியாது. நீதிமானைத் தொட எவருக்கும் அதிகாரம் இல்லை. நீதிமானைக் கர்த்தர் தற்காத்து இடும்பு செய்கிறவனுக்கு பூரணமாய் தேவன் பதிலளிப்பார் என்று வேதம் சொல்லுகிறது. நீதிமான் கைவிடப்பட்டதையும், அதன் சந்ததி அப்பத்திற்கு இரந்து திரிந்ததையும் நான் கண்டதில்லை என்று தாவீது சொல்கிறான். இவ்வளவு உயர்வான ஆசீர்வாதம் நீதிமானுக்குண்டானால் அந்த நீதிமான் எப்படிப்பட்டவன் என்பதையும் நாம் அறிந்திருக்க வேண்டும்.

- ★ **விசுவாசிப்பவனே நீதிமான் (ரோமர் 5 : 1)**
- ★ **மனந்திரும்பினவனே நீதிமான் (லூக்கா 5 : 32)**

★ பாவம் மன்னிக்கப்பட்டவனே நீதிமான் (லூக்கா 18 : 14)

★ நியாயப் பிரமாணத்தின்படி செய்கிறவனே நீதிமான் (ரோமர் 2 : 13)

★ பிறரை அவமானப்படுத்தாதவன் நீதிமான். (மத்தேயு 1 : 19)

★ பரிசுத்த ஆவியை பெற்றவனே நீதிமான் (I தீமோ 3 : 16)

★ ஆத்தும பாரமுள்ளவனே நீதிமான் (II பேதுரு 5 : 7)

மேலே சொன்ன இந்த ஏழு குணங்களும் உடையவர்களே நீதிமான்கள் என்பதை நாம் முழு வேதாகமத்தையும் ஆராய்ச்சி செய்து பார்க்கிறபோது கண்டெடுக்கிற உண்மைகளாகும். எனவே யோவான் ஸ்நானகன் நீதிமான் என்று அழைக்கப்படுகிறான் என்று சொன்னால் இந்த ஏழு தகுதிகளும் யோவான் ஸ்நானகனுக்குள்ளே இருந்தது. நீதிமானாய் வாழ்கிற ஒரு விசுவாசி நீதிமானாய் ஜீவிக்கிற ஒரு ஊழியக்காரன் மெய்யாகவே ஒரு ஆவிக்குரிய மனிதன். நண்பர்களே நீங்கள் நீதிமானாய் வாழ்ந்து தேவனுக்கு மகிமையை சேருங்கள். அப்பொழுது உங்களைத் தொடவும் உங்களுக்குத் தீங்கு செய்யவும் எந்த சத்துருக்களாலும் முடியாது. யோவான் ஸ்நானகன் ஆரம்ப நாள் முதலே நீதிமானாயிருந்தான். எனவே அந்த நீதிமானுக்குத் தீங்கு செய்ய ஏரோது ராஜாவினாலே முடியவில்லை என்று நாம் பார்க்கிறோம்.

## 2. பரிசுத்தவான் :

யோவான் ஸ்நானகனுடைய வாழ்க்கையை அறிகிறபோது யோவான் ஒரு பரிசுத்தவான் என்பதை வேதவசனம் மூலமாக நாம் அறிகிறோம். நாம் ஏற்கனவே வாசித்த அதே வசனத்தை கவனிக்கிறபோது இந்த காரியம் உறுதிபடுத்தப்படுகிறது. யோவான் நீதிமானாயிருந்தது மட்டுமல்ல. அவன் பரிசுத்தவான் என்று அறிந்து அவனுக்குப் பயந்து, அவனை பாதுகாத்து, அவன் யோசனைகளின்படி அநேக காரியங்களை செய்து விருப்பத்தோடே அவன் சொல்லைக் கேட்டு வந்தான். (மாற்கு 6 : 20) யோவான் ஒரு பரிசுத்தவான்.

அநேக ஆண்டுகளுக்கு முன்னர் பென்சில்வேனியாவைச் சேர்ந்த ஒரு நண்பர் தன்னுடைய புத்தகத்திலே ஒரு சம்பவத்தை எழுதினார். என் தகப்பனாரின் பழைய பசுக்களில் ஒன்று அருமையான பாலைக் கொடுக்கிறது. ஆனால் அது ஒரு அறிவிலி என்பது தெளிவாகிறது. மேய்ச்சலுக்கு எங்களிடத்தில் ஒரு பெரிய வயல் இருந்த போதிலும் எங்கள் நிலத்திலே மேய்ச்சல் மேய்ந்து கொண்டிருக்கிறபோது எங்கள் மேய்ச்சல் நிலத்திற்கு வெளியே பசுமையான புல்கள் இருப்பதாக அந்த பசுவுக்கு தோன்றுகிறது. எங்கள் தோட்டத்திலே அருமையான பசும்புல்வெளி, நிழல் தரும் நல்ல மரங்கள், குளுமையான நல்ல நீரோடை இவை எல்லாவற்றையும் விட்டு விட்டு வேலிக்கு வெளியே தலையை

நீட்டி வெளிப்புறம் காணப்படும் புல்லை எங்கள் பசு தின்பதை நான் பலமுறைகண்டிருக்கிறேன். அப்படி என்ன அதற்கு தேவைப்படுகிறது?

இன்றும் அநேகர் இந்த பசுவைப் போலவே காணப்படுகின்றனர். அக்கரைப் பச்சையைப் பற்றியே எப்போதும் அவர்கள் நினைக்கிறார்கள். இக்கரையில் இருக்கும்போது அக்கரையை பார்த்தால் பச்சையாக தெரிகிறது. தொடர்ந்து பேராசை கொண்டு தனக்கு சொந்தமில்லாத ஒன்றைபெறவே முயலகிறார்கள். எப்படிப்பட்ட பரிதாபமான நிலை இது. அதிருப்தி என்பது எவ்வளவு தவறானது என்பதை மனுக்குலம் இன்று புரிவதில்லை.

நீங்கள் ஒரு விசுவாசியாக இருந்தால் வாழ்க்கையில் உயர்வான ஆசீர்வாதங்களை பெற்றிருக்கிறீர்கள் என்று விசுவாசித்து திருப்திபடுங்கள். பரலோகமே உங்கள் சொந்த வீடாக இருக்கிறது. தேவனே உங்கள் பிதாவாக இருக்கிறார். ஒருபோதும் அவர் உங்களை விட்டு விலகுவதில்லை. ஒவ்வொரு தேவையையும் நம்முடைய தேவன் சந்திப்பார். உங்களுக்கு தேவன் கொடுத்துள்ள அனைத்துக்காகவும் நன்றி சொல்லுங்கள். மனநிறைவுள்ள மனைவி, மகிழ்ச்சியான புருஷன், ஆசீர்வாதமான பிள்ளைகள் எனக்கு தேவன் கொடுத்திருக்கிறார் என்றமனபாவத்தோடு நீங்கள் இருந்தால் வேலிக்கு அப்புறம் போக மாட்டீர்கள். உங்கள் வீடே உங்களுக்கு பசுமையாகத் தெரியும். உங்கள் வீடே உங்களுக்கு மகிழ்ச்சி நிறைந்த ஏதேன் தோட்டமாக இருக்கும். அக்கரை பச்சையைக் கண்டு ஆசைப்பட்டீர்கள் என்று சொன்னால் உங்கள் வாழ்க்கையிலே பல விபரீதங்கள் வந்து குறுக்கிட வாய்ப்புகள் உண்டு.

**"வேலி தாண்டிய வெள்ளாடு**
**கசாப்புக் கடைக்காரனுக்கு பலியாடு"**

என்பதை நீங்கள் மறக்கக் கூடாது. பரிசுத்தவான் என்றாலே பிரித்தெடுக்கப்பட்டவன் என்று அர்த்தம். எனக்கேற்ற பரிசுத்தவான்களாயிருக்கும்படி நான் உங்களை மற்ற ஜனத்தினின்று பிரித்தெடுத்தேன் என்று ஆண்டவர் சொன்னார். பரிசுத்தம் என்பதை விளங்கிக் கொள்ள நம் ஆண்டவராகிய இயேசு சொன்ன மற்றொரு வசனத்தையும் சிந்திக்க வேண்டும். அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகும்படி, அவர்களுக்காக நான் என்னைத் தானே பரிசுத்தமாக்குகிறேன் என்று யோவான் 17 : 19ம் வசனத்தில் நம் ஆண்டவர் சொன்னார். நம்மை சூழ எத்தனையோ நன்மைகளும், தீமைகளும் இருக்கின்றபோது பொல்லாங்காய் தோன்றுகின்ற எல்லாவற்றையும் விட்டு விலகி ஆண்டவருக்கு பிரியமான சித்தம் செய்யும்படி கர்த்தர் வைத்த இடத்திலே வேலிதாண்டாததுமான பரிசுத்தவான். இப்படிப்பட்ட பரிசுத்தம் யோவான் ஸ்நானகனிடத்திலே காணப்பட்டது.

## 3. தீர்க்கத்தரிசி :

யோவான் ஸ்நானகன் நீதிமான், பரிசுத்தவானாக இருந்தது மட்டுமல்ல அவன் ஒரு தீர்க்கத்தரிசியாகக் காணப்பட்டான் என்பதை மத்தேயு 14 : 5ம் வசனத்திலிருந்து அறிகிறோம். ஏரோது அவனை கொலை செய்ய மனதாயிருந்தும், ஜனங்கள் அவனை தீர்க்கத்தரிசி என்று எண்ணினபடியால் அவர்களுக்கு பயந்திருந்தான் என்று நாம் வாசிக்கிறோம். ஏரோது ராஜாவுக்கு ஏன் பயமுண்டாயிற்று. சங் 105 : 15ம் வசனத்திலே நான் அபிஷேகம் பண்ணினவர்களை நீங்கள் தொடாமலும், என்னுடைய தீர்க்கத்தரிசிகளுக்குத் தீங்கு செய்யாமலும் இருங்கள் என்று ஆண்டவர் சொல்லியிருக்கிறார்.

இன்று நாம் கர்த்தருக்காக ஒரு தீர்க்கத்தரிசியாய் செயல்படுவது எப்படி? ஆவியில் நிரம்பி, அந்நிய பாஷைகளிலே நிரம்பி அப்புறம் வெளிப்பாடுகளைச் சொல்லுவது தான் தீர்க்கத்தரிசனம் என்று அநேகர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது ஒரு தீர்க்கத்தரிசனமாக இருந்தாலும் அப்படிப்பட்ட தீர்க்கத்தரிசன வரம் எல்லோருக்கும் கொடுக்கப்படுவது கிடையாது. ஆனால் எல்லோருக்கும் கொடுக்கப்படுகிறஒரு தீர்க்கத்தரிசன வரம் உண்டு. இதை வெளி 19 : 10ல் நாம் பார்க்கிறோம். இயேசுவை பற்றி சாட்சி தீர்க்கத்தரிசனத்தின் ஆவியாயிருக்கிறது என்று நம்முடைய ஆண்டவர் சொல்லுகிறார். இயேசு கிறிஸ்துவைப் பற்றி சாட்சி சொல்ல எழும்பும் போதெல்லாம் நமக்குக்ளே வாசமாயிருப்பது தீர்க்கத்தரிசனத்தின் ஆவியாயிருக்கிறது. ஆகவே நண்பர்களே மனந்திரும்பின நீங்கள் மறுபிறப்பு பெற்ற நீங்கள் ஆண்டவராகிய இயேசுவினிடத்திலே பெற்ற நன்மைகளை சாட்சியாக சொல்லுங்கள். நீங்கள் எப்பொழுதெல்லாம் ஆண்டவரை மகிமைப்படுத்தி இயேசு கிறிஸ்துவைப் பற்றி சாட்சி சொல்ல எழும்புகிறீர்களோ அப்பொழுதெல்லாம் உங்களுக்குள்ளே தீர்க்கத்தரிசனத்தின் ஆவி கிரியை செய்கிறது. தீர்க்கத்தரிசன ஊழியத்திற்கு நீங்கள் அழைக்கப்பட்டிருந்தாலும் நல்லதுதான். தீர்க்கத்தரிசன வரம் பெற்றிருந்தாலும் அதுவும் நல்லதுதான். அதிலும் மேன்மையாக தீர்க்கத்தரிசனத்தின் ஆவியைப் பெற்றவர்களாக சாட்சி சொல்லிக் கர்த்தரை மகிமைப்படுத்துங்கள். இவ்விதமாக யோவான் ஸ்நானகனைப் போல ஆவிக்குரியவர்களாக நாம் காணப்படுவோமாக இந்த மூன்று திர்ஷ்டாந்த சத்தியங்களினாலும் யோவான் ஒரு ஆவிக்குரிய யோவான் ஸ்நானகனாக இருந்தான் என்பதை நாம் அறிகிறோம். இப்படிப்பட்ட ஆவிக்குரிய ஊழியர்களாகவும் விசுவாசிகளாகவும் நாம் காணப்பட கர்த்தர் நமக்கு அனுக்கிரகம் தருவாராக! மாம்சத்துக்குரிய மக்கள் மறைந்து போகட்டும்! ஆவிக்குரிய மக்கள் எழும்பட்டும்! மாம்சத்தின்படி பிறந்த இஸ்மவேலர்கள் தூரமாய் விலகி போகட்டும்! ஆவியின்படி பிறந்த ஈசாக்குகள் எழுந்து பிரகாசிக்கட்டும்! மாம்சத்துக்குரிய இஸ்மவேலர்கள் வனாந்திரத்திற்கு துரத்தப்படட்டும். ஆவிக்குரியவனான ஈசாக்குகள் சிங்காசனத்தில் அமர்ந்து பிரகாசிக்கட்டும்.

4

# ஆயத்தப்படும் யோவான் ஸ்நானகன்

யோவான் ஸ்நானகனுக்காக ஒரு பிரத்யேகமான ஊழியத்தை தேவன் வைத்திருந்தார். அதுவே உத்தமமான ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும் ஊழியமாகும். பிதாக்களுடைய இருதயங்களைப் பிள்ளைகளிடத்திற்கும், கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களுடைய ஞானத்திற்கும் திருப்பி, உத்தமமான ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும்படியாக, அவன் எலியாவின் ஆவியும், பலமும் உடையவனாய் அவருக்கு முன்னே நடப்பான் என்றான் (லூக் 1 : 17) என்ற வசனம் யோவானின் ஊழியத்தை எடுத்தியம்புகிறது.

யோவான் தனக்குக் கொடுக்கப்பட்ட கொஞ்ச காலத்திலே பணிவிடை ஊழியத்தை முடித்தபோது ஒரு கூட்ட ஜனத்தை கர்த்தருக்காக ஆயத்தப்படுத்தினான் என்று இந்த வசனத்தில் பார்க்கிறோம். கர்த்தருக்கு ஜனத்தை ஆயத்தப்படுத்தக்கூடியவன் முதலில் தன்னை ஆயத்தப் படுத்தியிருக்க வேண்டும். தன்னை ஆயத்தப்படுத்தாத ஒரு மனிதன் மற்றவர்களை கர்த்தருக்காக ஆயத்தப்படுத்துவதற்கு போனால் தானும் கெட்டு மற்றவர்களையும் வழிதப்ப வைத்து அழிவுக்கு நேராய் கொண்டு போகிறவனாய் இருப்பான். ஆனபடியால் தான் நம் ஆண்டவர் எசேக்கியேல் தீர்க்கதரிசியைப் பார்த்து "நீ ஆயத்தப்படு. நீ அவர்களுக்குக் காவலனாயிரு" என்று எசே 38 : 7ல் சொல்லியுள்ளார். கர்த்தர் எவருக்கும் ஒரே போதனையைத்தான் கொடுப்பார். மனுஷரிடத்தில் பட்ச பாதம் பாராதவர். "நான் கர்த்தர். நான் மாறாதவர்" என்ற வசனத்தின்படி தேவனுடைய பிரமாணங்களை எல்லா மனிதர்க்கும் ஒரே மாதிரியாய்க் கொடுத்துள்ளார். எசேக்கியேலுக்குச் சொன்ன வார்த்தைதான் யோவான் ஸ்நானகனுக்கும் கொடுக்கப்பட்டது. யோவானுக்குக் கொடுக்கப் பட்டதுதான் இன்று உங்களுக்கும் எனக்கும் கொடுக்கப்படுகிறது. ஆகையால் தேவ பிள்ளைகளே! முதலில் கர்த்தருடைய வருகைக்கு நம்மை ஆயத்தப்படுத்த வேண்டும். பின்பு நம்மோடு கூட ஒரு கூட்ட ஜனத்தை ஆயத்தப்படுத்த வேண்டும். யோவான் ஸ்நானகன் கர்த்தருக்காக ஒரு கூட்டம் உத்தமமான ஜனத்தை ஆயத்தப்படுத்துவான் என்று இயேசு தீர்க்கதரிசனமாக சொன்ன வார்த்தைகளை அவன் செய்து முடித்தான். "ஆகையால் ஒருவன் இவைகளை விட்டு தன்னைச் சுத்திகரித்துக் கொண்டால், அவன் பரிசுத்தமாக்கப்பட்டதும், எஜமானுக்கு உபயோகமானதும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான

கனத்துக்குரிய பாத்திரமாயிருப்பான்" (II தீமோ 2 : 21) என்ற வசனத்தின்படி ஆயத்தமாக்கப்பட்டவனைத் தான் கர்த்தர் கனத்துக்குரிய பாத்திரமாய் பயன்படுத்துவார். அன்பு சகோதரா சகோதரி நீங்கள் ஒருவேளை ஜெபக்குழு நடத்துபவராக இருக்கலாம். அல்லது ஆத்தும ஆதாயம் செய்கிறவர்களாக இருக்கலாம். எப்படி இருந்தாலும் முதலில் நீங்கள் உங்களை ஆயத்தப்படுத்தினால்தான் மற்றவர்களை நீங்கள் ஆயத்தப்படுத்த முடியும். யோவான் ஸ்நானகன் முதலில் தன்னை ஆயத்தப்படுத்தியிருந்தான். அவன் தன்னை ஆயத்தப்படுத்தின 7 காரியங்களை நாம் கீழே பார்ப்போம்.

## 1. ஆவிக்குரிய சூழ்நிலையிலே தன்னை ஆயத்தம் பண்ணினான் :

"யூதேயா தேசத்தின் ராஜாவாகிய ஏரோதின் நாட்களில் அபியா என்னும் ஆசாரிய வகுப்பில் சகரியா என்னும் பேர் கொண்ட ஆசாரியன் ஒருவன் இருந்தான். அவன் மனைவி ஆரோனுடைய குமாரத்திகளில் ஒருத்தி. அவள் பெயர் எலிசபெத்." (லூக் 1 : 5) இந்த வசனத்தில் யோவானின் பெற்றோரைப் பற்றி நாம் பார்க்கிறோம். யோவானின் தாய் எலிசபெத். இவள் ஆரோன் வம்சத்தில் வந்தவள். யோவானின் தகப்பன் அபியா என்னும் ஆசாரிய வகுப்பில் வந்தவன். எலிசபெத் என்றால் என் தேவன் வாக்குத்தத்தங்களின் தேவன் என்று அர்த்தம். எலிசபெத் தன் தேவைகளுக்கெல்லாம் மனிதரை சார்ந்து வாழாமல் வாக்குத்தத்தம் பண்ணிய தேவனை சார்ந்து வாக்குத்தத்தத்தைப் பிடித்து, வாக்குத்தத்தம் பண்ணியவர் உண்மையுள்ளவர் என்று எண்ணி வாழ்ந்தாள். வயது சென்றவளாய் இருந்தாள். சூழ்நிலைகள் வித்தியாசமாக இருந்தது. தேவைகள் சந்திக்கப்பட சாத்தியக்கூரே இல்லை. அற்புதங்கள் நடக்க அனுகூலம் இல்லை. ஆனால் எலிசபெத் வாக்குத்தத்தம் பண்ணிய தேவன் உண்மை உள்ளவர். அவர் அப்படியே செய்வார் என்று நினைத்து வாழ்ந்தாள்.

சகரியா என்றால் என் தேவன் உடன்படிக்கையைக் காக்கிறவர் என்று அர்த்தம். ஆரோன் வம்சத்துக்கும் ஊழியம் செய்த ஊழியக்காரருக்கும் எவ்வளவோ உடன்படிக்கைகளை கர்த்தர் செய்து வைத்திருக்கிறார். அதையெல்லாம் கர்த்தர் நிறைவேற்றுவார். வயது சென்றவனாயிருந்தாலும் எனக்கு உடன்படிக்கையையும், கிருபையையும் காக்கிற தேவன் நிச்சயமாய் என் குடும்பத்தை ஆசீர்வதித்து, ஆசீர்வாதமான குழந்தையை கொடுப்பார் என்று விசுவாசித்திருந்தான். தாயும், தகப்பனும் ஆவிக்குரியவர்களாய் இருந்தபடியால் பிறக்கும் பிள்ளைக்கு யோவான் என்று பேரிட்டார்கள். யோவான் என்றால் யெகோவாவின் அருளைப்

பெற்றவன். The Gift of God. யோவானின் அப்பாவும், அம்மாவும் ஆவிக்குரியவர்களாய் இருந்ததினாலே பிறக்கும் போதே யோவான் யெகோவாவின் அருளை, கிருபையைப் பெற்றிருந்தான். அன்பு தேவ பிள்ளைகளே இன்று நீங்களும், நானும் கர்த்தருக்காக ஆயத்தப்பட வேண்டுமானால் நம் அப்பா அம்மா அதாவது சபையில் உள்ள ஆவிக்குரிய அப்பா, அம்மா யார் என்பது மிகவும் முக்கியம். அதாவது சபையில் உள்ள போதகரும், போதகரின் மனைவியும் மிக முக்கியம். அவர்களைப் பொறுத்துதான் சபை ஆயத்தப்படும். கிறிஸ்துவுக்குள் பதினாயிரம் உபாத்தியாயர்கள் உங்களுக்கு இருந்தாலும் தகப்பன் மார் அநேகர் உங்களுக்கு இல்லையே. கிறிஸ்து இயேசுவுக்குள் சுவிசேஷத்தினால் நான் உங்களைப் பெற்றேன் என்று கொரி 4 : 15ல் பவுல் சொல்லியுள்ளார். பால் கொடுக்கிறதாயானவள் பிள்ளையினிடத்தில் பட்சமாய் இருக்கிறது போல எவ்வளவோ உங்களிடத்தில் பட்சமாய் நடந்து சுவிசேஷத்தை அறிவித்தேன் என்று பவுல் தன்னை தகப்பனாகவும், தாயாகவும் தெசலோனிக்கேயர் சபைக்கு அறிமுகப்படுத்துகிறார். அப்படிப்பட்ட ஒரு ஆவிக்குரிய ஊழியக்காரன் மூலம்தான் ஆவிக்குரிய யோவான் ஸ்நானகன்கள் எழும்புகிறார்கள்.

"Human being begets human being
Devine being begets the devine being"

"மாம்சம் மனுஷீகத்தைப் பிறப்பிக்கும்
தெய்வீகம் தெய்வீகத்தைப் பெற்றெடுக்கும்"

என்று ஹோமர் டங்கன் என்ற தேவ மனிதன் சொல்கிறார். ஒருபோதும் மாம்சீகம் ஆவிக்குரிய பிள்ளையைப் பெற்றெடுக்க முடியாது. அல்லது ஆவிக்குரிய ஊழியக்காரன் மத்தியிலே மனுஷீகமாய் தங்களுடைய ஆசை இச்சைகளை நிறைவேற்றுகிறவர்கள் இருக்கவே முடியாது. இதை வாசித்துக் கொண்டிருக்கும் சகோதர! சகோதரி! நீங்கள் வருகைக்கு ஆயத்தப்பட வேண்டுமானால் நல்லதோர் ஆவிக்குரிய சூழ்நிலையிலே, நல்லதோர் ஆவிக்குரிய பெற்றோரிடம் வளர்க்கப்பட வேண்டும் என ஆவியானவர் கற்றுக் கொடுக்கிறார். ஆவிக்குரிய சபையிலே, நல்ல ஆவிக்குரிய பெற்றோரிடம் வளர்க்கப்பட்டால் நாம் நல்லதோர் தேவ மக்களாய் கர்த்தருடைய வருகைக்கு ஆயத்தப்படுவோம். "பொல்லாத வேலையாட்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள். நாய்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள். சுன்னத்துக்காரருக்கு எச்சரிக்கையாயிருங்கள்" என்று பிலி 3 : 2-ல் பவுல் சொல்லியுள்ளார். தேவபிள்ளைகள் ஆகாத ஐக்கியங்களை தெரிந்து கொள்ளாதபடி நல்ல ஐக்கியத்தில் வாழவே இப்படி எழுதுகிறார். பின் மாற்றக்காரருக்கு விலக்கி காத்துக் கொள்ள

வேண்டும். இந்த யோவான் ஸ்நானகன் நல்ல ஆவிக்குரிய சூழ்நிலையில் வளர்க்கப்பட்டது போல் நாமும் ஆவிக்குரிய சூழ்நிலையை தெரிந்து கொள்வோமாக.

## 2. ஆவியின் நிறைவிலே தன்னை ஆயத்தப்படுத்தினான் :

"அவன் கர்த்தருக்கு முன்பாகப் பெரியவனாயிருப்பான். திராட்ச ரசமும் மதுவும் குடியான். தன் தாயின் வயிற்றிலிருக்கும் போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருந்தான்". (லூக் 1 : 15) இந்த யோவான் ஸ்நானகன் தன் தாயின் வயிற்றில் இருக்கும் போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு தன் வாழ்க்கையை தொடங்கும் போதே ஆவியில் தொடங்குகிறான் என்று ஆவியானவர் கூறுகிறார். கலாத்தியர் சபை ஆவியிலே தொடங்கி மாம்சத்திலே முடிக்கப் பார்த்தார்கள். இன்று சிலர் மாம்சத்திலே தொடங்கி மாம்சத்திலே முடிப்பார்கள். ஆவியில் தொடங்கினால் தானே ஆவியில் முடிக்க முடியும். லூக் 1 : 41ல் "எலிசபெத்து மரியாளுடைய வாழ்த்துதலைக் கேட்ட பொழுது அவளுடைய வயிற்றிலிருந்த பிள்ளை துள்ளிற்று. எலிசபெத்து பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டாள்" என்று பார்க்கிறோம். யோவானின் தாய் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருந்தாள். லூக் 1 : 67ல் "அவனுடைய தகப்பனாகிய சகரியா பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு" என்று பார்க்கிறோம். யோவானுடைய தகப்பனும் பரிசுத்த ஆவியினால் நிரம்பி இருந்தான். யோவானும் தாயின் வயிற்றில் இருக்கும் போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருந்தான். தான் தாயின் வயிற்றில் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு துள்ளினான். இயேசுவின் தாய் மரியாள் எலிசபெத்தை வாழ்த்திய போது யோவான் தன் தாயின் வயிற்றிலிருந்து துள்ளினான். ஆவியைப் பெறுகிறவர்கள் மூன்று அனுபவங்கள் பெறுவார்கள்.

- ★ To Receive the Holy Spirit - ஆவியைப் பெறுவார்கள்.
- ★ Be filled with the Holy Spirit - ஆவியில் நிரம்புவார்கள்.
- ★ Over flowing with the Holy Spirit - ஆவியில் நிரம்பி வழிவார்கள்

பெற்ற பிற்பாடு அந்த ஆவியினாலே நிறைகிற அனுபவம் நிறைந்த பிற்பாடு நிரம்பி வழிகிற அனுபவம்.

### பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுதல்: (To receive the Holy Spirit)

அப் 1 : 4 அப் 10 : 46ல் பெந்தேகோஸ்தே நாளிலும், கொர்நெலியு வீட்டிலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். பரிசுத்த ஆவியானவர் பொழிந்தருளினார். எல்லோரும் பரிசுத்த ஆவியை பெற்றுக்

கொண்டார்கள். ஒரு சின்னப் பாத்திரத்தில் ஒரு பெரிய பாத்திரத்தில் இருக்கும் தண்ணீரை சாய்த்து ஊற்றுவது போல நம் ஆண்டவராகிய பெரிய பாத்திரம் சிறிய பாத்திரங்களாகிய 120 பேர் மேலே சாய்த்து விட்டார். ஆவியானவர் ஒவ்வொரு சிறிய பாத்திரமாகிய 120 பாத்திரத்திலும் ஊற்றப்பட்டபோது அவர்கள் அந்நிய பாஷையில் பேசினார்கள். பரிசுத்த ஆவியை பெற்றதற்கு முதல் அடையாளம் அந்நிய பாஷையில் பேசினார்கள். பரிசுத்த ஆவியை பெற்றதற்கு முதல் அடையாளம் அந்நிய பாஷை. இது மாறாத சத்தியம்.

### பரிசுத்த ஆவியில் நிறைவது :

பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்ட பின்பு ஒரே பாத்திரத்திலிருந்து ஜீவத்தண்ணீர் சாய்ந்து விழும்போது கீழே இருக்கிறசிறிய பாத்திரங்களாகிய நாம் சில நாட்கள் கழித்து எபே 5 : 18ன் படி "துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல் ஆவியிலே நிறைந்து" - Be filled with the Holy Spirit நிரம்ப ஆரம்பிப்போம். அன்பு தேவ பிள்ளைகளே! இன்று நமக்கு ஆவியின் நிறைவு வேண்டும்.

ஸ்தேவான் சபையின் மூப்பன். அவன் ஆவியினால் நிரம்பி இருந்தான். கூடி இருந்த ஜனங்கள் மூர்க்கமடைந்து பல்லைக் கடித்து கையில் கல்லோடு இருந்த போதிலும் ஸ்தேவான் பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவனாய் வானத்தை அண்ணார்ந்துப் பார்த்து தேவனுடைய மகிமையையும், தேவனுடைய வலது பாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும், வானங்கள் திறந்திருப்பதையும் கண்டான். சுற்றியிருந்த ஜனங்களைப் பார்க்கவில்லை. ஆவியின் நிறைவு உள்ளவர்கள் விசுவாசக் கண்களால் பார்ப்பார்கள். உங்கள் ஊழியங்களில் வரும் நிந்தைகள், பாடுகள், வேதனைகள், கேலியான பேச்சுக்கள் எதுவாயிருந்தாலும் பரிசுத்த ஆவியில் நிரம்பி ஜெபியுங்கள். கர்த்தருடைய ஊழியத்தில் தொடர்ந்து நிலைத்திருப்பீர்கள். என்னுடைய ஊழியப் பாதையில் வரும் போராட்டங்கள் எல்லாவற்றிற்கும், விசுவாசிகளை நேசிக்கும்படியான ஆவியின் நிறைவை கர்த்தர் எனக்குக் கொடுத்திருப்பதால் தான் நானும் ஊழியத்தில் நிலைத்திருக்க முடிகிறது. சத்துருக்களை நேசியுங்கள். உங்களை சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள். பரிசுத்த ஆவியின் நிறைவு உள்ளவர்கள்தான் இப்படி இருக்க முடியும்.

### பரிசுத்த ஆவியில் நிரம்பி வழிதல் :

மூன்றாவதாக பரிசுத்த ஆவியில் நிரம்பி வழிகிற அனுபவம். சங். 23 : 5ல் "என் சத்துருக்களுக்கு மத்தியில் எனக்கொரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர். என் பாத்திரம் நிரம்பி வழிகிறது" என்று தாவீது சொல்லியுள்ளார். Overflowing with the Holy Spirit. ஆவியின் நிறைவில்தான் விசுவாசம்

வீறுகொண்டு எழும்பும். எதிர்மறையான சூழ்நிலைகளிலும் அனுகூலமான வாசல் திறந்திருக்கிறது என்று நீங்கள் பேசுவீர்கள். உங்கள் ஜீவ காலமெல்லாம் நன்மையும் கிருபையும் தொடரும். யோவான் ஸ்நானகன் தன் வாழ்வை ஆவியில் துவங்கினான். ஆவியின் நிறைவில் தன்னை ஆயத்தப்படுத்தினான்.

## 3. ஆள் இல்லாத வனாந்தரம் சென்று தன்னை ஆயத்தப் படுத்தினான் :

"அந்தப் பிள்ளை வளர்ந்து ஆவியிலே பலங்கொண்டு, இஸ்ரவேலுக்குத் தன்னைக் காண்பிக்கும் நாள்வரைக்கும் வனாந்தரங்களிலே இருந்தான்" என்று லூக் 1 : 80ல் சொல்லப்பட்டுள்ளது. யோவான் ஸ்நானகன் கொஞ்சம் வளர்ந்த பின் வனாந்தரம் சென்று தன்னை ஆயத்தப்படுத்தினான். ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ந்து உபயோகப்பட வேண்டிய கர்த்தருடைய பிள்ளைகளுக்கு வேண்டிய முக்கியமான தகுதி இதுதான்.

பழைய ஏற்பாட்டில் ஈசாக்கு மாலை வேளையில் வனாந்தர மார்க்கமாய் போய் யெகோவா தேவனைக் குறித்து தியானம் பண்ணினார். அவனுடைய ஊழியக்காரன் அவனுக்கு பெண் பார்க்க சென்றாலும் ஈசாக்கு தன்னை ஆயத்தப்படுத்தும்படி வனாந்தரத்திற்குச் சென்று கர்த்தருடைய வார்த்தைகளை தியானம் பண்ணினான். ஆகவே ரெபெக்காளைத் தனக்கு மனைவியாக்கிக் கொண்டு அவளை நேசித்தான். ஈசாக்கு தன் தாய்க்காகக் கொண்டிருந்த துக்கம் நீங்கி ஆறுதல் அடைந்தான் என்று ஆதி 24 : 67-ல் சொல்லப்பட்டுள்ளது. ஈசாக்குக்குக் கிடைத்த ஆசீர்வாதம் ஆறுதல் குடும்ப வாழ்க்கையை ஆவியிலே தொடங்கினான். 20 வருடம் குழந்தையில்லாமல் இருந்தும் அவர்கள் சந்தோசமாகவே இருந்தார்கள்.

இயேசு கிறிஸ்துவும் போஜனம் பண்ணுவதற்கு சமயம் இல்லாதபடியினால் வனாந்தரமான இடத்திற்கு சற்றுப் போவோம் வாருங்கள் என்று தன் சீஷர்களை அழைத்துச் சென்றார். இரவெல்லாம் ஜெபித்தார். பகலிலே ஜனங்கள் மத்தியில் வந்து பிரசங்கம் பண்ணி அற்புத அடையாளங்களையும் அவர் செய்தார். கலா 1 : 15, 16-ல் பவுல் தன்னை ஆயத்தப்படுத்தின இடம் அரேபியாவின் வனாந்தரம் என்று அறிவோம். மணவாட்டியாகிய சூலமித்தியாள் கூட நேசருடைய மார்பிலே சாய்ந்து வனாந்தரத்திலிருந்து வருகிறாள். யோவான் 1 : 23-ல் வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனின் சத்தமாயிருக்கிறேன் என்று யோவானைக் குறித்து வேதம் திட்டமாய்ச் சொல்லுகிறது. லூக் 3 : 2-ல் "அன்னாவும், காய்பாவும் பிரதான ஆசாரியராய் இருந்த காலத்தில்

வனாந்தரத்திலே சகரியாவின் குமாரனாகிய யோவானுக்கு தேவனுடைய வார்த்தை உண்டாயிற்று" என்று பார்க்கிறோம்.

400 வருடங்களாக தேவ சத்தம் இல்லாதிருந்த அந்த ஜனங்களுக்கு வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தமாக இந்த யோவான் ஸ்நானகன் வந்தான். சத்தம் என்கிறவார்த்தை வேதம் முழுவதும் 400 முறைவருகிறது. இரண்டு வித சப்தங்கள் வேதம் கூறுகிறது. (1) மெல்லிய சத்தம் (2) இடி முழக்க சத்தம் இந்த இரண்டு சத்தமாகவும் இந்த யோவான் ஸ்நானகன் காணப்பட்டான். ஒரு சில நேரம் ஆறுதலின் வார்த்தை, ஒரு சில நேரம் பாவங்களைக் கடிந்து கொள்கிற இடிமுழக்க வார்த்தை. எப்படியும் அவன் ஜனங்களுக்கு ஆசீர்வாதமாக இருந்தான். யோவான் வனாந்தரத்திலே தன்னை ஆயத்தப்படுத்தியது போல நாமும் ஒவ்வொரு நாளும் தனியே தேவ சமூகத்திலே அமர்ந்து நம்மை ஆயத்தப்படுத்த வேண்டும். தனிமையில் தேவ சமூகப் பழக்கம் உள்ளவன் ஆயத்தப்படுத்தப்பட்ட பாத்திரம்தான்.

## 4. ஆவியின் எளிமையிலே தன்னை ஆயத்தப்படுத்தினான் :

"யோவான் ஒட்டகமயிர் உடையைத் தரித்து தன் அரையில் வார்க்கச்சையைக் கட்டிக் கொண்டவனாயும், வெட்டுக்கிளியையும், காட்டுத் தேனையும் புசிக்கிறவனாயும் இருந்தான்". மாற்கு 1 : 6 இந்த யோவான் ஆவியில் எளிமை உள்ளவன். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மலைப்பிரசங்கம் பண்ணும் போது முதலில் சொன்ன வார்த்தை, "ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள். பரலோக ராஜ்யம் அவர்களுடையது" என்று சொன்னார். இந்தக் காலத்தில் ஜிவிக்கிற விசுவாசிகளும் ஊழியம் செய்கிறவர்களும் ஆவியில் எளிமை உள்ளவர்களாய் இருக்கிறோமா என்று பார்க்க வேண்டும். ஆவியில் எளிமை மற்றவர்களால் பார்க்க முடியும். முதலாவது ஆகாரத்தில் எளிமையுள்ளவர். பின்பு உடையில் எளிமையுள்ளவர் என்று பார்க்கிறோம். வெட்டுக்கிளி, காட்டுத்தேன் இது ஏழைகளின் ஆகாரம் என்று வேதபண்டிதர்கள் சொல்வார்கள். ஒட்டகமயிர் உடையை தரித்திருந்தார். ஒரு தீர்க்கதரிசியின் சீருடை என்று வேதபண்டிதர் சொல்கிறார்கள். வேதத்திலே பல்வேறு வஸ்திரங்களைக் குறித்து வாசிக்கிறோம். (லூக் 16 : 19)ல் இரத்தாம் பரமும், விலையேறப்பெற்ற வஸ்திரமும் ஐசுரியவானின் வஸ்திரமாகும். மத் 23 : 5ல் வேதபாராகர், நீண்ட அங்கிகளை உடுத்தியிருந்தார்கள். காப்பு நாடாக்களை அகலமாக்கியிருந்தார்கள். இயேசு கிறிஸ்து தமது உடன் சீஷர்களை மாதிரியே உடை உடுத்தியிருந்தார். வித்தியாசமான உடை

உடுத்தியிருந்தால் அவரைக் கண்டுபிடிப்பது இலகுவாக இருந்திருக்கும். அதனால் யூதாஸ் முத்தத்தினால் இயேசுவைக் காட்டிக்கொடுத்தான். ஏனெனில் இயேசுகிறிஸ்து ஒரு சாதாரண மனிதனைப் போல் உடை உடுத்தியிருந்தார் என்று புரியமுடிகிறது. லூக் 7 : 25-ல் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எதைப்பார்க்க வனாந்திரத்திற்கு போனீர்கள்? மெல்லிய வஸ்திரம் தரித்த மனுஷனையோ? மெல்லிய வஸ்திரம் தரித்தவர்கள் அரசர் மாளிகையில் இருக்கிறார்கள் என்றார். ராஜாக்களின் வஸ்திரம் மெல்லிய வஸ்திரம் யாத் 28 : 4, 5-ல் ஆசாரியர்கள் பஞ்சு நூல், இளநீல நூல் போன்ற நூல்களான வஸ்திரங்களை உடுத்தியிருந்தார்கள். பரிசுத்தமும், அலங்காரமுமான வஸ்திரம் என்று வேதம் சொல்கிறது.

மேலே சொன்ன எந்த வஸ்திரமும் யோவான் ஸ்நானகனிடத்தில் இல்லை. அவனுடைய வஸ்திரம் ஒட்டகமயிர் உடை, பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் தீர்க்கதரிசியின் சீருடை அதுதான். அன்பு சகோதரா! சகோதரி! இக்காலத்தில் வாழும் உங்களுக்கும், எனக்கும் வேதம் திட்டமாய் கூறுகிறது. I தீமோ 2 : 10ல் தகுதியான வஸ்திரத்தினால் தங்களை அலங்கரித்துக் கொள்ள வேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது. ஊழியக்காரனுக்கு தகுந்த வஸ்திரம் அணிந்து கொள்ள வேண்டும். அதேபோல் ஒவ்வொரு தேவபிள்ளைகளும் தகுதியான வஸ்திரங்கள் அணிய வேண்டும். இப்படிப்பட்ட வெளிப்பாடு நமக்கு இருக்குமானால் (1) ஆடையில் எளிமை (2) ஆகாரத்தில் எளிமை (3) ஆவியில் எளிமை உள்ளவர்களாய் இருப்போம். யோவான் ஸ்நானகன் ஆவியின் எளிமையில் தன்னை ஆயத்தப்படுத்தினான். அதனால் தான் அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும் என்று சொல்லுகிறான். அவர் பாதரட்சையின் வாரை குனிந்து அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரவான் அல்ல என்று சொல்லுகிறான். நீங்களும், நானும் ஆவியில் எளிமை உள்ளவர்களாய் காணப்படுவோம். ஆசீர்வாதத்தை சுதந்தரிப்போம்.

## 5. அடிமையாக ஒப்புக் கொடுத்து ஆயத்தப்படுத்தினான் :

“என்னிலும் வல்லவர் ஒருவர் எனக்குப்பின் வருகிறார். அவருடைய பாதரட்சையின் வாரைக் குனிந்து அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல” (மாற்கு 1 : 7) என்று சொல்லி யோவான் அடிமையாகத் தன்னை ஒப்புக்கொடுத்து ஆயத்தப்படுத்தினான். பாலஸ்தீனா தேசத்திலே தன்னுடைய வீடுகளுக்கு வருகிற விருந்தாட்களின் காலிலுள்ள செருப்புகளின் வாரை அடிமைகளாக வேலை செய்யும் வேலைக்காரர்கள் அவிழ்த்து விட வேண்டும். அவிழ்த்த பிற்பாடு மற்றொரு அடிமை விருந்தாளிகளின் காலைக் கழுவி சுத்தப்படுத்துவான். இச்செயல் அந்த

வீட்டுக்காரர்கள் வந்திருப்பவர்களுக்கு கொடுக்கும் மரியாதையாகும். அந்த அளவிற்கு யோவான் ஸ்நானகன் தன்னைத் தாழ்த்தினான். நான் இயேசுவுக்கு அடிமை என்று ஒப்புக் கொடுத்தான். ஆனால் அதைவிட இயேசு அடிமையின் ரூபமெடுத்து மனுஷ சாயலானார்.

பவுல் ரோமர் 1 : 1ல் இயேசு கிறிஸ்துவுடைய ஊழியக்காரனும், அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவனும், தேவனுடைய சுவிசேஷத்திற்காகப் பிரித்தெடுக்கப்பட்டவன் என்று தன்னை எழுதுகிறார். Doulos என்ற கிரேக்க வார்த்தைக்கு கொத்தடிமை அல்லது ஊழியன் என்று அர்த்தம். எந்த ஒரு உரிமையும் இல்லாதவன். காலம் முழுவதும் அடிமையாகவே இருப்பவன். எந்த ஒரு விடுதலையும் இல்லாதவன். எந்த வேலையும் செய்ய இவன் மனமுள்ளவன். இவனுக்கு ஓய்வோ, விடுதலையோ கிடையாது. யோவான் ஸ்நானகனும் இப்படிப்பட்ட கீழ்படிதலுள்ள அடிமையாக ஒப்புக் கொடுத்தான். அதனால் தான் இயேசு: ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான் ஸ்நானகனைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை என்று மத் 11 : 11ல் சொல்லியுள்ளார். மேன்மைக்கு முன்னானது தாழ்மை. தாழ்மை உள்ளவர்களுக்குத் தேவன் கிருபை அளிக்கிறார். அன்பு தேவ பிள்ளைகளே! உங்களுக்கும் இப்படிப்பட்ட ஒரு ஆவி இருக்குமானால் உங்களைக் கர்த்தர் உயர்த்துவார். ஆசீர்வதிப்பார். இணங்குதல் பெரிய குற்றத்தை மறைத்துப்போடும். இப்படிப்பட்ட ஆவி தன்னை அடிமையாக முற்றிலும் ஒப்புக் கொடுத்தவர்களுக்குத்தான் வரும். நம்மில் சிலருக்கு மேடையில் நின்று மைக் பிடித்து பாடவும், பிரசங்கிக்கவும் ஆவி இருக்கும். ஆனால் நமது கூட்டம் நடக்கும் இடத்தை சுத்தம் செய்ய ஆவி உண்டா?

## 6. அர்ப்பணத்திலே தன்னை நசரேயனாக ஆயத்தப்படுத்தினான் :

"அவன் கர்த்தருக்கு முன்பாகப் பெரியவனாயிருப்பான். திராட்சரசமும், மதுவும் குடியான். தன் தாயின் வயிற்றில் இருக்கும் போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பான்" (லூக் 1 : 15) என்று யோவானைக் குறித்து வேதம் சொல்கிறது. இந்த யோவான் ஸ்நானகன் தன் தாயின் வயிற்றில் இருக்கும் போதே அர்ப்பணிப்போடும், பிரதிஷ்டையோடும் உள்ளவன். தன் தாயின் வயிற்றில் இருக்கும் போதே நசரேயவிரதம் உள்ளவன். கிறிஸ்தவ வாழ்க்கையில் அர்ப்பணிப்பு இல்லாவிடில் வாழ்க்கையில் ஒன்றுமே முன்னேறமுடியாது. அற்பம் + அற்பணம் = அற்புதம் என்று ஒரு வேத பண்டிதர் கூறுகிறார். தன்னை அற்பமாக எண்ண வேண்டும். பின்பு தன்னை அடிமையாக அர்ப்பணிக்க வேண்டும். இவை இரண்டும். சேர்ந்து அற்புத வாழ்வுக்கும் அற்புத உயர்வுக்கும் நம்மை அழைத்துச் செல்லும்.

யோவான் ஸ்நானகன் ஆவியில் எளிமையோடும், தன்னை அடிமையாக ஒப்புக் கொடுத்ததுமல்லாமல் அர்ப்பணத்தில் தன்னை நசரேயனாக பிரதிஷ்டை செய்தவன். நசரேயன் மூன்று காரியத்திற்கு விலகி இருக்க வேண்டும்.

1. திராட்ச ரசம் குடிக்கக் கூடாது.
2. பிணத்தைத் தொட்டுத் தன்னை தீட்டுப்படுத்தக் கூடாது.
3. சவரகன் கத்தி தலையிலேப் படக்கூடாது.

இந்த மூன்றுக்கும் தன்னை விலக்கிக் காத்துக் கொள்ள வேண்டும். இதுதான் நசரேய விரதம். புதிய ஏற்பாட்டில் கூட தன்னை விலக்கிக் காத்துக் கொள்ளக்கூடிய நசரேய விரதம் உண்டு.

1. விக்கிரகாராதனைக்கு விலகி ஓடுங்கள். (1 கொரி 10 : 14)
2. வேசித்தனத்திற்கு விலகி ஓடுங்கள் (1 கொரி 6 : 18)
3. பண ஆசைக்கு விலகி ஓடுங்கள் (I தீமோ 6 : 10, 11)

என்று புதிய ஏற்பாடு ஒரு புதிய நசரேய விரதத்தை நமக்கு வலியுறுத்துகிறது. நசரேயன் மூன்று காரியத்தில் விலகி இருந்தது போல் அன்பு தேவபிள்ளைகளே! புதிய ஏற்பாட்டில் வாழும் நாமும் ஆவிக்குரிய காரியத்தில் இந்த மூன்றிற்கும் விலகி ஓடவேண்டும். விக்கிரகாராதனை நரகல் என்று வேதம் சொல்லுகிறது. ஒன்றுக்கும் உதவாத விக்கிரகம் என்று போட்டிருக்கிறது. விக்கிரகத்துக்குப் படைத்தவைகள் பேய்களுக்குப் பலியிடுவது என்று சொல்லப்பட்டுள்ளது. பண ஆசை எல்லாத் தீங்குக்கும் வேராயிருக்கிறது. பணத்தை சம்பாதிப்பது நம்முடைய நோக்கமல்ல. இயேசுவை சம்பாதிப்பதுதான் நமது குறிக்கோளாய் இருக்க வேண்டும். யோவான் ஸ்நானகன் அர்ப்பணத்திலே நசரேயனாய் இருந்தான். காசு போதுமே என்று பாடல் பாடும் கூட்டத்தின் மத்தியில் இயேசு போதுமே என்ற அர்ப்பணிப்பு உள்ளவன்.

## 7. ஆண்டவருக்காக சாட்சியாக வாழ்ந்தான் :

"தேவனால் அனுப்பப்பட்ட ஒரு மனுஷன் இருந்தான். அவன் பேர் யோவான். அவன் தன்னால் எல்லாரும் விசுவாசிக்கும்படியாக அந்த ஒளியைக் குறித்துச் சாட்சிக் கொடுக்கச் சாட்சியாக வந்தான்" என்று யோவான் 1 : 6, 7ல் பார்க்கிறோம். அவன் ஆண்டவருக்கு சாட்சியாக வாழ்ந்து தன்னை ஆயத்தப்படுத்தினான். கிறிஸ்தவ வாழ்க்கையில் சாட்சியை இழந்து போனால் எல்லாவற்றையும் இழந்து விடுவோம். அதனால் தான் அபிஷேகம் ஊற்றப்படும் போது "பூமியின் கடைசி பரியந்தமும் எனக்கு சாட்சியாயிருப்பீர்கள்" என்று ஆண்டவர் சொன்னார்.

எந்த இடத்திலும், எந்த சூழ்நிலையிலும், எந்த ஜனத்தின் மத்தியிலும், எந்த வயதிலும் நாம் சாட்சியாக இருக்க வேண்டும். நம்மைப் பற்றிய நல்ல சாட்சி ஆமையாக ஊர்ந்து போகும். ஆனால் நம் வாழ்க்கையில் ஒரு சிறு துர் சாட்சி உண்டாகுமானால் ஆகாய விமானம் கடல் கடந்து 1000 km வேகத்தில் போவது போல் வெகு துரிதமாக பரவிவிடும். தேவ பிள்ளையின் வாழ்க்கையில் எவ்வளவோ ருசியுள்ள நல்ல காரியங்கள் இருந்தாலும் ஒரு சிறு தவறு நடந்து விட்டால் மக்கள் விரும்பமாட்டார்கள். பிரசங்கி 10 : 1 "செத்த ஈக்கள் தைலக்காரனுடைய பரிமள தைலத்தை நாறிக் கெட்டுப் போகப் பண்ணும். ஞானத்திலும், கனத்திலும் பேர் பெற்றவனைச் சொற்ப மதியீனமும் அப்படியே செய்யும்" என்று சாலமோன் ஞானி சொல்லியுள்ளார். அன்பு சகோதரா! சகோதரி! நமக்குள் இருக்கும் கிருபை வரங்கள் கூட மிக விலையேறப்பெற்றது. நமது செயல்களிலே ஒரு சின்ன சாட்சிக்கேடு வருமானால் உள்ளே இருக்கும் அபிஷேக தைலத்தை பிறர் பார்த்து ருசிக்க மறுத்து விடுவார்கள். செத்த ஈ விழுந்த பரிமள தைலத்தை பிறர் பயன்படுத்தாதது போல நம்மை யாரும் பயன்படுத்த விரும்ப மாட்டார்கள். நாம் சாட்சி கேடாய் நடந்து ஜனங்கள் நம்மில் விருப்பம் இல்லாமல் மாற்றிவிடாதபடி நாம் நம்மைக் காத்துக் கொள்வோம். நம் சாட்சியைக் காத்துக் கொள்வோம். அப்பொழுது நமக்குள் இருக்கும் பரிமள தைலமாகிய அபிஷேக தைலம் அநேகருக்கு பிரயோஜனமாய் இருக்கும். நாமும் ஆசீர்வதிக்கப்படுவோம். இவ்விதமாக...

1. ஆவிக்குரிய சூழ்நிலையிலும்
2. ஆவியின் நிறைவிலும்
3. ஆள் இல்லாத வனாந்தரத்திலும்
4. ஆவியில் எளிமையிலும்
5. அடிமையாக ஒப்புக் கொடுத்தும்
6. அர்ப்பணத்தில் நசரேயனாகவும்
7. ஆண்டவருக்கு சாட்சியாக வாழ்ந்தும்

யோவான் தன்னை ஆயத்தப்படுத்தினது போல் நம்மையும் ஆயத்தப்படுத்துவோமாக! மற்றவர்களையும் ஆயத்தப்படுத்துவோமாக!

# 5

## அருள்வாக்கு பெற்ற யோவான் ஸ்நானகன்

**"நானும் இவரை அறியாதிருந்தேன். ஆனாலும் ஜலத்தினால் ஞானஸ்நானங் கொடுக்கும்படி என்னை அனுப்பினவர் ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்பாயோ, அவரே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானங் கொடுக்கிறவர் என்று எனக்குச் சொல்லியிருந்தார்". (யோவான் 1 : 33)**

ஆரம்ப நாட்களில் வெளிப்பாடு இல்லாதவராக இந்த யோவான் வாழ்ந்து கொண்டிருந்தார். ஆகவேதான் யோவான் இந்த இயேசுவை அறியாதிருந்தேன் என்று தேவ பிள்ளைகளுக்குக் கூட அநேக அறியாமைகள் இருக்கிறதை நாம் பார்க்க முடியும். ஆகவேதான் ஆண்டவர் "என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரம் ஆகிறார்கள்'' என்று சொல்லுகிறார். ''என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சிறைப்பட்டுப் போகிறார்கள்" என்று வேதம் சொல்லுகிறது.

கர்த்தருடைய வேதத்திலிருந்து வசனத்தின் வெளிப்பாடுகள் உள்ளவரே யோவான் ஸ்நானகன். மல்கியா தீர்க்கதரிசி காலத்திலிருந்து மத்தேயு சுவிசேஷம் எழுதப்பட்ட காலம் வரைக்கும். அதாவது யோவான் ஸ்நானகன் உலகத்தில் தோன்றும் வரைக்கும் சுமார் 400 ஆண்டுகள் எந்த ஒரு தீர்க்கதரிசியும் எழும்பவில்லை. எந்த ஒரு ஆசாரியனுக்கும் கர்த்தருடைய வார்த்தை வெளிப்பாடாய் கிடைக்கவும் இல்லை. ஆனால் லூக் 3 : 2-ல் அன்னாவும், காய்பாவும் பிரதான ஆசாரியராய் இருந்த காலத்தில் வனாந்திரத்திலே சகரியாவின் குமாரனாகிய யோவானுக்கு தேவனுடைய வார்த்தை உண்டாயிற்று என்று பார்க்கிறோம். ஏற்கனவே எழுதப்பட்ட பழைய ஏற்பாட்டிலிருந்தும் தீர்க்க தரிசனங்களிலிருந்தும் தன்னைக் குறித்து எழுதியுள்ள வேத வாக்கியங்களை அறிந்து கொண்டார். அந்த வேத வசனத்தின்படி வாழ தன்னை ஒப்புக் கொடுத்தார். அப்பொழுது தேவ அபிஷேகம் அளவில்லாமல் இறங்கியது. மேலும் மேலும் அதிக வெளிப்பாடுகள் பெற்றார். இன்றும் தெய்வீக வாழ்வைக் குறித்தும், உண்மையைக் குறித்தும் கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு வெளிச்சத்தையும், வெளிப்பாடுகளையும் தருகிறார். ஒவ்வொரு விசுவாசிக்கும் ஊழியருக்கும் சபையின் தலைவர்களுக்கும் தேவ வார்த்தையின் வெளிப்பாடுகள் அவசியம்.

குருடனுக்கும் கண்பார்வையில்லாமல் கண்மூடியிருப்பதால் அவனுக்கு எல்லாமே இருளாகத்தான் தெரியும். தானும் குழியில் விழுந்து தன்னைப் பின்பற்றுபவர்களையும் குழயில் விழப் பண்ணுவான். அன்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூட வேத பாரகரையும் பரிசேயரையும் பார்த்து "குருடருக்கு வழிகாட்டுகிற குருடராய் இருக்கிறீர்கள்" என்று சொன்னார். இருவருக்கும் கண்களிலே ஒளி இல்லாததினால் இருவரும் குழியிலே விழுவீர்கள் என்று சொன்னார். தோற்றத்தின் படியேயும், உலகப் பிரகாரமான அமைப்புகளின்படியேயும் இன்று அநேக கிறிஸ்தவ ஸ்தாபனங்களும், ஊழியக்காரர்களும், விசுவாசிகளும் போய்க் கொண்டிருப்பதினால் அநேகர் பாவம் என்கிறபடுகுழியிலும், சாபம் என்கிறபடுகுழியிலும், முக்கியமாக நரகம் என்கிறபடுகுழியிலும் விழுந்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் குருட்டாட்டத்தில் செல்லுகிற ஊழியங்களும் உண்டு. வசன வெளிப்பாடுகளில் இயக்கப்படும் ஊழியங்களும் உண்டு. இதை வாசித்துக் கொண்டிருக்கிறதேவ பிள்ளைகளே யோவானுக்குக் கொடுத்த அதே வெளிப்பாடுகளை பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கும் எனக்கும் கொடுத்து நம்மைப் பாதுகாக்க விரும்புகிறார். யோவான் ஸ்நானகன் தன்னுடைய ஜீவியத்திலே 7 விதமான வெளிப்பாடுகளைப் பெற்றிருந்தார். இந்த ஏழு வித வெளிப்பாடுகளும் யோவான் ஸ்நானகனுடைய வாழ்க்கையில் இருந்ததால் அவன் வாழ்க்கை ஆசீர்வாதமாக இருந்தது. அவன் அநேகருக்கு ஆசீர்வாதமாக இருந்தான். பணிவிடை ஓட்டத்தை வெற்றியாக முடித்தான். நீங்களும் உங்கள் வாழ்க்கையை வெற்றியின் பாதையில் நடத்த கீழே வரும் 7 வெளிப்பாடுகள் உடையவர்களாய் வாழுங்கள்.

## 1. இயேசுவின் வருகையைக் குறித்த வெளிப்பாடு :

யோவான் ஸ்நானகன் இந்த பூமியிலே வாழ்ந்த நோக்கம் உத்தமமான ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும் படியாகத்தான். ''பிதாக்களுடைய இருதயங்களைப் பிள்ளைகளிடத்திற்கும், கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களுடைய ஞானத்திற்கும் திருப்பி, உத்தமான ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும்படியாக அவன் எலியாவின் ஆவியும் பலமும் உடையவனாய் அவருக்கு முன்னே நடப்பான்" என்றான் (லூக் 1 : 17)

யோவான் ஸ்நானகன் முதலாவது பெற்ற வெளிப்பாடு இயேசு கிறிஸ்துவின் முதல் வருகையைப் பற்றியதாகும். இயேசு கிறிஸ்து முதலாம் வருகையில் மனிதகுமாரனாக, இரட்சகராக இந்த உலகத்தில் பிறந்தவரல்லவா, அவரை ஏற்றுக் கொள்ள, அவரோடு கூட ஊழியம் செய்ய, அவருடைய வருகையை சந்திக்க, ஒரு கூட்ட சீஷர்களை இந்த

யோவான் ஆயத்தப்படுத்தி வெளிப்பாடு பெற்றான். அவர்கள்தான் உத்தமமான ஜனங்கள். இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகையும் ஒருவிதத்தில் இரகசிய வருகைதான். இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் ஒரு இரட்சகராய் பிறந்தாரே அது ஒரு இரகசியம் தான். அந்த வருகையிலே அவர் ஒரு தேவ குமாரனாய், இரட்சகராய் பிறந்தார் என்று உலகத்தில் உள்ள அநேக கோடி ஜனங்களுக்குத் தெரியாது. ஏழு பேருக்கு மாத்திரம் தான் இயேசு இரட்சகராய் உலகத்திற்கு வந்திருக்கிறார் என்று தெரியும். மற்றவர்கள் எல்லாம் தச்சனுடைய குமாரனாக இயேசு பிறந்துள்ளார் என்று நினைத்தார்கள். சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. இவர்தான் தேவகுமாரனும், மனுஷ குமாரனுமாகியவர் என்று அவர்களுக்குத் தெரியாததால் ஏற்றுக் கொள்வில்லை. இவர்தான் இரட்சகர் என்று தெரியாது. பக்கத்திலே கூடவே இருக்கிறார். மரித்தோரை எழுப்புகிறார். மேசியா என்பதை இரட்சகர் என்பதை தேவகுமாரன் என்பதை இதைவிட ரூபகாரப்படுத்த வேறு ஆதாரங்கள் வேண்டியதில்லை. குஷ்டரோகியைத் தொடக்கூடாது. இவரோ தொட்டு சுகமாக்கி விடுகிறார். மரித்தவனை தொட்டு எழுப்பி விடுகிறார். பிறவிக்குருடன் அநேகருக்கு கண்களைத் திறந்தார். ஆனால் அவர் இரட்சகர் என்று யாருக்கும் தெரியாது. ஏழு பேருக்கு மட்டும்தான் தெரியும். ஆகவேதான் இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகையும் இரகசிய வருகை என்று சொல்வேன். இரட்சகரைப் பற்றிய வெளிப்பாடு பெற்றவர்கள் முறையே

★ மரியாள்
★ யோசேப்பு
★ சாஸ்திரிகள்
★ மேய்ப்பர்கள்
★ அன்னாள்
★ சிமியோன்
★ யோவான் ஸ்நானகன் - ஆகியோராகும்.

மரியாளுக்கு, தன் வயிற்றில் பிறந்த பிள்ளையாக இருந்தாலும் இவர்தான் தேவகுமாரன் என்று தெரிந்தது. பின்பு யோசேப்புக்குத் தெரியும். "உன் மனைவியாகிய மரியாளை சேர்த்துக் கொள்ள நீ ஐயப்படாதே. அவளிடத்தில் உற்பத்தியாயிருப்பது பரிசுத்த ஆவியினால் உண்டானது. அவள் ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்" என்று மரியாளை ஏற்றுக் கொண்டது முதல் குமாரனைப் பெறும் அளவும் அவளை அறியாதிருந்தான். தன் மனைவியான கன்னியாகிய மரியாளிடத்தில் இருப்பது தேவ குமாரனாகிய இரட்சகர் என்று யோசேப்புக்குத் தெரியும். பின்பு வருடக்கணக்காக

கிழக்கிந்திய தேசத்திலிருந்து நட்சத்திரம் காணப்பட்ட காலம்வரை சாஸ்திரிகள் பிரயாணம் பண்ணி, பெத்லகேமிற்கு வந்து இயேசுவை தரிசித்து, அவரே மேசியா என்பதை ஏற்றுக் கொள்ள பொன், வெள்ளைப் போளம், தூபவர்க்கம் ஆகியவற்றைக் காணிக்கையாக செலுத்தினார்கள். யூதரக்கு ராஜாவாக பிறந்திரப்பவர் எங்கே? என்று கேட்டார்கள். நான்காவதாக மேய்ப்பர்களுக்கு வெளிப்பாடு இருந்தது. இன்று உங்களுக்காக கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். பிள்ளையை துணியிலே சுற்றி முன்னணையிலே கிடத்தியிருக்கக் காண்பீர்கள். இதுவே உங்களுக்கு அடையாளம். அந்தப்படியே அவர்கள் போய் கண்டு கிறிஸ்துவை தரிசித்தார்கள். ஐந்தாவதாக அன்னாள் என்ற 84 வயது விதவை 7 வருடம் புருஷனோடு வாழ்ந்தவள், புருஷன் இறந்தபிறகு தேவாலயத்தில் தரித்திருந்து இரவும் பகலும் உபவாசித்து ஜெபம் பண்ணி கர்த்தருக்கு ஆராதனை செய்து கொண்டே இருந்தாள். அவள் கிறிஸ்துவை கண்டாள். ஆறாவதாக சிமியோன் என்றபிரதான ஆசாரியனுக்குத் தெரியும். விருத்தசேதனம் பண்ணவும், பிள்ளையை பிரதிஷ்டைப் பண்ணவும் இயேசுகிறிஸ்துவை தேவாலயத்திற்கு கொண்டு வந்தபோது அவன் அந்த பிள்ளையைக் கைகளில் வாங்கி ஆசீர்வதித்து ஜெபிக்கிறான். தேவரீர் சகல ஜனங்களுக்கும் முன்பாக ஆயத்தம் பண்ணின உம்முடைய இரட்சண்யத்தை என் கண்கள் கண்டது. இப்போது அடியேனை சமாதானத்தோடே போக விடுகிறீர் என்று ஆசீர்வதித்து ஜெபிக்கிறான். ஏழாவதாக இயேசு கிறிஸ்து இரட்சகராக, மேசியாவாக இந்த உலகத்திற்கு வந்தார் என்றயோவானுக்குத் தெரியும்.

தேவ பிள்ளைகளே! இயேசு கிறிஸ்துவைக் குறித்த வெளிப்பாடு இந்த யோவானுக்கு இருந்ததால் ஒரு கூட்ட உத்தம ஜனத்தை முதல் வருகைக்கு கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தினான். நாம் இப்போது இரண்டாவது வருகைக்கு ஆயத்தப்பட்டுக் கொண்டிருக்கிறோம். இயேசுவின் இரண்டாவது வருகையும் இரகசிய வருகைதான். இன்று அநேகர் இயேசுவின் இரகசிய வருகையைக் குறித்து அசட்டையாக இருக்கிறார்கள். இயேசு எல்லாரும் பார்க்கத்தான் வருவார். இரகசியமாக வரமாட்டார் என்று தங்களையே ஏமாற்றிக் கொள்கிறார்கள். இயேசு கிறிஸ்து இரகசியமாக வருவார் என்ற நம்பிக்கையில் உள்ளவர்கள் தான் எப்பொழுதும் பரிசுத்தமாய் ஜீவிப்பார்கள். அந்திகிறிஸ்து என்ற அழிம்பன் வந்த பின்புதான் ஆண்டவருடைய வருகை இருக்கும் என்று நினைப்பவர்கள் இஷ்டம்போல் ஜீவிப்பார்கள். அந்தி கிறிஸ்துவின் உபத்திரவத்தில் பரிசுத்தப்படலாம் என்று இன்று அசட்டையாய் வாழுவார்கள். இதைப் படித்துக் கொண்டிருக்கும் சகோதரா! சகோதரி! ஆண்டவரின் வருகையில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமானால் விழிப்பாயிருந்து ஆயத்தப்படுங்கள்.

## 2. ஜனத்தின் பாவத்தைப் பற்றிய வெளிப்பாடு :

"ஏனெனில் நீர் அவளை வைத்துக் கொள்வது நியாயமல்லவென்று யோவான் அவனுக்குச் சொல்லியிருந்தான்" (மத் 14 : 4) யோவான் ஸ்நானகன் ஏரோது அந்திப்பாவுக்குத் தான் இந்த வார்த்தையை சொல்லியிருந்தான். அந்நாட்களில் யூதேயாவை அரசாண்டுக் கொண்டிருக்கும் ஆளுநர்தான் தேசாதிபதியாகிய ஏரோது அந்திப்பா. யோவான் ஒரு தீர்க்கதரிசி என்றும் அவனிடத்தில் பலத்த செய்கைகள் உண்டு என்றும் கண்டான். ஏரோது தன் சகோதரன் பிலிப்பின் மனைவியை வைத்துக் கொண்டான். தன் சகோதரனையும் கொலை செய்து விட்டான். ஏரோது பரம்பரை கொலைகாரப் பரம்பரை. ஏரோது என்பது ராஜாக்களின் குடும்பப் பெயர். அதனால் அந்த பெயர் தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கும். இயேசு கிறிஸ்து இந்த பூமியில் பிறந்த போது ஏரோது பிள்ளையை கொலை செய்ய சட்டமிட்டான். அவனுடைய காலத்திற்கு பின்பு அவன் மகன் அர்கெலாயு பட்டத்திற்கு வந்தான். அவனும் மரித்தான். அவன் மகன்தான் ஏரோது அந்திப்பாவும், ஏரோது பிலிப்புவும் இவன்தான் தன் சகோதரன் ஏரோது பிலிப்புவை கொலை செய்துவிட்டு அவன் மனைவியை தனக்கு மனைவியாக்கிக் கொண்டான். இதைத்தான் நீர் உமது சகோதரன் மனைவியை வைத்துக் கொள்வது நியாயமல்ல என்று யோவான் ஸ்நானகன் சொன்னான். யோவான் ஸ்நானகன் ஜனத்தினுடைய பாவத்தைப் பற்றிய வெளிப்பாடு உள்ளவன். தாவீதின் பாவத்தைப்பற்றிய வெளிப்பாடு நாத்தான் தீர்க்கதரிசிக்கு இருந்தது போல் யோவான் ஸ்நானகனுக்கும் தன்னைச் சூழ இருந்த மக்களின் பாவ வாழ்வைப் பற்றிய வெளிப்பாடு இருந்தது. தேவ பிள்ளைகளே! நீங்கள் குடியிருக்கும் பகுதிகளில் ஜனங்கள் எப்படி ஜீவிக்கிறார்கள் என்பதை அறிந்திருக்கிறீர்களா? உங்களுக்கு ஜனத்தைக் குறித்த பாரம் வேண்டும். பாவத்தைக் குறித்த வெளிப்பாடு பெறும்போது ஜனத்தைக் குறித்த பாரம் வரும். ஜனங்களுக்காக ஜெபம் பண்ணுவோம். ஜனங்கள் விடுதலை பெறுவார்கள். ஏரோது பெரிய ராஜாவாயிருந்தாலும் அவனிடம் சென்று யோவான் ஸ்நானகன் பாவத்தைக் குறித்து கண்டித்தான். யோவான் ஸ்நானகன் ராஜாவின் காணிக்கையையோ, ஐசுரியவான்களின் வெகுமதியையோ எதிர்பார்காதவன். நீதியை நிலைநாட்ட பரிசுத்தத்தை பலப்படுத்த முயற்சிக்கும்போது எந்த தண்டனை கொடுத்தாலும் சரி, அதை ஏற்றுக்கொள்ள தயாராய் இருந்தான். பாவத்தை பாவம் என்று கண்டிக்கிற வெளிப்பாடு உள்ள ஒரு தீர்க்கதரிசியே யோவான் ஸ்நானகன். "பரிசேயரிலும், சதுசேயரிலும் அநேகர் தன்னிடத்தில் ஞானஸ்நானம் பெறும்படி வருகிறதை கண்டு வீரியன் பாம்பு குட்டிகளே! வருங்கோபத்துக்குத் தப்பித்துக் கொள்ள உங்களுக்கு வகை காட்டினவன் யார்?" என்று மத் 3 : 7ல் இந்த யோவான் தீர்க்கதரிசி பாவத்தைக் கடிந்து கொள்கிறதைப் பார்க்கிறோம்.

ஞானஸ்நானம் எடுக்க வந்த ஜனங்களைப் பார்த்துதான் வீரியன் பாம்பு குட்டிகளே! என்று சொன்னார். பாவத்தைக் குறித்த வெளிப்பாடு உள்ள மனுஷனுடைய வார்த்தைகள் கூர்மையுள்ள பட்டயம் போல் இருதயத்தைக் குத்தத்தான் செய்யும். பாவமுள்ள ஜனங்களோடு இணைந்து போகிறதீர்க்கதரிசிகள் கெட்டுப் போவார்கள். அந்த ஜனங்களும் கெட்டப் போவார்கள். நம்மிடத்தில் குற்றம், குறைகள் இருக்குமானால் அதைச் சுட்டிக் காட்டுபவனே உண்மையான தீர்க்கதரிசி. உண்மையான ஆசாரியன்.

எங்களுக்கு முன் செல்லும் தெய்வங்களை உண்டாக்கும் என்று இஸ்ரவேல் ஜனங்கள் ஆரோனிடம் சொன்னபோது மறுநாளே கன்றுக் குட்டியை உண்டாக்கினான். அதை கர்த்தருக்குப் பண்டிகை என்று சொன்னான் இந்த ஆரோன். காளைக்கு பண்டிகை கொண்டாடிவிட்டு கர்த்தருக்குப் பண்டிகை என்று சொல்லுகிறான். ஜனங்களுக்கு ஒரே கொண்டாட்டம்தான். புசித்தார்கள், குடித்தார்கள், உட்கார்ந்தார்கள், விளையாடினார்கள் என்று பார்க்கிறோம். பயங்கரமான அசுத்தம், விக்கிரக ஆராதனை, வேசித்தனம் சபைக்குள் புகுந்து விட்டது. ஆனால் கர்த்தருக்கு பண்டிகை என்று சொன்னான் இந்த ஆசாரியனாகிய ஆரோன். தேவ பிள்ளைகளே ஜனங்களுடைய பாவத்தை பாவம் என்று சுட்டிக் காட்டுபவனே உண்மையான தீர்க்கதரிசி. உண்மையான ஊழியக்காரன். அப்படி செய்வது எல்லோருக்கும் ஆசீர்வாதம். ஜனங்களுடைய பாவத்திற்கு ஆசாரியன் ஜால்ரா போட்டதினால் கர்த்தருடைய பட்டயம் சபைக்குள் வந்தது. அந்த வாதையினால் 3000 பேர் செத்துப் போனார்கள்.

பாவத்திற்கு வேறு வியாக்கியானங்கள் இன்று கொடுக்கப்படுகிறது. பெலவீனம், அறியாமை, சிறுபிள்ளைத்தனம், கண்ஜாடை என்றெல்லாம் மழுப்பினாலும் பாவம் பாவமே. பாலவத்தின் நிறம் சிவப்பு. குஷ்டரோகத்தின் நிறமும் சிவப்புதான். பாவத்தின் தன்மை தீட்டு. குஷ்டரோகத்தின் தன்மையும் தீட்டுதான். இதைச் சுத்திகரிக்கத்தான் வேண்டுமே தவிர மூடிவைத்து மொழுகக் கூடாது. பொடிபோட்டு பூஜிக்கக் கூடாது. கசப்பை தித்திப்பு என்று சாதிக்கிறவனுக்கு ஐயோ என்பதே தீர்க்கதரிசியின் குரல் (லேவி 13 : 42, ஏசா 1 : 18, லேவி 13 : 45, மாற்கு 7 : 20)

ஆகவேதான் இந்த யோவான் ஸ்நானகன் பாவத்தை பாவம் என்று சொன்னான். ஜனங்களைப் பார்த்து விரியன் பாம்புகுட்டிகளே! என்று சொன்னான். ஏன் அப்படிச் சொன்னார். அந்த ஜனங்களுடைய தாத்தா, பாட்டன் பரம்பரையாகவே பாவத்திலே நிலை கொண்டிருந்ததால் அவர்களெல்லாம் விரியன் பாம்புகள். அவர்களின் பின் சந்ததியாகிய இவர்கள் விரியன் பாம்பு குட்டிகள். பாம்புகள் இரை தேடப் போகும் போது வளைந்து வளைந்து செல்லும். தன்னுடைய வளைக்குள்

நுழையும்போது நேராக செல்லும். இதுபோல்தான் அநேக தேவ பிள்ளைகள் வாரத்தில் ஆறு நாட்கள் வளைந்து நெளிவு சுழிவான வாழ்க்கை வாழ்ந்து விட்டு ஞாயிறு ஆராதனைக்கு வரும் போது பைபிளைக் கைகளில் ஏந்தி பவ்யமாக நடைபோட்டு ஸ்தோத்திரம் சொல்லிக் கொண்டே பரிசுத்த ஆலயத்திற்குள் நுழைகிறார்கள். இப்படிப்பட்டவர்கள்தான் விரியன் பாம்பு குட்டிகள் என்று யோவான் கடிந்து கொண்டார். யோவான் ஸ்நானகன் ராஜாவின் பாவத்தையும், ஏழைகளின் பாவத்தையும் குறித்து வெளிப்பாடு பெற்றிருந்தார். பாவம் எந்த ஜனத்துக்கும் இகழ்ச்சிதான். பாவியைக் குறித்து சுட்டிக்காட்ட இந்த தீர்க்கதரிசி பயப்படவே இல்லை. நாமும் அப்படியே செய்வோமாக

## 3. பாவத்திற்கு பரிகாரம் இயேசு என்றவெளிப்பாடு :

இந்த யோவான் ஸ்நானகன் பாவத்தைக் குறித்த வெளிப்பாடு பெற்றவன். அந்த பாவத்திற்கு பரிகாரம் கர்த்தராகிய இயேசு என்றவெளிப்பாடும் பெற்றிருந்தான். தேவ ஆட்டக்குட்டியானவரே இயேசு என்றவெளிப்பாடு பெற்றிருந்தான். மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிறதேவ ஆட்டக்குட்டி என்று யோவான் 1 : 29-ல் பாவத்திற்கு பரிகாரத்தையும் சுட்டிக்காட்டுகிறான். பாவத்தின் அகோரத்தை வெளிப்பாடாய் பெற்றிரந்த யோவான் அந்த பாவத்திற்கு என்ன விடுதலை என்றவெளிப்பாடும் பெற்றிருந்தான். உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிறதேவ ஆட்டக்குட்டி கர்த்தராகிய இயேசு. ஏனென்றால் ஆட்டக்குட்டியின் இரத்தமே ஜனங்களின் பாவங்களை மன்னிக்கும். அந்நாட்களில் ஜனங்கள் ஆட்டையோ, காளையையோ, புறாவையோ காணிக்கையாக செலுத்தி பாவ நிவர்த்தி செய்து வந்தார்கள். இப்போதோ இயேசுவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கக்கூடிய தேவ ஆட்டுக்குட்டி என்றவெளிப்பாடை இந்த யோவான் பெற்றிருந்தான். வெளி 3 : 8-ல் இவரே உலகத் தோற்றமுதலாய் அடிக்கப்பட்ட ஆட்டக்குட்டியானவர் என்று யோவான் அப்போஸ்தலன் சொல்லுகிறார். இயேசுதான் தேவ ஆட்டுக்குட்டி. பாவம் போவதற்கு வேறு ஒரு பரிகாரமும் தேட வேண்டியதில்லை. மொட்டை போட தேவையில்லை. காது குத்தி கம்மல் போட்டு அடிமையாக வேண்டியதுமில்லை. பாதயாத்திரை சென்று பாவத்திற்கு பரிகாரம் தேடவேண்டியதில்லை. பாவத்திற்குப் பரிகாரம் தேவ ஆட்டுக்குட்டியான இயேசுவின் இரத்தம். அவரால் அன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. பாவ மன்னிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படி வானத்தின் கீழே, பூமியின் மேலே மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமே அல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவில்லை. இந்த

நற்செய்தியை ஜனங்களுக்கு சொல்ல வேண்டும். ஆதி 3 : 21-ல் ஆதாம் ஏவாள் பாவம் செய்து நிர்வாணியானார்கள். ஆனால் அவர்கள் நிர்வாணத்தை மூடுவதற்கு கர்த்தர் தோல் உடையை உண்டாக்கினார் என்று வேதம் சொல்லுகிறது. ஆங்கில வேதாகமத்தில் ஆட்டுத்தோல் உடை என்று போடப்பட்டுள்ளது. அங்கு ஒரு செம்மறி ஆடு அடிக்கப்பட்டது. தோல் உரிக்கப்பட்டது. அந்த தோலை வைத்துதான் ஆதாம் ஏவாள் நிர்வாணம் மூடப்பட்டது. இவ்விதமாய் தேவன் மனிதனோடு சம்மந்தப்பட்டார். மனிதனை தன்னோடு ஒப்புரவாக்கினார். அவ்விதம் ஒப்பரவாகுவதற்கும், நிர்வாணம் மூடப்படுவதற்கும், தேவனை முகத்தக்கு முகம் பார்ப்பதற்கும் தைரியம் கொடுத்தது, ஒரு ஆட்டக்குட்டியின் இரத்தமே. அப்படியே ஈசாக்குக்காக ஒரு ஆட்டக்குட்டிக் கொல்லப்பட்டது. அன்பு சகோதரா! சகோதரி! உங்களுக்காய், எனக்காய் 2000 ஆண்டுகளுக்கு முன்னே சிலுவையிலே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கொல்லப்பட்டார். அவராலேயே நமக்கு பாவமன்னிப்பும், நித்திய ஜீவனும் கிடைத்திருக்கிறது. இந்த நற்செய்தியை நானும், நீங்களும் ஜனங்களுக்குச் சொல்ல வேண்டியது மிகவும் அவசியம்.

## 4. ஞானஸ்நானத்தைப் பற்றிய வெளிப்பாடு :

நானும் இவரை அறியாதிருந்தேன். ஆனாலும் ஜலத்தினால் ஞானஸ்நானம் கொடுக்கும்படி என்னை அனுப்பினார். ஆவியானவர் இறங்கி யார் மேல் தாங்குவதை நீ காண்பாயோ அவரே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுக்கிறவர் என்று எனக்கு சொல்லியிருந்தார். (யோவான் 1 : 33) என்று ஞானஸ்நான வெளிப்பாட்டைக் குறித்து கூறுகிறார். தேவனின் ஊழியத்திற்கு இந்த யோவான் ஸ்நானகன் வரும்போது உன்னிடத்தில் வரும் ஜனங்கள் மனந்திரும்பி, பாவத்தை அ'றிக்கையிட்டு விட்டபின்பு ஜலத்தினால் மூழ்கி ஞானஸ்நானம் கொடு என்று கட்டளையிட்டு அனுப்பினார். முழுக்கு ஞானஸ்நானம் முதலில் யோவான் ஸ்நானகன் மூலம் கொடுக்கப்பட்டது. பின்பு இயேசுவின் சீடர்களால் கொடுக்கப்பட்டது. பின்பு அப்போஸ்தலர்களால் கொடுக்கப்பட்டது. ஞானஸ்நானம் கொடுக்கவேண்டும் என்பது இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையாகும். இது மனித ஆலோசனையோ, அல்லது பெந்தேகோஸ்தே சபைகளின் உபதேசமோ அல்ல. பாவத்திற்கு மரித்த ஒவ்வொருவரையும் அடக்கம் செய்ய வேண்டும். அதுவே ஞானஸ்நானம். (ரோமர் 6 : 2 – 3)

பிறந்த குழந்தை பாவத்திற்கு மரிப்பதும் இல்லை. மனம் திரும்பவும் இல்லை. எனவே குழந்தை ஞானஸ்நானம் எடுப்பது தவறு. அது பழைய பாரம்பரியம். இன்று ஞானஸ்நானத்தைக் குறித்த வெளிப்பாடு

இல்லாதவர்கள் பரிசேயரும், சதுசேயருமே. இயேசுகிறிஸ்து தன்னைத்தாழ்த்தி யோவானிடத்தில் ஞானஸ்நானம் எடுத்துக் கொண்டாரானால் மனுக்குலமே; நீ இயேசுவை விட பெரியவரோ? தேவகுமாரனே தன்னைத் தாழ்த்தி மானிடனிடத்தில் தண்ணீரில் இறங்கினாரென்றால் நீங்களும் உடனே தண்ணீரில் இறங்கி ஞானஸ்நானம் எடுக்க வேண்டாமா? யோவானிடத்தில் ஞானஸ்நானம் எடுத்தவர்கள் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டனர். சிறுவர்கள் ஒருவரும் ஞானஸ்நானம் எடுக்கவில்லை. ஞானஸ்நானம் எடாதவர்களும், கொடாதவர்களும் வெளிப்பாடு இல்லாத குருடர்களே

## 5. அபிஷேகநாதரைக் குறித்த வெளிப்பாடு :

மனந்திரும்புவதற்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன். எனக்குப்பின் வருகிறவரோ என்னிலும் வல்லமையுள்ளவராயிருக்கிறார். அவருடைய பாதரட்சைகளை சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல. அவர் பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார் (மத் 3 : 11) என்று அபிஷேகம் ஊற்றப்படுவதற்கு முன்னமே அபிஷேகத்தைப் பற்றியும், அபிஷேக நாதரையும் குறித்த வெளிப்பாடு உள்ளவராக யோவான் காணப்பட்டார். எனக்குப் பின் வருபவர் பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார் என்றார். இதன் நிறைவேறுதல் அப் 2 : 3-ல் பெந்தேகோஸ்தே என்னும் நாள் வந்த போது எல்லோரும் ஒரு மேல் வீட்டில் கூட்டினார்கள். அப்போது பலத்தக் காற்று அடிக்கிற முழக்கம் போல அந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினிமயமான பிரிந்திருக்கும் நாவுகள் எல்லார் மேலும் காணப்பட்டது. அப்பொழுது அவர்கள் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டு ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படி பற்பல பாஷைகளில், வெவ்வேறு பாஷைகளில் நவமான பாஷைகளில் பேசத் தொடங்கினார்கள். அபிஷேகம் பெற்றதற்கு அடையாளம் அந்நிய பாஷை என்று வேதம் தெளிவாய் சொல்லுகிறது. எங்கெல்லாம் ஆவியானவர் இறங்கினாரோ அங்கெல்லாம் அவர்கள் அந்நிய பாஷை பேசினார்கள் என்று அப்போஸ்தலர் நடபடிகள் புஸ்தகத்தில் தெளிவாய் எழுதப்பட்டுள்ளது.

எனவே பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்வது எப்படி என்று அறிந்த நீங்கள் மானானது நீரோடைகளை வாஞ்சிப்பது போல் கதறி ஜெபித்து பெற்றுக் கொள்ளுங்கள். பரிசுத்த ஆவியின் அபிஷேகமே நம்மை முத்திரைபோட்டு கர்த்தருடைய வருகைக்கு ஆயத்தப்படுத்துகிறது. அபிஷேகம் பெறும்போது மணவாளன்

இயேசுவுக்காக நம்மை மணவாட்டியாக நிச்சயதார்த்தம் செய்கிறார். அப்பொழுது அடையாளமாக, முத்திரைபோடும் விதமே அபிஷேகம் பெறுவதாகும்.

அபிஷேகம் பெறாத ஆசாரியன் அதற்கு தகுதியுள்ளவர் அல்ல என்று பழைய ஏற்பாடுகூட கூறுகிறது. தேவ ஆவியினால் நடத்தப்படுகிறவர்களே தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள். அபிஷேகத்தில் நிரம்பாத சபைகளில் நீங்கள் ஆயிரம் ஆண்டு நிலைத்திருந்தாலும் ஒரு புண்ணியமும் உங்களுக்கு கிடைக்காது. அபிஷேகத்தில் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்யாமல் அறிவிலே ஊழியம் செய்வோர் தங்களையும் வஞ்சித்து, பிறரையும் ஏமாற்றுகிறவராகவும் இருப்பார். தேவனுடைய ஆவியில் நிரம்பாமல் ஆத்தும அறுவடைக்காய், மிஷனெரி ஊழியங்களுக்காய் அள்ளி, அள்ளிக் கொடுத்திருந்தாலும் ஆண்டவரின் ராஜ்யத்தை சொப்பனத்தில் கூட காணமுடியாது. எனவே முதலாவது அபிஷேகம் பெறுங்கள். அபிஷேகம் ஊற்றப்படுகிற இடங்களுக்கு வாஞ்சையுடன் செல்லுங்கள். அபிஷேகத்தைப்பற்றிய வெளிப்பாடு பெறுங்கள்.

## 6. சபையைப் பற்றிய வெளிப்பாடு :

"தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது. அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்" என்று மத் 3 : 12-ல் யோவான் சபையைப் பற்றிய வெளிப்பாட்டை உரைக்கிறார். இங்கு யோவான் ஸ்நானகன் சொல்லும் தமது களம் என்பது கர்த்தருடைய சபை. பாலஸ்தீனா தேசத்தில் கோதுமை அதிகமாக விளையும். கோதுமை விளைந்த பின் அறுத்து நேராக வீட்டிற்க கொண்டு செல்ல மாட்டார்கள். வயலுக்கும் களஞ்சியத்துக்கும் இடையில் சமமான ஓர் இடம் உண்டு. அதுதான் களம். அங்கு கொண்டு வந்து தாளடியோடு சேர்ந்திருக்கும். அந்த கோதுமை மணியை அடித்து, பிரித்தெடுத்து, தூற்றி, சுத்தப்படுத்தி அதை மூடையாகக் கட்டின பிறகுதான் களஞ்சியத்திற்கு கொண்டு போவார்கள். களஞ்சியத்தில் சேரும் முன்பாக வயலுக்கும், களஞ்சியத்திற்கும் இடையில் களம் என்னும் இடத்தில் இந்த கோதுமை மணிகள் சுத்திகரிக்கப்படுகின்றன. பிரித்தெடுகப்படுகின்றன. அதுதான் கர்த்தருடைய சபை. அன்பு சகோதரா! சகோதரி! உலகத்தில் வாழ்ந்து கொண்டிருந்த நீங்கள் மனந்திரும்பி, ஆண்டவரை ஏற்றுக் கொண்டு இரட்சிக்கப்படுகிறீர்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையில் சேர்த்துக் கொண்டு வந்தார். ஒவ்வொரு தேவ பிள்ளைகளுக்கும் கர்த்தர் கொடுத்த களமாகிய சபை நீங்கள் பரிசுத்தப்படுவதற்காக கர்த்தர் ஏற்படுத்தித் தந்த ஒரு சுத்திகரிப்பின் இடம் என்பதை நீங்கள் வெளிப்பாடாய்ப் பெற்றுக் கொள்ள வேண்டும். களம்

எதற்காக? களம் நாம் பரிசுத்தப்படுவதற்காகத்தான். அநேகம் பேர் பரிசுத்தப்படுவதற்குத்தான் களம் என்பதை தெரிந்து கொள்ள மாட்டார்கள். புரிந்து கொள்ள மாட்டார்கள். பரிசுத்தப்படுத்தும் உபதேசங்கள் பேசினால் சிலருக்கு பக் என்று பற்றியெரிகிறது. சுத்திகரிப்பைப் பற்றிப் பேசினால் சிலருக்கு சருக்கென்று முள் தைப்பது போல் வேதனையை உண்டாக்குகிறது. முற்றிலும் பரிசுத்தம் என்றவார்த்தை பிரசங்க பீடத்திலிருந்து வரும்போது சிலருக்கு முகம் தொங்கி விடுகிறது. சபையாகிய களம் நம்முடைய வாழ்வின் நம்முடைய வாழ்வின் சுத்திகரிப்புக்காகவே தேவன் ஏற்படுத்திய இடமாகும். தாளடியை விட்டு பிரிப்பதே களத்தில் நடக்கும் ஊழியமாகும். தூற்றுக்கூடையில் தூக்கி வீசப்படும் போது பதற்கள் பறந்து போகும். பின்பு கோதுமை மணிகள் களத்திலே கூட்டிச் சேர்க்கப்படுகிறது. ஆகவே தேவ பிள்ளைகளே! சபையிலே உங்களை வைத்திருப்பது நீங்கள் பரிசுத்தப்படுவதற்காகத்தான் என்று ஏற்றுக் கொள்ளுங்கள். ஆகவே கர்த்தருடைய சபையின் ஐக்கியம் நம் மரண பரியந்தமும் நமக்கு வேண்டும். ஒரு குறிப்பிட்ட சபையின் ஐக்கியம் இல்லாவிடில் நாம் பரிசுத்தப்பட முடியாது. களத்திற்கு வரவில்லையானால் களஞ்சியத்தில் போய் சேரவும் முடியாது. இந்த வெளிப்பாடு யோவான் ஸ்நானகனுக்கு இருந்தது. கர்த்தர் தமது களத்தை விளக்குவார். தூற்றுக்கடை அவர் கரத்திலே இருக்கிறது. சபையாகிய களத்தை அவர் சுத்திகரிப்பார். அன்பு தேவபிள்ளைகளே! நீங்கள் கோதுமை மணிகளா? பதரா? சங் 1 : 4-ல் துன்மார்க்கரோ காற்றுப் பறக்கடிக்கும் பதரைப் போல் இருக்கிறார்கள். கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாய் இருக்கிறவர்கள் கோதுமை மணிகளாவார்கள்.

## 7. நரகத்தைக் குறித்த வெளிப்பாடு :

"தூற்றுக் கூடை அவர் கையில் இருக்கிறது. அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார். பதரையோ ஆவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார் என்றான்". (மத் 3 : 12) நரகத்தைக் குறித்த வெளிப்பாடு பெற்றிருந்தான் இந்த யோவான் ஸ்நானகன். தேவபிள்ளைகளே இன்று அநேகருக்கு நரகத்தைப் பற்றி வெளிப்பாடு இல்லாதிருக்கிறது. நரகத்தைப் பற்றி பயமே இல்லாதிருக்கிறார்கள். கவலையே இல்லாதிருக்கிறார்கள். இந்த உலகத்தில் இருக்குமளவும் நன்றாய் வாழ்வதற்கு எதையாவது எதிர்பார்க்கிறார்கள். மனுஷனுடைய மரணத்திற்கப்புறம் உள்ள நித்திய ஜீவனுள்ள பரலோகத்தையோ நித்திய அழிவாகிய நரகத்தையோ சிந்திப்பதே இல்லை. யாரெல்லாம் பதரோ, யாரெல்லாம் இரட்சிப்பின் ஜீவியம் இல்லாத பாவிகளாய் ஜீவிக்கிறார்களோ அவர்களுக்கு அக்கினி என்கிற முடிவு உண்டு. இதை வாசித்துக் கொண்டிருக்கும் அன்பு தேவபிள்ளைகளே!

நரகத்தைக் குறித்த நடுக்கம் உங்களுக்கு உண்டாயிருக்கட்டும். யெகோவா சாட்சிக்காரர்கள் என்றகூட்டத்தார் நரகத்தை மறுதலிக்கிறார்கள். அவர்கள் உபதேசம் இன்று உலகில் வேகமாய் பரவிவருகிறது. நரகம் இல்லை என்றசெய்தியே பலருக்குப் பிடித்திருக்கிறது. நரகமும் உண்டு, பரலோகமும் உண்டு. நாம் கோதுமை மணிகளாய் இருந்தால் களஞ்சியமாகிய கர்த்தருடைய ராஜ்யம் சென்றடையலாம். பதராக இருந்தால் அக்கினியும் கந்தகமும் உள்ள நரகத்தில் தள்ளப்படுவார்கள் என்று வேதம் சொல்கிறது. அவிசுவாசிகளும், பயப்படுகிறவர்களும், அருவருப்பானவர்களும், கொலைகாரரும், விபச்சாரக்காரரும், சூனியக்காரரும் விக்கிரக ஆராதனைக்காரரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும், கந்தகமுமாகிய அக்கினிக் கடலிலே பங்கடைவார்கள். (வெளி 21 : 8) என்று கர்த்தர் எச்சரிக்கிறார்.

இவ்விதமாக,

1. இயேசுவின் வருகையைப் பற்றிய வெளிப்பாடு
2. ஜனத்தின் பாவத்தைப் பற்றிய வெளிப்பாடு
3. பாவத்திற்கு பரிகாரி இயேசு என்ற வெளிப்பாடு
4. ஞானஸ்நானத்தைப் பற்றிய வெளிப்பாடு
5. அபிஷேக நாதரைப் பற்றிய வெளிப்பாடு
6. சபையைப் பற்றிய வெளிப்பாடு
7. நரகத்தைப் பற்றிய வெளிப்பாடு

பெற்றிருந்தார் என்று அறிகிறோம். நாமும் இந்த வெளிப்பாடுகளைப் பெற்று பணிவிடை ஓட்டத்தை நிறைவேற்றுவோமாக!

# 6

# அருட்பணியாளனாகிய யோவான் ஸ்நானகன்

**"யோவான் தன் பணிவிடை ஓட்டத்தை நிறைவேற்றினான்" (அப். 13 : 25)**

கிறிஸ்துவின் சரீரமாகிய சபையிலே பல்வேறு அவயவங்கள் இருக்கின்றன. நம்முடைய சரீரத்திலும் அநேக அவயவங்கள் உள்ளன. நம் சரீரத்தில் உள்ள அவயவங்கள் ஒவ்வொன்றிற்கும் தனிப்பட்ட முக்கியமான, பிரத்தியேகமான செயல்பாடுகளும், ஊழியங்களும் இருப்பது போலவே கிறிஸ்துவின் சரீரமாகிய சபையிலே வைக்கப்பட்டிருக்கின்ற ஒவ்வொரு விசுவாசிகளுக்கும் தனித்தனியே, பிரத்தியேகமான பணிவிடை ஊழியங்கள் உண்டு. நமது சரீரத்திலே கண், காது, மூக்கு, கால்கள் ஆகியவற்றின் பணிவிடைகள் மற்றவர்களுக்கு தெரியக்கூடிய அளவிலே செயல்பட்டு, எல்லாராலும் பாராட்டப்படுகின்றன. அதுபோலவே கிறிஸ்துவின் சரீரமாகிய சபையிலே மற்றவர்களால் பார்க்கத்தக்க அளவில், பாராட்டத்தக்க விதத்தில் கர்த்தருக்கு ஊழியம் செய்பவர்களும் உண்டு. அதேநேரம் நமது சரீரத்தின் உள் உறுப்புகளாகிய இதயம், நுரையீரல், கணையம், இரைப்பை, குடல் உறிஞ்சுகள், சிறநீரகங்கள் போன்றவை மனுஷ கண்களுக்கு மறைவாக இருந்து கொண்டு விலையேறப் பெற்ற, முக்கியமான செயல்களைப் புரிந்து, நமது சரீரம் ஆரோக்கியத்தோடும், நீண்ட நாட்கள் வாழ்வதற்கும் உதவி புரிகின்றது போலவே, கிறிஸ்துவின் சரீரமாகிய சபையிலே மற்றவர்களின் கண்களுக்குப் புலப்படாமல், மனுஷ பாராட்டுக்களுக்கு உட்படாமல், மனிதனால் வரும் மகிமையை எதிர்பாராமல் அந்தரங்கத்திலே ஜெபித்தும், கர்த்தருக்காக உதாரத்துவமாய்க் கொடுத்தும், முழங்காலில் நின்றும், பிரயாசத்தில் உதவிசெய்தும் பணிவிடைகளைச் செய்தும் ஊழியம் செய்கிறவர்களும் உண்டு. எனவே தேவனுடைய ஜனங்களே! நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்களென்றால் கர்த்தருடைய சபையிலே தேவ ஜனமாக வைக்கப்பட்டிருக்கிறீர்களென்றால் உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு ஊழியம் நிச்சயமாகவே உண்டென்பதை உணர்ந்து, அங்கீகரித்து செயல்பட வேண்டும். நீங்கள் கிறிஸ்துவுக்கு முக்கியமானவர்கள். நீங்கள் கர்த்தருடைய சபைக்கு மிகவும் அவசியமானவர்கள். உங்களுக்காகவே ஒரு பிரத்தியேகமான ஊழியம் உங்களுடைய சபையிலே உண்டு என்பதை அறிந்து, உங்கள் மேய்ப்பனோடு சேர்ந்து செயல்படுங்கள். உங்கள் ஊழியம் பயனுள்ளதாகவும், பாராட்டுதற்குரியதாகவும் இருக்கும்.

இங்கிலாந்தைச் சேர்ந்த நற்செய்தி ஊழியரான ஜார்ஜ் ஒய்ட் பீல்டு ஒருமுறை "கதவும் அடைக்கப்பட்டது" (மத் 25 : 10) என்ற வசனத்தின்படி பிரசங்கித்தார். கூடியிருந்தவர்களில் அநேகர் அந்த செய்தியால் உடைக்கப்பட்டார்கள். நொறுக்கப்பட்டார்கள். மனந்திரும்பினார்கள். ஆனால் கூட்டத்தின் மத்தியிலே ஒருவர் மற்றொருவரிடம் "அதினால் என்ன, மற்றொரு கதவு எனக்கு திறக்கப்படும்" என்று சொல்லி பரியாசம் பண்ணினார். ஆனால் ஜார்ஜ் ஒய்ட் பீல்டு தொடர்ந்து பிரசங்கித்தபோது இவ்வாறு கூறினார். "இங்குள்ளவரில் எவரேனும் அலட்சியமாகவும், சுயதிருப்தியுடனும் காணப்பட்டு, கதவு மூடப்பட்டால் என்ன? இன்னொருக் கதவு எனக்குத் திறக்கும்" என்று சொல்லிக் கொண்டு இருக்கலாம். அப்படி நம்மிடையில் இருப்போருக்கு ஆவியானவர் சொல்லும் பதில் என்ன? "ஆம் இன்னொரு கதவு உங்களுக்காகத் திறக்கப்படும். அது நரகத்தின் கதவு. நித்திய ஜீவனின் கதவாகிய இயேசுவிடம் வந்து இரட்சிக்கப்பட இன்று மறுப்பவர்களுக்கு வேறொரு கதவு உடனடியாய்த் திறக்கப்படும். அதுவே நரகத்திற்குச் செல்லும் கதவு" என்று கூறியபோது இந்த பிரசங்கத்தைக் கேட்டு, அலட்சியப்படுத்திய அந்த மனிதன் உள்ளம் உடைந்து மனந்திரும்பினாராம்.

காலம் நிறைவேறும் போது இரட்சிப்பின் கதவை தேவன் மூடிவிடும் நேரம் வரும். அப்பொழுது காரிருளின் வேதனைக் கதவு திறக்கப்படும். ஆனால் இன்று இயேசுகிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைப்பீர்களானால் இன்னும் திறந்திருக்கும் இயேசுவாகிய வாசலில் நுழைந்து நித்திய வாழ்வைப் பெறமுடியும். நீங்கள் இந்த வாசல் வழியே நுழைந்திருக்கிறீர்களா?

கிறிஸ்துவே பரலோகத்திற்கு அழைத்துச் செல்லும் ஒரேவழி. மற்றவழிகளெல்லாம் அழிவிற்கு கொண்டு செல்லுகின்றன என்று ஜார்ஜ் ஒய்ட் பீல்டு பிரசங்கித்தார். அந்த செய்தி அவர் ஊழியத்தில் அநேக இடங்களில் பிரசங்கிக்கப்பட்ட செய்தியாகும். இது போன்றபிரசங்கிக்கும் ஊழியமானாலும், அல்லது செய்தி பேசுவதற்கு மேடை போட்டு விளக்குகள் கட்டுகிற ஊழியமானாலும் எதாகிலும் ஒரு ஊழியம் நமக்கு உண்டு. அந்த ஊழியத்தை உண்மையாய் உணர்ந்து நாம் செய்வோமானால், பிரசங்கத்தின் மூலம் இரட்சிக்கப்படுகிற ஜனங்களால் உண்டாகிறபலன் பிரசங்கித்தவருக்கு கிடைப்பது போலவே, மேடை அமைத்துக் கொடுக்கிற உங்களுக்கும் உண்டு. உதவி ஊழியம் செய்கிற, பணிவிடை ஊழியம் செய்கிற உங்களுக்கும் பலன் உண்டு. இந்த செய்தியிலே யோவான் ஸ்நானகனின் ஏழுவித ஊழியங்களை நாம் பார்க்கப் போகிறோம். அவை அனைத்தையும் பணிவிடை ஊழியம் என்று வேதம் சொல்கிறது. (அப் 13 : 25)

## 1. களிகூறச் செய்யும் ஊழியம் : (Rejoicing Ministry)

யோவான் எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருந்தான். நீங்களும் சில காலம் அவன் வெளிச்சத்திலே களிகூர மனதாயிருந்தீர்கள் என்று யோவான் 5 : 35-ல் நம் ஆண்டவராகிய இயேசு யோவானைக் குறித்துச் சொன்னார். யோவானின் ஊழியத்தின் மூலம் அநேகர் களிகூர்ந்தார்கள். ஜனங்களை அழவைப்பது மிக எளிது. ஆனால் களிகூரச் செய்வதுதான் மகா கஷ்டம். ஜனங்களுடைய இருதயம் குத்தப்பட தக்கதாக ஏதாவது வார்த்தைகளால் திட்டிவிட்டால் நொடிப் பொழுதிலே கண்ணீர் சிந்தி கதறி விடுவார்கள். ஆனால் ஜனங்கள் மகிழ வேண்டுமானால் யோவான் ஸ்நானகனைப் போல அபிஷேகம் உள்ளவர்களால் தான் அது முடியும்.

யோவானின் பிறப்பே பிறருக்கு சந்தோசத்தைக் கொடுத்தது. யோவான் பிறக்கும் போதே தேவதூதன் அவனுடைய ஊழியத்தைப் பற்றிய தீர்க்கதரிசனம் சொன்னார். இந்த யோவான் பிறப்பதினாலே, தூதன் சகரியாவை நோக்கி; பயப்படாதே, உன் வேண்டுதல் கேட்கப்பட்டது. உன் மனைவியாகிய எலிசபெத்து உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள். அவனுக்கு யோவான் என்று பேரிடுவாயாக. உனக்குச் சந்தோஷமும், மகிழ்ச்சியும் உண்டாகும். அவன் பிறப்பினிமித்தம் அநேகர் சந்தோசப்படுவார்கள் என்று லூக் 1 : 13, 14-ல் தீர்க்கதரிசனமாகச் சொன்னார்.

தூதன் சொன்ன தீர்க்கதரிசனம் யோவானுடைய ஊழியத்திலே அப்படியே நிறைவேறிற்று. யோவான் வளர்ந்து வாலிபனாகி தேவ ஊழியத்தை செய்தபோது அந்த ஊழியத்தினால் சந்திக்கப்பட்ட ஜனங்களுடைய வாழ்க்கையிலே மகிழ்ச்சியும், சந்தோசமும் உண்டாயிற்று. இன்று நம்முடைய ஊழியங்கள் ஜனங்களுடைய உச்சந்தலையை உடைக்கிற ஊழியமா? அல்லது ஜனங்களுடைய இருதயத்தை சந்தோஷிப்பிக்கிற ஊழியமா?

பவுலின் ஊழியத்தைக் கவனிப்போமேயானால் அநேகர் சந்தோசப்பட்டார்கள் என்று நாம் பார்க்க முடியும். "உங்கள் விசுவாசத்திற்கு நாங்கள் அதிகாரிகளாயிராமல், உங்கள் சந்தோசத்திற்குச் சகாயராயிருக்கிறோம். விசுவாசத்தினாலே நிலைநிற்கிறீர்களே" என்று II கொரி 1 : 24-ல் சொல்லுகிறார்.

அப்போஸ்தலனாகிய பேதுரு ஊழியத்திலும் ஜனங்கள் சந்தோஷப்பட்டார்கள். பெந்தேகோஸ்தே நாளிலே பிரசங்கி பேதுருவுக்கு சந்தர்ப்பம் கிடைத்தபோது ஒரு சிறு பிரசங்கம் அவர் பிரசங்கித்தார். இந்த பிரசங்கத்தில் முன்னுரை இல்லை. முடிவுரை இல்லை. பிரசங்க இலக்கணம் இல்லை. உதாரணம் கொடுக்கப்படவில்லை. எபிரெய, கிரிக்கு, லத்தீன்

மொழியில் வியாக்கியானம் சொல்லப்படவில்லை. ஆனால் பேதுரு அப்போஸ்தலன் பரிசுத்த ஆவியினால் நிறைந்து பிரசங்க ஊழியத்தை செய்தபோது ஜனங்கள் மகிழ்ந்தார்கள். பேதுருவின் வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றைய தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள் என்று அப். 2 : 41-ல் நாம் பார்க்கிறோம்.

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தில் கூட ஜனங்கள் மகிழ்ந்தார்கள். இயேசு கிறிஸ்து மகிழ்ச்சியோடு ஊழியத்தை செய்தார். அவர் ஊழியத்தினாலே ஜனங்களும் மகிழந்தார்கள். எபிரெய நிரூப ஆக்கியோன் இதைத் தெளிவாக நமக்குத் தெளிவிக்கிறார்.

"நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுத்திருக்கிறீர். ஆதலால், தேவனே உம்முடைய தேவன் உமது தோழரைப் பார்க்கிலும் உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணினார்" என்று எபி 1 : 9-ல் சொல்லுகிறார். இயேசு கிறிஸ்தவின் மேல் இருந்த ஆனந்த தைல அபிஷேகம் அவர் போகிற இடமெல்லாம் ஜனங்கள் மேல் வைக்கப்பட்டது. இதனிமித்தமாக ஜனங்கள் மகிழ்ந்தார்கள். அன்பு தேவனுடைய ஜனங்களே! நீங்கள் வீடு சந்திக்க சென்றாலும், தெருப் பிரசங்கத்துக்குச் சென்றாலும், ஆஸ்பத்திரி ஊழியத்திற்குச் சென்றாலும், சபையிலே ஊழியம் செய்தாலும் உங்கள் ஊழியத்தின் மூலம் ஜனங்கள் மகிழ வேண்டும். இதுவே சரியான ஊழிய நெறி ஆகும்.

பழைய ஏற்பாட்டு மோசேயின் ஊழியத்தைக் கவனித்துப் பாருங்கள். மோசேயின் ஊழியத்திலும் ஜனங்கள் மகிழ்ந்தார்கள். உமது ஜனங்கள் உம்மில் மகிழ்ந்திருக்கும்படி நீர் எங்களை திரும்ப உயிர்ப்பிக்க மாட்டீரோ? என்று சங் 85 : 6-ல் சொல்லுகிறார். ஜனங்கள் மகிழுவதே எழுப்புதலின் அடையாளமாக இருக்கிறது. எனவே பிரியமானவர்களே! நமது மேல் உள்ள அபிஷேகம் எப்படிப்பட்டது? ஜனங்கள் மகிழ்ச்சியடையும்போது சத்தியத்திற்கு கீழப்படிவார்கள். தெசலோனிக்கேய சபையார் பவுலின் பிரசங்கத்தைக் கேட்டபோது மகிழ்ந்தார்கள். "நீங்கள் மிகுந்த உபத்திரவத்திலே பரிசுத்த ஆவியின் சந்தோசத்தோடே திருவசனத்தை ஏற்றுக் கொண்டு எங்களையும், கர்த்தரையும் பின்பற்றினீர்கள்" என்று எழுதினார். எனவே நமது செய்திகளும், ஊழியங்களும் ஜனங்களுடைய மகிழ்ச்சிக்கு ஏதுவாக இருந்தால் சத்தியத்திற்கு இலகுவில் கீழ்படிவார்கள் என்பதை அறிகிறோம். நம்மேல் உள்ள அபிஷேகம் எப்படிப்பட்டது என்பதை சற்று ஆராய்ந்து நிதானிப்போமாக! ஆனந்த தைல அபிஷேகம் இருக்கிறதா? அல்லது அழுது புலம்ப வைக்கும் அபிஷேகம் இருக்கிறதா? பரிசுத்த ஆவியானவர் உங்களை ஆனந்த தைல அபிஷேகத்தால் நிரப்பும்படி தாழ்த்தி ஒப்புக் கொடுங்கள். கர்த்தர் உங்களை நிரப்புவார்.

## 2. கரடு முரடானவைகளை சமமாக்கும் ஊழியம் :
## (Road Roller Ministry)

யோவான் ஸ்நானகன் இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாக ஊழியத்தை தொடங்கியபோது, அவர் ஊழியத்தைக் குறித்து ஏசாயா தீர்க்கதரிசி சொன்ன தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. "அப்பொழுது கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள். அவருக்குப் பாதைகளைச் செவ்வை பண்ணுங்கள் என்றும், பள்ளங்களெல்லாம் நிரப்பப்படும், சகல மலைகளும், குன்றுகளும் தாழ்த்தப்படும். கோணலானவைகள் செவ்வையாகும். கரடானவைகள் சமமாகும் என்றும், மாம்சமான யாவரும் தேவனுடைய இரட்சிப்பைக் காண்பார்கள் என்றும், வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டாகும்" என்று ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தில் எழுதியிருக்கிற பிரகாரம் ஊழியம் நடந்தது. (லூக் 3 : 3, 4, 5) அதாவது கரடுமுரடானவைகளை நொறுக்கி சமப்படுத்தும் பணிவிடையைச் செய்தார். யோவான் ஸ்நானகன் ஊழியம் தொடங்கியபோது இரண்டுவிதமான மக்கள் அவருடைய ஊழியத்தினால் சந்திக்கப்பட்டார்கள்.

1. மலை போன்ற விசுவாசிகள்
2. பள்ளத்தாக்குகள் போன்ற விசுவாசிகள்

மலை போன்ற மக்களைக் கண்டபோது சம்மட்டியாகிய வசனத்தை வைத்து மலை போன்றவர்களை அடித்தார், உடைத்தார், நொறுக்கினார். மலை போன்றவைகளை சிதைத்து அவைகளை சமபூமியாக்கினார். மலையிலிருந்து நொறுக்கப்பட்ட நொறுங்கல்களைப் பள்ளத்தாக்கிலே போட்டு கொட்டினார். மேடுகளெல்லாம் நொறுக்கப்பட்டு பள்ளத்தாக்கிலே போடப்பட்டது.

நமது பட்டணங்களில் சாலைகளை அமைக்கும் போது சமப்படுத்தும் இயந்திரம் ஒன்று இருக்கிறதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். (Road Roller) பாதைகளிலே கரடுமுரடான செங்கல்களையும் கருங்கல் ஜல்லிகளையும், தார்களையும், மணலையும் போட்ட பிற்பாடு அவைகளைச் சமப்படுத்துவதற்கு அந்த பெரிய இயந்திரத்தைப் பயன்படுத்தி ரோடை சமப்படுத்திய பிற்பாடு சாலை சீராயிருக்கும். அப்பொழுது வாகனங்கள் மிக, மென்மையாக பறந்து செல்ல ஏதுவாயிருக்கும். இது போலவே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் முதல் வருகைக்கு ஜனங்களை சீர்படுத்துகிற, சரிப்படுத்துகிற ஊழியத்தை யோவான் செய்தான்.

இன்று நம்முடைய ஊழியத்திலும் இரண்டுவிதமான ஜனங்கள் இருப்பதைப் பார்க்க முடியும்.

1. Superiority people - மிஞ்சி எண்ணுபவர்கள்

2. Inferiority people - குறைவாக எண்ணுபவர்கள்

ஆகிய இருக்கூட்டத்தைப் பார்க்க முடியும்.

அதாவது தங்களைக் குறித்து எண்ணுவதற்கு மிஞ்சி எண்ணுபவர்கள், இன்னொன்று தங்களை எண்ண வேண்டுவதற்கும் தாழ்வாக எண்ணுபவர்கள். இந்த இரண்டு வித மக்களை இன்று நம்முடைய சபைகளிலும், ஊழியங்களிலும் பார்க்க முடியும். மிஞ்சி எண்ணும் மக்கள் பாஸ்டருக்கு அடங்கமாட்டார்கள். போதகரை விட பாட்டு தாலந்து உண்டென்றும், ஜெபிக்க வரம் உண்டென்றும், ஆவியானவருடைய அநுக்கிரகம் தங்களுக்கு அதிகமாய்க் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே ஒரு மேய்ப்பனுக்கு அடங்கி நடக்க வேண்டியதில்லை. பிறவிசுவாசிகளோடு சமமாக உட்கார்ந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை என்று எண்ணிக் கொண்டு ஊர் சுற்றுகிறவர்களாகவும், அடங்காதவர்களாகவும் காணப்படுவார்கள். இப்படிப்பட்டவர்களும் தங்களை மிஞ்சி எண்ணுகிற எண்ணத்திலிருந்து விடுதலை பெற சமமாக்கும் ஊழியத்தை யோவான் ஸ்நானகன் செய்தார்.

தங்களைக் குறித்து குறைவாக எண்ணுகிற மக்கள் எத்தனை உற்சாகமுள்ள எழுப்புதல் பிரசங்கங்களைக் கேட்டாலும் பரிதாப எண்ணங்களோடும், சுய பரிதாபத்தோடும் தங்களைக் குறித்து கீழாக எண்ணிக் கொண்டு வேதனையுடன் வாழ்வார்கள். தங்களை ஒருவரும் விசாரிக்கவில்லை என்றும், போதகர் தன்னிடம் போதுமான அன்பு காட்டவில்லை என்றும், சபையிலே மற்ற விசுவாசிகள் தங்களைக் கண்டு கொள்ளவே இல்லை என்றும் குறைபேசுகிறவர்களாய் இருப்பார்கள். தேவனுடைய வாக்குத்தத்தங்களையும், தீர்க்கதரிசன வார்த்தைகளையும் சொல்லி இப்படிப்பட்டவர்களை உற்சாகப்படுத்துவது மிக அவசியம். இந்த மிஞ்சி எண்ணக் கூடியவர்களும், தாழ்வு மனப்பான்மை உள்ளவர்களும் நமது சபையில் சமப்படுத்தப்பட வேண்டும். இப்படிப்பட்ட மக்களை சீர்படுத்தும் ஊழியத்தை தான் யோவான் செய்தார்.

சங்கீதக்காரன் தாவீது நாட்களிலே தேவனுடைய பிள்ளைகளிலே இரண்டு விதக் கூட்டத்தார் இருந்தார்கள் என்று பிரித்து, பகுத்துக் கூறுகிறார்.

1. குதிரை போன்ற விசுவாசிகள்

2. கழுதை போன்ற விசுவாசிகள்

குதிரையைக் குறித்து உங்களுக்குத் தெரியுமல்லவா? கால்களில் வீரத்தோடும், தொண்டையிலே கணைப்போடும் வேகமாகச் செல்லக் கூடியவை. இவர்களுடைய ஓட்டம் ஊழியக்காரனை விட சற்று அதிகமாகக் கூட இருக்கலாம். சபையில் இருக்கும், உடன்

விசுவாசிகளைவிட அதிகமாக ஓடக்கூடியவர்களாய் இருப்பார்கள். இந்தக் குதிரைகளைக் குறித்து சங்கீதக்காரன் தாவீது "உன் கிட்டச் சேராத புத்தியில்லாத குதிரை" சங் 32 : 9 என்று சொல்லுகிறார். இந்த குதிரையின் வேகத்தைக் குறைத்து சபையில் அடங்கி செயல்படுவதற்காக குதிரையின் வாயிலே கடிவாளம் போடப்படுவது போல, கர்த்தருடைய மேய்ப்பன் இப்படிப்பட்ட விசுவாசிகளின் வாயில் கடிவாளம் போட்டு உபதேச சட்டங்களைக் கற்றுக் கொடுத்து அவர்களுடைய வேகத்தை சற்றுக் குறைக்க வேண்டும். வேகம் விவேகம் அல்ல. வேகமாய்ச் செல்லும் வாகனங்களே மற்ற வாகனங்களை முட்டி பெரிய உயிர்ச்சேதத்தை விளைவிக்கின்றன.

அதே நேரத்தில் கழுதையைப் போன்ற விசுவாசிகளும் உண்டு. கழுதையின் குணம் உங்களுக்குத் தெரியும் அல்லவா? ஆடி அசைந்து மெதுவாகச் செல்லக்கூடியது தான் இந்தக் கழுதை. இருபது வருட விசுவாசிகளாகியும் ஆராதனைக்கு ஆடி அசைந்து வருகிற விசுவாசிகள் உண்டு. பாட்டு, துதி ஆராதனை, ஜெபம், ஸ்தோத்திர ஆராதனை, சங்கீதம், சாட்சி முடிந்து பிற்பாடு காணிக்கை போட்டு, ஜெபம் பண்ண கண்ணை மூடிய பிற்பாடு இப்படிப்பட்டவர்கள் ஆலயத்தின் பின்புறபகுதியில் வந்து அமர்ந்து கொள்வார்கள். இவர்கள் தங்கள் வேகத்தைக் கூட்டிக் கொள்வதற்காக ஊழியக்காரன் கையிலே வார் ஒன்று எடுக்கப்பட வேண்டும். (சங் 32 : 9) இந்த சாட்டை அடி கொடுக்கும் வாரினாலே இந்தக் கழுதைகளின் பின்புறத்தில் 4 சவுட்டு சவுட்டினால் இவர்களின் வேகம் கூடும். எனவே குதிரைகளின் வேகம் குறைய கடிவாளம் போட்டும், கழுதைகளின் வேகம் கூட சாட்டையை உபயோகித்தும் அவைகளை நடத்திச் செல்லவேண்டும். சில நேரம் சபையிலே கடிவாளம் போடும் செய்திகளை ஆவியானவர் பேசுவார். சில நேரம் சாட்டை அடி கொடுக்கும் செய்திகளை ஆவியானவர் பேசுவார். இந்த இரண்டையும் பயன்படுத்தி சபையில் காணப்படும் கரடு முரடானவைகளை சமப்படுத்தும் ஊழியத்தை செய்தான் இந்த யோவன் ஸ்நானகன் என்று பார்க்கிறோம்.

அன்பானவர்களே! விசுவாசிகளே! நீங்கள் மலை போன்றவர்களா? அல்லது பள்ளத்தாக்கு போன்ற மனப்பான்மை கொண்டவர்களா? நீங்கள் குதிரை போன்று வேகமாய் செல்லக் கூடியவர்களா? கழுதை போன்று ஆடி அசைந்து மெதுவாய் நடக்கக் கூடியவர்களா? உங்களுடைய வாழ்க்கையிலே சமசீர் பிரமாணம் உண்டாக வேண்டும் என்று கர்த்தர் இந்த செய்தியைக் கொண்டு வருகிறார். இருவர் ஒருமனப்பட்டிருந்தாலொழிய ஒருமித்து நடந்து போவார்களோ? என்று ஆமோஸ் 3 : 3-ல் சொல்லப்பட்டுள்ள வசனத்தின்படி நீங்கள் உங்கள்

அருகில் இருக்கும் விசுவாசிகளோடு சேர்ந்து ஒருமனப்பட்டு, சபையாரெல்லாம் மேய்ப்பனோடு சேர்ந்து ஒரு மனதாய் முன்னேறும் போது கர்த்தருடைய ராஜ்யம் கட்டப்படும். கரடு முரடானவைகள் சமமாக்கப்பட்ட போது இயேசு கிறிஸ்துவின் முதல் வருகை சம்பவித்தது போல, இன்று நமது சபைகளில் இருக்கும் கரடுமுரடான சுபாவங்கள் சமமாகும் போது கர்த்தருடைய இரண்டாம் வருகை சம்பவிக்கும்.

### 3. கூவி சத்தமிடும் ஊழியம் : (Fore Runner Ministry)

யோவான் ஸ்நானகனின் ஊழியம் தீர்க்கதரிசனமாக முன்னே சொல்லப்பட்டது. "இதோ, நான் என் தூதனை உமக்கு முன்பாக அனுப்புகிறேன். அவன் உமக்கு முன்னே போய் (Fore Runner) உமக்கு வழியை ஆயத்தம் பண்ணுவான்" என்று மாற்கு 1 : 2-ல் யோவானின் ஊழியத்தைப் பற்றி முன்னாடியே தீர்க்கதரிசனமாக சொல்லப்பட்டுள்ளது.

ஆதிக் காலங்களில் பெரிய சாம்ராஜ்ஜியத்தை ஆளுகை செய்த மகாராஜாக்கள் தங்களுடைய அரண்மனை ரதத்திலே பவனி வரும் வழக்கம் உண்டு. ரதத்தில் பவனி வருகிறராஜாக்களுக்கு முன்பாக ஓடக்கூடிய ஒரு போர்வீரன் இருப்பான். அவன் தலை முதல் கால்வரைக்கும் அழகாக அலங்கரிக்கப்பட்டு தன் கையிலே ஒரு பட்டயத்தைப் பிடித்துக் கொண்டு தனக்குப் பின்வரும் மகாராஜாவின் இரதத்தை விரலால் சுட்டிக் காட்டி; மகாராஜா வருகிறார். மகாராஜா வருகிறார் என்று முன்னாக கூவி அழைத்து ஓடிக்கொண்டே இருப்பான். இதே போன்ற ஊழியத்தை தான் யோவான் ஸ்நானகனும் செய்தான்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இரட்சகராக முதல் முறைஇந்த உலகத்தில் வந்த போது வந்த ஊழியத்தை துவங்குவதற்கு சுமார் 6 மாதத்திற்கு முன்பாக யோவான் தன் ஊழியத்தை துவங்கி இயேசுவைக் குறித்து சத்தமிட்டுக் கொண்டே அவன் ஓடினான். யோவான் ஸ்நானகன் இயேசுவைக் குறித்து மூன்றுவிதமான சத்தம் கொடுத்து அறிமுகம் செய்தான்.

- ★ இயேசு தேவ ஆட்டுக்குட்டி என்று சத்தமிட்டான் (யோவான் 1 : 29)
- ★ இயேசு தேவகுமாரன் என்று சத்தமிட்டான் (யோவான் 1 : 34)
- ★ இயேசு பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுப்பவர் என்று சத்தமிட்டான் (மத். 3 : 11)

யோவான் ஸ்நானகன் தன் வாயைத் திறந்த போது தனக்குப் பின்னாக வரும் மகாராஜாவைப் பற்றியே சத்தமிட்டுக் கொண்டு அவன் சென்றான். மாற்கு 1 : 3-ல் வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் என்று

யோவானைக் குறித்து ஆவியானவர் சொல்லி இருக்கிறார். இன்று நமது வாயைத் திறந்தால் நம்மிடமிருந்து வரும் சத்தம் எது? கூப்பாடு சத்தமா? சாப்பாடு சத்தமா? கண்ணீரின் சத்தமா? அல்லது கர்த்தரைப் பற்றிய சத்தமா?

பல ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு சுவிசேஷகன் தேவ செய்தி கொடுக்கும் போதெல்லாம் சிங்கம் போல சீறிப் பாய்ந்து சத்தமிடுவார். வசனத்தை எடுத்தால் வல்லமையாக பேசுவார். ஆனால் அவரிடத்திலோ ஒரு பெலவீனம் காணப்பட்டது. அது என்னவென்றால் 10 நிமிட நேரம் செய்திக்குப் பிறகு சுமார் 1 மணி நேரம் தன் பூர்வீகத்தைக் குறித்த சரித்திர சாட்சிகளைக் கூறுவார். கேட்கிறவர்களுக்கு உற்சாகமாகவும், மெய் சிலிர்க்கிறவிதத்தில் காணப்பட்டாலும் அவருடைய முடிவு இன்று பரிதாபமாகக் காணப்படுகிறது.

நம் சாட்சிகளை நாம் சொல்லச் சொல்ல ஜனங்கள் நம் பக்கமாய் இழுக்கப்படுவார்கள். மனிதர்களால் கவரப்படுவார்கள். ஆனால் வேத வசனத்தில் நிறைந்திருக்கிறகர்த்தராகிய இயேசுவை விளக்கி விவரித்து உயர்த்திச் சொல்லும் போது, நான் உயர்த்தப்படும் போது ஜனங்களை என் பக்கமாய் இழுத்துக் கொள்வேன் என்று ஆண்டவர் சொன்னது போல ஜனங்கள் கிறிஸ்துவின் பக்கமாய் இழுக்கப்படுவார்கள். ஈர்க்கப்படுவார்கள். கிறிஸ்துவும், ஜனமுமாய் ஒன்று சேர்க்கப்படுவார்கள். அதுவே வெற்றியுள்ள ஊழியம். ஆசீர்வாதமான ஊழியம்.

ஆகவே தேவனுடைய ஊழியரே! தேவனுடைய ஜனமே! நாம் வாயைத் திறந்தால் நமது சாட்சிகளைப் பேச வேண்டாம் என்று கர்த்தர் சொல்லுகிறார். நமது வாழ்விலும், நமது ஊழியத்திலும் நடந்த சம்பவங்களை அறிந்தவர்கள் தேவனை மகிமைப்படுத்தட்டும். நம்மைக் குறித்து அறியாதவர்கள் நம்மை அறியாமலே போகட்டும். ஆனால் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை அறியாதவர்கள் நம் மூலம் அறிந்து, கிறிஸ்துவை ஜனங்கள் அண்டிக் கொள்ளும்படி இயேசுவுக்கு முன்னால் ஓடும் சத்தமாக நாம் இருப்போமாக. இயேசு வருகிறார்! இயேசு வருகிறார்! இதோ மணவாளன் வருகிறார்! என்று சத்தமிட்டுக் கொண்டே நாம் நமது ஊழியத்தைச் செய்ய வேண்டும்.

## 4. கோடறியாக வெட்டும் ஊழியன் : (Axe man ministry)

யோவான் ஸ்நானகன் பாவத்தின் வேரை வெட்டி வீழ்த்தும் கோடரியாக செயல்பட்டான். "இப்பொழுதே கோடரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது. ஆகையால் நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்" என்று பிரசங்கித்தான். (மத் 3 : 10)

தனக்கு முன்னால் இருக்கும் ஜனங்களின் வாழ்க்கையில் இருக்கிற பாவங்களைக் கண்டபோது யோவான் சிங்கம் என சீறிப் பாய்ந்தார். கோடரியாக பாவத்தின் வேரை வெட்டி வீழ்த்திக் கொண்டே இருந்தார்.

கோடரிக்கு இருக்கின்ற தன்மைகள் என்ன? கோடரி இரும்பினால் செய்யப்பட்டது. இரண்டு விதமான இரும்பு தேசத்தில் உள்ளதை நாம் அறிவோம்.

1. தேனிரும்பு - இது குழைவாய் உள்ளது. இதைக் கொண்டு அரிவாள், கோடாரி இவைகளை செய்ய முடியாது. தேனிரும்பால் செய்யப்பட்ட இரும்பு வெட்டுவதற்கு பயன்படுத்தும் போது மழுங்கிப் போனதாக இருக்கும். தேனிரும்பைப் போன்ற ஊழியக்காரர்கள் உண்டு. தேனிரும்பைப் போன்ற விசுவாசிகளும் உண்டு. மனசாட்சியை மழுக்கிக் கொண்டு வறட்டு ஸ்தோத்திரம் சொல்லிக் கொண்டு காலத்தைக் கடத்துபவர்களே தேனிரும்பு போன்றவர்கள்.

ஆனால் எஃகு இரும்பு என்ற இன்னொன்றும் உண்டு. கோடரிகள் இந்த எஃகு இரும்பினால் தான் செய்யப்படும். எஃகு இரும்பு உறுதியுள்ளது. எஃகு இரும்பினால் செய்யப்பட்ட கோடரி மரத்தை வெட்டும் போது மரம் துண்டு துண்டாக சிதறி விழும். வேர்ப்பகுதிகள் முதற்கொண்டு கிளைகள் வரை வெட்டப்படும். எஃகு இரும்பு உறுதியானது போலவே யோவான் ஸ்நானகனும் சத்தியத்திலே உறுதி உள்ளவன். உபதேசத்திலே உறுதியுள்ளவன். விசுவாசத்திலே உறுதி உள்ளவன். அன்பிலே உறுதி உள்ளவன்.

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஜனங்களைப் பார்த்துக் கேட்ட கேள்வி என்ன? எதைப் பார்க்க வனாந்தரத்திற்குப் போனீர்கள்? காற்றினால் அசையும் நாணலையோ? அல்லது எதைப் பார்க்க வனாந்தரத்திற்குப் போனீர்கள்? என்றார் (மத் 11 : 7) நாணலின் தன்மை என்ன? காற்று எந்தப்பக்கம் அடிக்கின்றதோ அந்த பக்கமெல்லாம் வளைந்து அசையும் தன்மையுள்ளது. இதைப் போன்றஊழியர்களும், விசுவாசிகளும் உண்டு. சூழ்நிலைக்குத் தக்கவண்ணம் தங்கள் உபதேசங்களையும் சத்தியங்களையும் மாற்றி, மனிதருக்குப் பிரியமானதைப் போதித்து ஜனங்களை செவித்திணர்வுள்ளவர்களாக மாற்றக் கூடியவர்கள். ஆனால் யோவான் இதற்கு முரண்பாடு உள்ளவனாகக் காணப்பட்டான். காற்று எப்பக்கம் அடித்தாலும் இவனோ எஃகு இரும்பைப் போல் உறுதியுள்ளவனாகக் காணப்பட்டான். பாவத்தோடு வாழும் மக்களைக் கண்டபோது அவர்களோடு இசைந்து போகவோ, வளைந்து கொடுக்கவோ இவனுக்கு மனமில்லை. பாவமுள்ள

ஜனங்களைக் கண்டபோது சத்தியம் என்னும் கோடரியினால் வெட்டுகிறவனாய்க் காணப்பட்டான்.

கோடரி கூர்மையாக இருந்தால் தான் மரங்களை வெட்ட முடியும். அதனால் ஒவ்வொரு நாள் காலையிலும், கோடரியைத் தீட்டி பதப்படுத்திக் கூர்மையாக்கிக் கொள்வார்கள். பதப்படுத்தப்பட்ட கோடரியே பலமாக வெட்டக் கூடியது. இரும்பை (நீதி 27 : 17) இரும்பு கருக்கிடும் என்று சாலமோன் ஞானி சொன்னது போல (Iron sharpeth iron) யோவான் ஸ்நானகன் கூர்மையுள்ள கோடரியாய்க் காணப்பட்டான். தமிழ் வேதாகமத்திலே கருக்கிடும் என்ற வார்த்தை ஆங்கில வேதாகமத்திலே கூர்மையாக்கிவிடும் என்று சொல்லப்பட்டுள்ளது. எனவே யோவான் ஸ்நானகன் ஒரு கூர்மையுள்ள பட்டயமாக காணப்பட்டான். அன்பான தேவனுடைய பிள்ளைகளே! யோவானின் ஊழியம் கோடரியாக வெட்டி வீழ்த்தும் ஊழியமாகக் காணப்பட்டது. நமது சபையிலும் பாவம் செய்கிற மக்களைப் பார்க்கும் போது கண் ஜாடையாக விடக்கூடாது. பாவத்தின் வேர் எங்குக் காணப்பட்டாலும், எத்தனை வருடங்களாக ஆணிவேர், ஜல்லிவேர் விட்டிருந்தாலும் அவை அனைத்தையும் வெட்டி வீழ்த்தக் கூடிய தைரியம் ஒரு தேவ மனிதனுக்கு இருக்க வேண்டும். அதுவே சாலச் சிறந்த ஊழியமாகும்.

## 5. கர்த்தரின் வெளிச்சமான ஊழியம் : (Burning and Shining Ministry)

யோவான் ஸ்நானகன் தன் காலத்தில் இருந்த தீர்க்கதரிசிகள் மத்தியிலேயும், ஆசாரியர்கள் மத்தியிலேயும், கர்த்தரின் வெளிச்சத்தை பிரதிபலிக்கிறவனாக இருந்தான். "அவன் எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருந்தான்" என்று யோவான் 5 : 35ல் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இவனைக் குறித்து சாட்சி கொடுத்தார். இவன் தன் ஆவியிலே எரிந்தான். ஊழியத்தில் பிரகாசித்தான். எனவே யோவானுடைய வாழ்க்கையிலிருந்தும் ஊழியத்திலிருந்தும் ஜனங்களுக்கு வெளிச்சம் பிரகாசித்தது.

இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தில் கூட "இருளில் இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்" என்று மத் 4 : 15-ஆம் வசனம் சொல்லுகிறது.

அப்போஸ்தலனாகிய பவுலின் ஊழியத்தில் கூட ஜனங்கள் இருளை விட்டு ஒளியினிடத்திற்கு வந்தார்கள் என்று அப் 26 : 18-ல் சொல்லப் பட்டிருப்பதை நாம் பார்க்கிறோம்.

புதிய ஏற்பாட்டு சபையைக் குறித்து ஏசாயா தீர்க்கதரிசனம் சொல்லும் போது "இருள் பூமியையும் காரிருள் ஜனங்களையும் மூடும். ஆனால் உன் மேல் கர்த்தர் உதிப்பார். அவருடைய மகிமை உன்மேல் காணப்படும். உதிக்கிற உன் ஒளியினிடத்திற்கு ராஜாக்களும் உன் வெளிச்சத்தினிடத்திற்கு ஜாதிகளும் நடந்து வருவார்கள்" என்று ஏசா 60 : 2, 3 வசனங்களில் சொல்லுகிறார். இப்படிப்பட்ட சபையில் தான் சின்னவன் ஆயிரமும், சிறியவன் பலத்த ஜாதியுமாவான் என்று ஏசா 60 : 22ல் சொல்லியிருக்கிறார். வெளிச்சம் வீசுகிற சபையை நோக்கித்தான் ஜனங்கள் ஓடிவருவார்கள். ஒரு குறிப்பிட்ட இடத்திலே ஒரு குழல் விளக்கைப் (Tube light) போட்டு விட்டால் எல்லா ஈசல்களும், பூச்சிகளும், கொசுக்களும் அந்த குழல் விளக்கை நோக்கி வந்து, விளக்கை சூழ்ந்து கொள்வது போல நம்மை சூழ இருக்கும் ஜனங்கள் மத்தியிலே நம்முடைய சபையிலிருந்தும், நம்முடைய வாழ்க்கை யிலிருந்தும் வெளிச்சம் பிரகாசிக்குமானால் திரளான ஜனங்கள் பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும், வியாதியிலிருந்தும் விடுதலை பெற ஓடிவருவார்கள். ஜனங்களை விடுவித்து, இரட்சித்து கர்த்தருடைய சபையில் சேர்ப்பார்.

ஒவ்வொரு விசுவாசியைக் குறித்தும் ஆண்டவர் வெளிச்சம் கொடுக்கும்படியே கட்டளை கொடுத்திருக்கிறார். நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள். மலையின் மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்க மாட்டாது. விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடி வைக்காமல் விளக்குத் தண்டின்மேல் வைப்பார்கள். அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும். இவ்விதமாய் மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக் கடவது என்று மத் 5 : 14, 15, 16 வசனங்களில் சொல்லியிருக்கிறார்.

நமது வெளிச்சம் வீட்டிலுள்ளவர்களுக்கு மாத்திரம் மல்ல, உங்கள் கிராமத்திலுள்ள அத்தனை பேருக்கும் கொடுக்க வேண்டும். நம் தேசத்தில் உள்ள அனைவருக்கும், நம்மிலிருந்து வெளிச்சம் புறப்பட வேண்டும். இயேசு கிறிஸ்துவாகிய ஒளி நம்மில் இருக்கும் போது நாம் வெளிச்சம் கொடுக்கும் நட்சத்திரங்களாய்க் காணப்படுவோம்.

நாம் வெளிச்சமாய் பிரகாசிப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்று கவனிப்போமானால் 3 நிபந்தனைகளை நம் ஆண்டவர் சொல்லியிருக்கிறார்.

1. விளக்கை கட்டிலின் கீழே வைக்கக்கூடாது.
2. விளக்கை மரக்காலின் கீழே வைக்கக் கூடாது.
3. விளக்கை பாத்திரத்தினால் மூடி வைக்கக் கூடாது.

விளக்கைக் கட்டிலின் கீழே வைப்பது என்பது நித்திரைப் பிரியத்தைக் குறிக்கிறது. தேவ ஜனங்களாகிய நாம் நித்திரைப் பிரியராய் இருப்போமானால் கர்த்தர் கொடுத்திருக்கிற ஆவியின் வரமாகிய வெளிச்சம் அணைந்து போகும் என்று கர்த்தர் சொல்லுகிறார். எனவே தான் நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள் என்று கர்த்தர் கட்டளையிட்டிருக்கிறார். இராக்காலங்களிலும், பகல் காலங்களிலும் நித்திரையை வெறுத்து தேவனுடைய பாதத்திலே காத்திருந்து ஜெபிக்கிறவர்களுடைய வெளிச்சம் தணலாக பிரகாசிக்கும்.

நம்முடைய வெளிச்சம் தொடர்ந்து பிரகாசிப்பதற்கு மரக்காலின் கீழே மூடி வைக்கக்கூடாது என்று நம் ஆண்டவர் சொல்லியிருப்பதன் அர்த்தம் என்ன வென்றால் மரக்கால் சம்பாத்தியத்தின் அளவைக் குறிக்கிறது. அதாவது பணப்பிரியத்தைக் குறிக்கிறது. பணப்பிரியன் பணத்தினால் திருப்தி அடைவது இல்லை. ஊழியம் செய்கிற ஊழியனானாலும், உத்தியோகம் பார்க்கிற விசுவாசிகளானாலும் பணத்தை ஈட்டுவது எப்படி? பொருளாதாரத்தைப் பெருக்குவது எப்படி? நான் செய்கிற இந்த வேலையினால் கிடைக்கும் லாபம் என்ன? என்ற சிந்தையோடு செயல்படுகிறவர்களுடைய வெளிச்சம் சீக்கிரமாய் அணைந்து போகும். நமது வேலையோ, நமது ஊழியமோ, நம்முடைய உத்தியோகமோ, நம்முடைய பிரகாசமோ கர்த்தருக்கு மகிமை செலுத்த வேண்டுமே தவிர பணத்தை ஈட்டுவது நம்முடைய குறிக்கோளாய் இருக்கக்கூடாது. பணத்தை ஈட்டுவதை தம்முடைய குறிக்கோளாய் கொள்கிறவர்களுடைய வெளிச்சம் காலச் சக்கரம் சுழன்று வரும்போது அணைந்து போகும்.

விளக்கை பாத்திரத்தினால் மூடக்கூடாது என்று நம் ஆண்டவர் சொன்னதின் அர்த்தம் என்னவென்று சொன்னால் பாத்திரத்திலே ஆகாரத்தை வைத்து நாம் புசிக்கிறோமல்லவா? அதுபோல போஜனப் பிரியனாக இருக்கக் கூடாது என்பதுதான். போஜனபிரியனுடைய சரீரம் கொழுத்து விடும். சரீரம் பருத்து விடும். சரீரத்திலே அளவுக்கதிகமான சதைப்பிடிப்பு உண்டாகும். பிற்பாடு முன்புபோல் முழங்கால் படியிட்டு ஜெபிக்கவோ, ஆதி நாட்களைப் போல் அலைந்து திரிந்து ஊழியம் செய்தது போல் செய்யவோ அவர்களால் முடியாது. இன்னும் தீராக வியாதிகளும் சீக்கிரமாய்ப் பிடிக்கும். எனவே பிரகாசம் அணைந்து போகாதிருக்க போஜன பிரியத்திலிருந்து ஜனங்கள் விடுதலை அடைய வேண்டும் என்று ஆவியானவர் சொல்லுகிறார். யோவான் ஸ்நானகன்

இப்படிப்பட்ட நிபந்தனைகளுக்கெல்லாம் விலகி அவன் எரிந்து பிரகாசிக்கிற விளக்காய் இருந்தான் என்று நாம் பார்க்கிறோம்.

## 6. கற்றுக் கொடுக்கும் ஊழியம் : (Teaching Ministry)

ஊழியத்தில் பிரசங்கிக்கிற ஊழியமும் உண்டு. கற்றுக் கொடுக்கிற ஊழியமும் உண்டு. யோவான் ஸ்நானகன் பிரசங்கிக்கிற ஊழியத்தை ஆரம்ப நாட்களில் செய்தான். ஆனால் பிந்திய நாட்களிலே கற்றுக் கொடுக்கும் ஊழியத்தை அவர் அதிகமாய் செய்தார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூட திரளான ஜனங்கள் மத்தியிலே பிரசங்கிக்கிறஊழியத்தை ஆரம்பத்தில் செய்தார். ஆனால் தன் ஊழியத்தை முடிக்கும் சமயத்தில் பன்னிரண்டு பேராகிய அதிலும் தெரிந்து கொள்ளப்பட்ட மூன்று பேராகிய ஒரு சிலருக்கு மட்டும் வேதாகமத்தின் உண்மைகளையும், தீர்க்கதரிசனம் நிறைவேறுதலையும், எதிர்காலத்தைப் பற்றிய சத்தியங்களையும், இயேசு கிறிஸ்துவின் வருகையையும் கற்றுக் கொடுக்கிறவராய் இருந்தார். (Teaching Ministry)

இன்று நமது சபைகளில் எத்தனை இடங்களிலே வேத பாட கூட்டம் நடக்கிறது. சற்று நிதானிப்போமாக ஞாயிறு ஆராதனையில் பிரசங்கத்தைக் கேட்ட பிற்பாடு ஓடிப்போகிறஜனம் மறுஞாயிறு ஆராதனையில் தான் சபைக்கு வருகிறார்கள். இந்த நிலைகள் மாற்றப்பட வேண்டும் என்று கர்த்தர் சொல்லகிறார். மகாப்பெரிய எழுப்புதலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் ஊழியக்காரர்களும், கற்றுக் கொடுக்கக்கூடிய போதகர்களாக இருக்க வேண்டும். ஜனங்களும் கற்றுக் கொள்ளக்கூடிய மனமுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

A true teacher must be

a true student - என்ற ஆங்கிலப் பழமொழி உண்டு.

உண்மையான ஒரு ஆசிரியர் அதற்கு முன்பாக உண்மையான மாணவனாக இருக்க வேண்டும் என்பதுதான் அதன் அர்த்தம். போதகர்களும் கர்த்தருடைய பாதத்தில் இருந்து கற்றுக் கொள்ள வேண்டும். வேதாகம கலாசாலையிலும் கற்றுக் கொள்ள வேண்டும். பின்புதான் ஜனங்களுக்கு கற்றுக் கொடுக்க முடியும்.

யோவான் ஸ்நானகன் எதைப் போதித்தான்? யோவான் ஸ்நானகன் தன் சீஷர்களுக்கு ஜெபிக்கக் கற்றுக் கொடுத்தான் என்று நாம் பார்க்கிறோம். "பின்பு அவர் ஓர் இடத்தில் ஜெபம் பண்ணி முடித்த பின்பு, அவருடைய சீஷரில் ஒருவன் அவரை நோக்கி; ஆண்டவரே யோவான் தன் சீஷருக்கு ஜெபம் பண்ணப் போதித்து போல நீரும் எங்களுக்குப் போதிக்க வேண்டும் என்றான்" (லூக் 11 : 1)

யோவான் ஜெபிக்க கற்றுக் கொடுத்தான். ஜெபிக்கிறவனே ஜெப வாழ்க்கைக் குறித்துக் கற்றுக் கொடுக்க முடியும். ஜெப பாடசாலையில் படிக்காதவன் ஜெபத்தைக் குறித்துக் கற்றுக் கொடுக்க முடியாது. அப்படியே கற்றுக் கொடுத்தாலும் அந்தப் பாடம் கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனப்படாது.

மகாத்மா காந்தி ஒருநாள் வட இந்தியாவிலே ஒரு மேடையிலே பிரசங்கித்துக் கொண்டிருந்தாராம். பிரசங்கத்தின் முடிவிலே ஒரு பெற்றோர் தன் 15 வயது மகனை அழைத்துக் கொண்டு வந்து, மகாத்மா காந்தி அவர்களே! என் மகன் உங்கள் மேல் அதிக பற்றும், பாசமும், பிரியமும் வைத்திருக்கிறான். உங்களுடைய கொள்கைகளைப் பின்பற்றுகிறவனாகவும் இருக்கிறான். ஆனால் இவனுடைய இந்த சிறுவயதிலே சர்க்கரையை அதிகமாய்ச் சாப்பிடுகிறான். சர்க்கரை கலந்த பண்டங்களை அதிகமாய்ச் சாப்பிடுகிறான். இப்படியே இவன் சாப்பிட்டுக் கொண்டு போனால் சீக்கிரமாய் வியாதிப்படுவதற்கும், சரீரம் செயலற்றுப் போவதற்கும் ஆபத்து ஏற்படும் என்று நாங்கள் நினைக்கிறோம். ஆனால் நீங்கள் இவனைப் பார்த்து ஒரு வார்த்தை சர்க்கரை சாப்பிடாதே! என்று சொன்னால் அவன் கீழ்ப்படியக் கூடியவனாக இருக்கிறான். தயவுசெய்து நீங்கள் என் மகனுக்குக் கட்டளையிடுங்கள் என்று கேட்டார்.

மகாத்மா காந்தி அந்த 15 வயது வாலிபனை உற்றுப் பார்த்தார். புன்முறுவல் பூத்தார். பிற்பாடு அவனுக்கு ஒன்றும் சொல்லாமல் பெற்றோர்களைப் பார்த்துத் திரும்பி நீங்கள் இன்னும் 18 நாட்கள் கழித்து அவனைத் திரும்ப என்னிடத்தில் அழைத்து வாருங்கள் என்று சொல்லிவிட்டுப் போனார். பெற்றோர்களுக்கு ஒன்றும் விளங்கவில்லை என்றாலும் மகாத்மாகாந்தி சொன்ன வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து தங்கள் பிள்ளையை அழைத்துக் கொண்டு சென்று விட்டார்கள். மூன்று வாரம் கழித்து மகாத்மா காந்தியை வேறொரு பட்டணத்திலே சந்தித்து, தன் மகனைக் காந்திக்கு முன்பாகக் கொண்டு வந்து நிறுத்தினார்கள். காந்தி அவர்களே! 18 நாட்கள் கழித்து எங்களை வரச் சொன்னீர்கள். அதனால் நாங்கள் இப்போது வந்திருக்கிறோம். இப்போதாவது சர்க்கரைப் பண்டம் சாப்பிடாதே என்று இவனுக்குக் கட்டளையிடுங்கள் என்று கேட்டார்கள். மகாத்மா காந்தி அந்த தம்பியைப் பார்த்து இலேசாக புன்முறுவல் பூத்து இனி நீ சர்க்கரை சாப்பிடாதே என்று ஒரு வார்த்தை சொல்லிவிட்டு அவர் அப்புறம் போய்விட்டார். அவர்களும் அந்த வாலிப தம்பியை தன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போய்விட்டார்கள். அங்கே ஒரு அற்புதம் நடந்தது. அந்த வாலிபன் அன்று முதல் சர்க்கரைச் சாப்பிடுவதை நிறுத்திவிட்டான். பெற்றோருக்கு ஒரே ஆச்சரியம். 6 மாதம் கழித்து

மறுபடியும் அந்த பெற்றோர் காந்தியினிடத்திற்கு வந்தார்கள். காந்தி அவர்களே! உங்களிடத்தில் எங்களுக்கு ஒரு சந்தேகம் நிவர்த்தி பண்ண வேண்டும். தயவாய் எங்களுக்குப் பதில் சொல்லுங்கள் என்று கேட்டார். கேளுங்கள் என்று காந்தி சொன்னார்.

நாங்கள் எங்கள் மகனை 6 மாதத்திற்கு முன்பு அழைத்து வந்த போது சர்க்கரை சாப்பிடாதே என்று என் மகனுக்குக் கட்டளைப் போடுங்கள் என்று நாங்கள் கேட்டோம். நீங்களோ 18 நாள் கழித்து வரச் சொன்னீர்கள். அவ்விதமாக நாங்கள் வந்தோம். நீங்கள் என் மகனைப் பார்த்து சர்க்கரை சாப்பிடாதே என்று சொன்ன உடனே என் மகன் நிறுத்தி விட்டான். 18 நாட்கள் கழித்து சொல்லுகிற அந்த வார்த்தையை ஏன் நீங்கள் முதல்நாளே சொல்லவில்லை என்று அந்த பெற்றோர்கள் மகாத்மாவிடம் விளக்கம் கேட்டபோது, மகாத்மா காந்தி ஒரு பெரிய சிரிப்பு சிரித்தார். அந்த பெற்றோரைப் பார்த்து திருப்பிச் சொன்னார். நீங்கள் என்னிடத்தில் வந்து உங்கள் மகனுக்கு சர்க்கரைச் சாப்பிடாதே என்று கட்டளை கொடுக்கச் சொன்ன நாட்களிலே வயது முதிர்ந்தவனாகிய நானோ அதிகமாகச் சர்க்கரைப் பண்டங்களை விரும்பிச் சாப்பிடுகிறவனாக இருந்தேன். மரண நாட்களை நெருங்கிக் கொண்டிருக்கிற கிழவனாகிய நான் சர்க்கரைச் சாப்பிட்டுக் கொண்டு இந்த உலகத்தை அனுபவிக்கிற வாய்ப்புள்ள இளைஞனாகிய அவனைப் பார்த்து சர்க்கரை சாப்பிடாதே என்று சொல்வது எவ்வளவு பெரிய குற்றம்? பெரிய துரோகம் என்று உணர்ந்து இந்த கட்டளையைப் போடுவதற்காக, அதை முதலில் என் வாழ்க்கையிலே அப்பியாசிக்க வேண்டும் என்று அன்று முதல் சர்க்கரைச் சாப்பிடுவதை நிறுத்தி பதினெட்டு நாட்கள் நான் பயிற்சி எடுத்தேன். சர்க்கரையை முற்றிலுமாக நான் நிறுத்திய பிற்பாடுதான் இந்த வாலிபனைப் பார்த்து நீ சர்க்கரை சாப்பிடாதே என்று சொன்னேன். நான் உண்மையாய் என் வாழ்க்கையில் கைக்கொண்டு அந்த வாலிபனுக்குக் கட்டளை கொடுத்தபடியால் தான் அவனால் சர்க்கரையை விட முடிந்தது என்று காந்தி சொன்னார்.

அன்பானவர்களே! அருமையான ஊழியர்களே! தேவ ஜனமே! சர்க்கரையை சாப்பிடாத ஒரு மனிதன்தான் பிறரைப் பார்த்து சர்க்கரை சாப்பிடாதே என்று கட்டளைப் போட முடியும். இதேப் போல்தான் ஜெபிக்கிற ஒரு மனிதன்தான் பிறரைப் பார்த்து ஜெபிக்க வேண்டும் என்று கற்றுக் கொடுக்க முடியும். ஆகையினால் பிரியமானவர்களே! இந்திய தேசத்தின் எழுப்புதலுக்காகக் காத்திருக்கிற நாம் முதலாவது முழங்கால் படியிட்டு நாம் ஜெபிக்கிறவர்களாய் இருப்போம். பிற்பாடு சபைகளையும், தேசத்தையும் பார்த்து ஜெபிக்க வாருங்கள் என்று அழைப்புக்

கொடுக்கிறவர்களாய் இருப்போம். பின்பு எப்படி ஜெபிக்க வேண்டும் என்று கற்றுக் கொடுப்போமாக. அப்போது ஜெப ஆவி ஊற்றப்படும். ஜனங்கள் எழுப்புதலை அடைவார்கள் என்று இதன்மூலம் அறியலாம்.

## 7. சீடர்களை எழுப்பும் ஊழியம் : (Descipleship Ministry)

யோவான் ஊழியத்தினாலே உண்டான பலன் என்னவென்றால் அவனுடைய காலத்திற்கு அப்புறம் அந்த ஊழியத்தைச் செய்யக்கூடிய சீடர்களை அவன் எழுப்பினான். இன்று நமது ஊழியங்களிலும் நம்மைத் தொடர்ந்தும், நம்மோடு இணைந்தும், நம் காலத்திற்கு அப்புறமும் தொடர்ந்து இந்த ஊழியத்தைச் செய்யக்கூடிய சீஷர்களை நாம் எழுப்ப வேண்டியது மிக அவசியம். யோவான் சீஷர்களை எழுப்பினான் என்பதை லூக் 11 : 1ல் நாம் பார்க்கின்றோம். அவர்கள் யோவானின் காலத்திற்கு அப்புறமும் தொடர்ந்து அந்த ஊழியத்தை செய்தார்கள். அந்த சீஷர்களில் அநேகர் இயேசுவின் சீஷர்களாக மாறி இயேசுவோடு இணைந்து செயல்பட்டார்கள்.

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கடைசியில் கொடுத்த கட்டளை என்னவென்றால் “நீங்கள் உலகமெங்கும் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினால் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்” என்று மத் 28 : 19, 20 வசனங்களில் ஆண்டவர் சொன்னார்.

இன்று நமது ஊழியங்களிலே விசுவாசிகள் அநேகர் எழும்பியிருக்கிறார்கள். கிறிஸ்தவர்கள் பல கோடி பேர் உலகமெங்கும் வாழுகிறார்கள். ஆனால் சீஷர்களாக செயல்படக் கூடியவர்கள் மிகச் சிலரே என்று நாம் கூறமுடியும்.

### சீஷன் என்றால் அர்த்தம் என்ன?

சீஷன் என்ற வார்த்தைக்கு (GK) Mathdes என்ற வார்த்தை சொல்லப்பட்டுள்ளது. இதற்கு 4 விதமான அர்த்தம் சொல்லப்பட்டுள்ளது.

- ★ குருவிடமிருந்து ஆலோசனையைக் கற்றுக் கொள்பவன்.
- ★ கற்றுக் கொண்டவைகளை வாழ்க்கையிலே செயல்படுத்த முயற்சிப்பவன்.
- ★ உபதேசங்களை கற்றுக் கொள்ளும் மாணவன் மட்டுமல்ல அவைகளை வாழ்க்கையிலே செயலாற்றும் செயல்வீரன்.

★ குருவைப் போல மாறும்படி அவரை பின்பற்றுகிறவன் இந்த நான்கு விதமான கிரயத்தை செலுத்துகிறவர்களே சீஷராக எண்ணப்படுவார்கள்.

"போப் கார்டன்" என்ற தேவ மனிதன் சீஷத்துவத்தின் பலனைக் குறித்துச் சொல்லும் போது நம்முடைய புருவம் உயர்ந்து நம்முடைய ஆவி களி கூறுகிறது. நம்முடைய ஊழியங்களிலே இரட்சிக்கப்படுகிற விசுவாசிகள் முதலாவது தாங்கள் சீஷத்துவத்துக்கு அர்ப்பணிக்க வேண்டும். பின்பு ஒரு சீஷன் ஓர் ஆண்டிற்கு மற்றொரு சீஷனை எழுப்பினால் அடுத்த 32 ஆண்டுகளில் 500 கோடி சீஷர்கள் உலகம் முழுவதும் இருப்பார்கள் என்று அவர் சொல்லுகிறார். அதன் அர்த்தம் என்னவென்று சொன்னால் சீஷத்துவமானால் உலகம் முழுவதும் சீஷர்களாக, இயேசுவின் சீஷர்களாக அடுத்த 32 வருடத்தில் உருவாக்கிவிட முடியும் என்பதுதான் அதன் அர்த்தம்.

யோவான் செய்த ஊழியம் இப்படிப்பட்ட சீஷர்களை எழுப்புகிறஊழியம்தான். நீங்களும், நானும் குருவாகிய இயேசுவை நூற்றுக்கு நூறு பின்பற்றக்கூடிய இளம் சீடர்களாக மாறுவோம். உலகத்தை சுவிசேஷ மயமாக்குவோம். யோவானுடைய அருட்பணி இவ்விதம் ஏழுவிதமாக செயல்பட்டு ஆசீர்வாதத்தைக் கொடுத்தது.

இவ்விதமான யோவான்

1. களிகூறச் செய்யும் ஊழியம்
2. சமமாக்கும் ஊழியம்
3. கூவி சத்தமிடும் ஊழியம்
4. கோடறியாக வெட்டும் ஊழியம்
5. வெளிச்சம் வீசும் ஊழியம்
6. கற்றுக் கொடுக்கும் ஊழியம்
7. சீஷத்துவ ஊழியத்தைச் செய்தார்

என்று நாம் அறிகிறோம். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு மணவாட்டியை ஆயத்தப்படுத்தும் நாமும் இதே ஊழியங்களைச் செய்வோமாக!

# 7

# ஆவிகளோடு போராடும் யோவான் ஸ்நானகன்

**"அவள் தன் தாயினால் ஏவப்பட்டபடியே; யோவான் ஸ்நானகனுடைய தலையை இங்கே ஒரு தாலத்திலே எனக்குத் தாரும் என்று கேட்டாள்" (மத். 14 : 8)**

யோவான் ஸ்நானகனுடைய ஊழியத்தின் ஆரம்ப நாட்களில் இருந்து இறுதிவரை பற்பல ஆவிகளோடு போராட வேண்டியதாயிருந்தது. விசுவாசிகளுக்கு போராட்டம் உண்டு. பரிசுத்த ஜீவியம் செய்யும் ஒவ்வொருவருக்கும் போராட்டங்கள் குறுக்கிடும். யோவான் ஸ்நானகன் தன் பணிவிடை ஊழியத்தைத் துவங்கினது மட்டுமல்ல, அதை வெற்றியாய் முடித்தான். ஒரு காரியத்தின் துவக்கத்தைப் பார்க்கிலும் அதன் முடிவு முக்கியம். யோவான் ஸ்நானகனே பழைய ஏற்பாட்டின் கடைசி இரத்த சாட்சியாகும். புதிய ஏற்பாட்டின் முதல் இரத்தசாட்சி ஸ்தேவானாகும். இவர்கள் இருவருக்கும் இடையில் தேவகுமாரன் இயேசு உலகின் மீட்புக்காய் இரத்தம் சிந்தி மரித்தார். ஆனாலும் அதுவும் ஜெயமான முடிவே. (கொலே. 2 : 15)

"நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. எனக்கு மாத்திரமல்ல. அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்" என்று II தீமோத் 4 : 7, 8ல் பவுலும் சொல்கிறார். பவுல் தன் பணிவிடை ஓட்டத்தை முடிக்கும் போது நல்ல போராட்டத்தைப் போராடினேன். போராடியபின், ஓட்டத்தை முடித்தேன் என்று சொல்லுகிறார். அவருடைய பணிவிடை ஓட்டத்தை நான்கு சுவிசேஷகங்களிலும், அப்போஸ்தலருடைய நடபடிகளிலும் நாம் தியானிக்கும் போது 5 வித போராட்டங்கள் வழியாய் யோவான் கடந்து சென்றிருக்கிறார். இன்று அதே போராட்டம் நம் ஆவிக்குரிய வாழ்க்கையில் உண்டு. அதைத்தான் நாம் தியானிக்கப் போகிறோம். நாமும் யோவானைப் போல் ஓட்டத்தை வெற்றியாய் முடிக்கக் கூடிய கிருபைகளையும், வரங்களையும், சத்துவத்தையும், பெலனையும் ஆண்டவரிடத்தில் பெற்றுக் கொள்வோம். "கட்டுகளும்,

உபத்திரவங்களும் எனக்கு வைத்திருக்கிறதென்று பரிசுத்த ஆவியானவர் பட்டணந்தோறும் தெரிவிக்கிறதை மாத்திரம் அறிந்திருக்கிறேன். ஆகிலும் அவைகளில் ஒன்றையும் குறித்துக் கவலைப்படேன். என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன். என் ஓட்டத்தை சந்தோசத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் பெற்றஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன்" என்று பவுல் அப். 20 : 23, 24-ல் கூறுவதைப் பார்க்கிறோம். இப்படியாக பவுல் கூட தன் பணிவிடை ஓட்டத்தை முடிக்க பல போராட்டங்களின் வழியாகத்தான் போனார். கட்டுகள் வழியாய்ப் போனார். உபத்திரவங்கள் வழியாய்ப் போனார். வேதனைகள் வழியாய்ப் போனார். சோதனைகள் வழியாய்ப் போனார். ஆனால் அவருக்கு வாழ்க்கையிலும் வெற்றி. ஊழியத்திலும் வெற்றி பெற்றார் (ரோமர் 8 : 36; II கொரி 2 : 14-15). தேவ ஜனங்களே! உங்களுக்கு வரும் போராட்டங்களும் உங்களை மேற்கொள்ளப் போவதில்லை. உபத்திரவங்களை உரமாக்கிக் கொண்டு செழிப்புடன் வளர்பவர்களே கிறிஸ்தவ மார்க்கம். யோவான் ஸ்நானகனின் தலை கொய்யப்பட்டாலும் அவர் துவங்கிய ஊழியம் தொடர்ந்து நடந்தது. கிறிஸ்தவ ஜீவியமும், கிறிஸ்தவ ஊழியமும் ஒரு தொடர் ஓட்டப்பந்தயம் போன்றது. யோவான் ஸ்நானகன் தன் ஓட்டத்தை இயேசுவிடம் ஒப்படைத்தார். இயேசுகிறிஸ்து அதை ஸ்தேவானிடம் ஒப்படைத்தார். ஸ்தேவான் அதை பவுலிடம் ஒப்படைத்தார். பவுல் அந்த ஓட்டத்தை நம்மிடம் ஒப்படைத்துள்ளார். எனவே நமக்கும் போராட்டம் உண்டு. ஆனால் ஜெயம் உண்டு. யோவான் போராடிய ஐந்து எதிர் ஆவிகளைக் காண்போம்.

## 1. விபச்சார ஆவியோடு போராட்டம் : (Immoral Spirit)

ஏரோது தன் சகோதரனாகிய பிலிப்புவின் மனைவி ஏரோதியாளினிமித்தம் யோவானைப் பிடித்துக் கட்டிக் காவலில் வைத்திருந்தான். ஏனெனில் நீர் அவளை வைத்துக் கொள்வது நியாயமல்லவென்று யோவான் அவனுக்குச் சொல்லியிருந்தான். (மத். 14 : 3, 4) யோவானுடைய ஊழியத்தில் வந்த முதல் போராட்டம் விபச்சார ஆவிகளோடு உள்ள போராட்டம். ஏரோது ராஜா யோவான் ஸ்நானகனின் பிரசங்கங்களை சில வேளையில் சந்தோசமாய் கேட்டார் என்று வேதத்திலே பார்க்கிறோம். ஒருநாள் திடீரென்று ஏரோது ராஜாவைப் பார்த்து நீர் உமது சகோதரன் மனைவியை வைத்திருப்பது நியாயமல்ல என்று யோவான் ஸ்நானகன் சொன்னான். ஏரோது ராஜாவின் பெயர் ஏராது

அந்திப்பா. இவன் சகோதரன் ஏரோது பிலிப்பு என்பவன். இருவரும் திருமணம் ஆனவர்கள் தான். ஆனால் ஏரோது அந்திப்பாவிடம் காணப்பட்ட விபச்சாரத்தின் ஆவியினால் அவன் தன் சகோதரனாகிய ஏரோது பிலிப்பை கொலை செய்து விட்டு தன் சகோதரனின் மனைவியையும், மகளையும் தனக்குச் சொந்தமாக எடுத்துக் கொண்டான். ஆனால் இந்த தைரியமான தீர்க்கதரிசியாகிய யோவான் ஸ்நானகன் ஏரோது அந்திப்பாவின் பாவத்தை தைரியமாக சுட்டிக் காட்டியபோது, இந்த வார்த்தையினிமித்தம் இந்த ஏரோது யோவான் ஸ்நானகனைப் பிடித்துக் காவல் செய்து, சுட்டிவைத்து, சிறைச் சாலையிலே போட்டான். ஊழியக்காரன் ஊழியம் செய்ய முடியாதபடி கட்டப்பட்டு சிறைச்சாலையிலே தள்ளப்பட்டதற்கு முதல் காரணம், முதல் போராட்டம், விபச்சார ஆவிகளின் போராட்டம்.

பின்பு ஆதி சபையில் பவுலின் நாட்களிலும் நடந்ததை I கொரி 5 : 1-7 சில வசனங்களில் பவுல் சொல்லுகிறார். உங்களுக்குள்ளே விபச்சாரம் உண்டென்று பிரசித்தமாய்ச் சொல்லப்படுகிறதே. ஒருவன் தன் தகப்பனுடைய மனைவியை வைத்துக் கொண்டிருக்கிறானே, அது, அஞ்ஞானிகளுக்குள்ளும் சொல்லப்படாத பாவமாயிருக்கிறதே. இப்படிப்பட்ட காரியஞ் செய்தவனைக் குறித்து நீங்கள் உங்களை விட்டு நீக்காமலும் துக்கப்படாமலும் இறுமாப்படைந்திருக்கிறீர்கள். கொஞ்சம் புளித்த மா பிசைந்த மா முழுவதையும் புளிப்பாக்குமென்று அறியீர்களா? என்று பவுல் கொரிந்தியர் சபையாரைப் பார்த்து கடிந்துரைக்கிறார். இந்த கொரிந்து சபை அபிஷேகம் பெற்றசபை, வரம் பெற்றசபை வருகைக்காக காத்திருக்கும் சபை என்று அவர்களைக் குறித்து நல்ல சிறப்பான பண்புகளை சொல்லிவிட்டுப் பின்பு பவுல் 5 ஆம் அதிகாரத்தில் வரும் போது இப்படி வேதனையுடன் எழுதுகிறார். இதன் அர்த்தம் என்னவென்றால் சபையில் ஒருவன் விபச்சார ஆவிக்கு இடம் கொடுத்து ஊரறிய துணிகரமாய் ஜீவித்தான் என்று சொன்னால் அப்படிப்பட்டவனை சபையில் நீங்கள் கண்டிக்கத் தவறும்போது அந்த விபசார ஆவி முழு சபையையும் புளிப்பாக்கி விடும். ஒருவன் நிமித்தம் அநேகர் கலக்கமுண்டாகி தீட்டுபடுவார்கள். ஆகவே அந்த பொல்லாதவனை உங்களை விட்டு நீக்கிப் போடுங்கள் என்று பவுல் எச்சரித்து எழுதினார். ஆகவே பவுலின் நாட்களில் கூட இப்படிப்பட்ட விபச்சார ஆவி போராடினது என்று பார்க்கிறோம்.

இயேசு கிறிஸ்து நாட்களிலும் இப்படிப்பட்ட ஆவி போராடியது. யோவான் 8 : 1 - 11 வரை உள்ள வசனத்தில் ஒருநாள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ஒலிவமலையிலிருந்து இறங்கி தேவாலயத்திற்கு வந்து ஜனங்களுக்கு உபதேசம் பண்ணிக் கொண்டிருந்தபோது விபச்சாரத்தில் கையும் மெய்யுமாய் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு பெண்ணை வேதபாரகரும்,

பரிசேயரும் பிடித்து வந்து அவர் முன் நிறுத்தி, நியாயப் பிரமாணத்தின்படி இவள் கல்லெறிந்து கொல்ல வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. போதகரே! நீர் என்ன சொல்லுகிறீர் என்றார்கள். அவளைக் காரணம் காட்டி அவரைக் குற்றப்படுத்த வேண்டும் என்பது அவர்கள் நோக்கம். விபச்சாரத்தின் ஆவி ஊருக்குள்ளே கிரியை செய்யும். ஆனால் தேவனுடைய சபையையும், தேவ ஊழியர்களையும் அது தாக்கும். பரிசுத்தவான்களை அதிகமாய்த் தாக்கும். ஊழியக்காரர் அதற்கு இடம் கொடாவிட்டாலும், யாராவது ஒருவருக்கு நியாயம் சொல்லும் போது, புத்தி சொல்லும் போது ஆலோசனை சொல்லும் போது அதன் மூலம் ஒரு பயங்கரமான சதித் திட்டம் ஊழியக்காரனுக்கு விரோதமாகவோ அல்லது சபைக்கு விரோதமாகவோ உண்டாகும். அன்பு தேவனுடைய பிள்ளைகளே! இப்படி போராட்டங்கள் வரும் போது நாம், நம்மை கவனமாய்க் காத்துக் கொள்ள வேண்டும் என்று பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறார். யோவான் இந்த ஆவியை கடிந்த போது தண்டிக்கப்பட்டான். இன்றைக்கும் நீதியை எடுத்துச் சொல்கிறவர்களை, அநேகருக்குப் பிடிக்கவே செய்யாது. பாவத்தோடு ஒத்துப் போகிறவர்களை கண்சாடையாய் கவனியாமல் விட்டு விடுகிறவர்களை அநேகருக்குப் பிடிக்கும். விபசாரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஸ்திரிக்கு நியாயம் சொல்லும் போது இயேசுவைக் கல் எறிவதே பரிசேய, சதுசேயர்களின் வஞ்சகத் திட்டம். இயேசு கிறிஸ்துவே விபசார ஆவிகளுக்கு விலக்கி தன்னைக் காத்துக் கொண்டார். பின்பு விபசார ஆவிகளால் நிறைந்தவர்களின் கல் எறிக்கும் தன்னை விடுவித்துக் காத்துக் கொண்டார். உண்மை ஊழியர்களும் உத்தம விசுவாசிகளும் உலகம், மாம்சம், பிசாசுகளோடு போராடத்தான் வேண்டும். ஆவிகளைப் பகுத்தறியும் வரத்தால் பல்வேறு ஆவிகளை இனம் கண்டு அவைகளில் சிக்காமல் நம்மைக் காத்துக் கொள்வோமாக!

## 2. அவிசுவாச ஆவியோடு போராடினான் :
## (The Spirit of unbelieve)

“அத்தருணத்தில் காவலிலிருந்த யோவான் கிறிஸ்துவின் கிரியைகளைக் குறித்துக் கேள்விப்பட்டு, தன் சீஷரில் இரண்டு பேரை அழைத்து, வருகிறவர் நீர் தானா? அல்லது வேறொருவர் வரக் காத்திருக்க வேண்டுமா” என்று அவரிடத்தில் கேட்கும்படி அனுப்பினான். (மத். 11 : 2, 3) யோவானுக்கு இந்த இடத்தில் ஒரு பெரிய இடறல், சில மாதங்களாகச் சிறைச் சாலையில் இருக்கிறான். இயேசுதான் மேசியா. அவரே ராஜாதி ராஜா. உலகமெல்லாம் ஆளுபவர் என்றெல்லாம் அறிந்தவன். ஆனால் ஏரோது பாலஸ்தீனா தேசத்தில் நான்கில் ஒரு பங்காகிய யூதேயா தேசத்தை

மட்டுமே ஆளுகை செய்பவர். இயேசு கிறிஸ்துவோ அகிலாண்டம் முழுவதுக்கும் ராஜாதி ராஜாவாக உள்ளார். நான் அவருக்கு ஊழியக்காரன். ஏரோதிடமிருந்து தன்னை மீட்பார் என்று நினைத்திருக்கிறார். ஆனால் இயேசுவோ யோவான் ஸ்நானகனை விடுவிக்கவில்லை. சில வேளைகளில் நாமும் அப்படித்தான். எதையாகிலும் நினைத்துக் கொண்டே இருப்போம். ஆனால் எதுவும் நடக்காது. நாம் போடுகிறதிட்டங்களின்படியும், நாம் நினைக்கிற நினைவுகளின்படியும் தேவன் கிரியை செய்யாதபோது நமது விசுவாசம் சோதிக்கப்படுகிறது. யோவான் ஸ்நானகனை இயேசுகிறிஸ்து விடுதலையாக்கும் மேசியா என்று நினைத்தார். ஆனால் இயேசு இவரை விடுவிக்கவில்லை. ஏராதுக்கு தண்டனை கொடுக்கவும் இல்லை. காலங்கள் உருண்டோடியது. அதனால் தான் வருகிறவர் நீர்தானா? அல்லது இன்னொரு மேசியா வரவேண்டுமா? என்று கேட்டனுப்பினான். இதற்கு என்ன அர்த்தமென்றால் "நீர்தான் மேசியா" என்று பிதா எனக்கு வெளிப்படுத்தியுள்ளார். மேசியா என்றால் அபிஷேகம் பண்ணப்பட்ட ராஜா - The Anointed King. பிதாவினால் அபிஷேகம் பண்ணப்பட்ட ராஜா. அப்படியானால் ஏன் என்னை சிறைச்சாலையிலிருந்து மீட்கவில்லை என்று நினைத்து தான் கேட்டனுப்பினான். ஏற்கெனவே விசுவாசித்த விசுவாசம் தடுமாறியது. நம்முடைய வாழ்க்கையிலும், நாம் எதிர்பார்க்கும்படி, நாம் திட்டமிட்டபடி, நாம் ஜெபிக்கும்படி காரியங்கள் சம்பவிக்காத போது நம்மில் பலர் விசுவாச வாழ்க்கையிலே தடுமாறுகிறோம். என்ன செய்வது என்று கலங்குகிறோம். குழம்பிப் போகிறோம். ஆனால் ஆண்டவர் சொல்லகிறார். உங்கள் வழிகள் என் வழிகளும் அல்ல. உங்கள் நினைவுகள் என் நினைவுகளும் அல்ல. பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ அப்படியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது என்று ஏசாயா 55 : 8, 9-ல் சொல்லுகிறார். யோவான் ஸ்நானகன் விசுவாசித்தபடி நடவாததால் இந்த யோவானுக்கு பலத்த சோர்வு உண்டாயிற்று. ஆகவே தான் யோவான் அனுப்பிய இரண்டு சீஷர்களையும் பார்த்து இயேசு கிறிஸ்து : நீங்கள் கேட்கிறதையும், காண்கிறதையும் யோவானிடத்தில் போய் அறிவியுங்கள் என்றார். குருடர் பார்வையடைகிறார்கள். செவிடர் கேட்கிறார்கள். மரித்தோர் எழுந்திருக்கிறார்கள். தரித்திரருக்கு சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது. என்னிடத்தில் இடறலடையாதிருக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான் என்று மத். 11 : 4, 5, 6 வசனங்களில் இயேசு சொல்கிறார். அன்பு சகோதரா! சகோதரி! நீங்கள் இன்றோ, கடந்த

காலத்திலோ நீங்கள் நினைத்த விசுவாசத்தின்படி காரியங்கள் சம்பவிக்கவில்லை என்றால் கலங்கிவிடாதீர்கள், சோர்ந்துவிடாதீர்கள்.

உங்களுடைய திட்டங்களை விட பெரிய திட்டங்களை தேவன் உங்களுக்காக வைத்துள்ளார். உங்கள் விசுவாசத்தைவிட பெரிய காரியங்கள் உங்களுக்கு நடக்கும். "ஆகிலும் மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ" என்று ஆண்டவருடைய வார்த்தை சொல்லுகிறது. இந்த கடைசி காலத்திலே உங்களுக்கும், எனக்கும் விசுவாசத்திலே போராட்டம் வரும். ஆனால் தீமோத்தேயுவுக்கு பவுல் எழுதுகிறார். "விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்திய ஜீவனைப் பற்றிக் கொள். அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய். அநேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கை பண்ணினவனுமாயிருக்கிறாய்" (I தீமோ 6 : 12) அறிக்கை பண்ணின விசுவாசத்தின்படி காரியம் நடக்க வில்லை என்று தளர்ந்து விடாதே, சோர்ந்து விடாதே, இடறலடையாதே, விசுவாசத்தை மாற்றிக் கொள்ளாதே. வாழ்க்கையை மாற்றிக் கொள்ளாதே. விசுவாசத்தில் உறுதியாய் இருந்து நிலைத்திருங்கள். அப்பொழுது சாத்தான் உங்களை விட்டு ஓடிப் போவான். நீங்கள் வளர வேண்டிய காரியம் விசுவாச வாழ்க்கையே. "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பதுக் கூடாத காரியம். விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்" அவன் பின் வாங்கிப் போவானானால் அவன்மேல் என் ஆத்துமா பிரியமாயிராது என்று கர்த்தர் சொல்லுகிறார். விசுவாச வாழ்க்கையில் நாம் தோற்றுப் போவோமோ, மடிந்து போவோமோ என்று நினைப்பது பின் மாற்றம். ஆகவே தேவ பிள்ளைகளே! விசுவாசத்தில் நீங்களும், நானும் உறுதியாய் நிலைப்போம். கர்த்தர் ஆசீர்வதிப்பார்.

## 3. சோர்வின் ஆவியோடு போராடினான் : (The Spirit of Depressions)

அத்தருணத்திலே காவலிலிருந்த யோவான் கிறிஸ்துவின் கிரியைகளைக் குறித்துக் கேள்விப்பட்டு, தன் சீஷரில் இரண்டு பேரை அழைத்து வருகிறவர் நீர்தானா? அல்லது வேறொருவர் வரக் காத்திருக்க வேண்டுமா? என்று அவரிடத்தில் கேட்கும்படி அனுப்பினான். (மத். 11 : 3, 4) சில ஆண்டுகளாக அல்லது சில மாதங்களாக சிறையில் அடைக்கப்பட்ட யோவான் தன் ஆவியிலே சோர்ந்து போகிறவராய்க் காணப்பட்டார். அதனால்தான் அவிசுவாசமான கேள்விகளை இயேசுவிடம் கேட்க தன் சீடர்களை அனுப்பினான். யோவான் தன் வாழ்வின் இறுதி நாட்களில் சோர்ந்து போனது போல் நீங்களும் நானும்

சோர்ந்து போகக் கூடாது. எனவேதான் லூக். 18 : 1-ல் சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ணுங்கள் என்று எழுதியுள்ளார். ரோமர் நிருபத்தில் பவுல் : "சோர்ந்து போகாமல் நற்கிரியைகளை செய்கிறவனுக்கு தேவன் நித்திய ஜீவனைக் கொடுக்கிறார்" என்று எழுதுகிறார். சோர்வு மிக எளிதாய் நமக்குள் வந்து விடும். சோர்வு சிலருக்கு உடன் பிறப்பு மாதிரியே. சிலருக்கு சோர்வு இரத்த ஓட்டம் மாதிரியும் இருக்கும். ஆனால் பவுல் அப்போஸ்தலனோ சோர்வை மேற்கொள்ளும் வார்த்தையை எழுதுகிறார். II கொரி 4 : 1ல் இப்படிப்பட்ட ஊழியத்தை உடையவர்களாகிய நாங்கள் இரக்கம் பெற்றிருப்பதால் சோர்ந்து போகிறதில்லை என்று சொல்லுகிறார். புதிய ஏற்பாட்டு ஊழியம் பரிசுத்த ஆவியானவருடைய ஊழியம். எனவே நாம் சோர்ந்து போக வேண்டியதில்லை. II கொரி 4 : 15, 16ல் தேவனுடைய மகிமை விளங்குவதற்கேதுவாகக் கிருபையானது அநேகருடைய ஸ்தோத்திரத்தினாலே பெருகுகிறது ஆனபடியினால நாங்கள் சோர்ந்து போவது இல்லை என்று பவுல் சொல்லுகிறார். யோவான் பழைய ஏற்பாட்டு மனுஷன். உங்களையும், என்னையும் போல் புதிய ஏற்பாட்டு ஆவியை பொறதவன். ஆகவே அவன் சோர்ந்து போனான். பவுல் புதிய ஏற்பாட்டு ஆவியைப் பெற்றவர். இன்று நாமும் புதிய ஏற்பாட்டு ஆவியைப் பெற்றவர்கள். எதைக் குறித்தும் சோர்ந்து போகக்கூடாது. சோர்வு வந்த உடன் மனித இருதயம் பாதிக்கப்படுகிறது. நம் நாடித் துடிப்பு பாதிக்கப்படுகிறது. மனித மூளை நரம்புகள் பாதிக்கப்படுகிறது.

ஒரு திருமண வீட்டில் தயிருக்காக அண்டாவில் பால் காய்த்து ஆற வைத்திருந்தார்கள். இரண்டு தவளைகள் அந்த வழியே எப்படியோ வந்தது. வந்த தவளைகள் இரண்டும் குதித்துக் குதித்து பால் பாத்திரத்திற்குள் விழுந்து விட்டது. இரண்டு தவளைகளில் ஒன்று சோர்வின் ஆவியை உடையதாக இருந்ததால் அது கொஞ்சம் கூட முயற்சி செய்யாமல் உள்ளே இறந்துவிட்டது. ஆனால் மற்றொரு தவளையோ சோர்ந்து போகாமல் தப்புவதற்காக பால் பாத்திரத்திற்குள் சுற்றி சுற்றி வந்தது. பாலைக் கடைதல் வெண்ணெயைப் பிறப்பிக்கும் என்ற வசனத்தின்படி தவளை சுற்றி வந்த பாலில் வெண்ணெய் திரளாக திரண்டு பாறைபோல் சேர்ந்தது. உடனே இந்த தவளை அதன்மேல் ஏறி முழு பெலத்தோடு குதித்து வெளியே வந்து உயிர் தப்பியது. நாம் இன்று எதையும் கண்டு சோர்ந்து போகக் கூடாது. கர்த்தர் உங்களைப் பெலப்படுத்துவார். நம்பிக்கையில் தளர்ந்து போகாமல் தொடர்ந்து கிரியை செய்யுங்கள். சிக்கலான சூழ்நிலைகளையும், நம்பிக்கையிழந்த நிலையையும் மாற்றுவார்.

## 4. அசட்டை ஆவியின் போராட்டம் :
## (The Insulting Spirit)

"பரிசேயரும், நியாய சாஸ்திரிகளுமோ அவனாலே ஞானஸ்நானம் பெறாமல் தங்களுக்குக் கேடுண்டாக தேவனுடைய ஆலோசனையைத் தள்ளிவிட்டார்கள்" (லூக் 7 : 30) என்று யோவானின் ஊழியத்தில் நடந்த சம்பவத்தைப் பார்க்கிறோம். யோவானின் பிரசங்கத்தை, ஊழியத்தை பரிசேயர்கள் தள்ளி விட்டார்கள். இயேசு கிறிஸ்துவின் நாட்களில் பரிசேயர்கள் தான் பணக்காரர்கள். அந்தஸ்திலே உயர்ந்தவர்கள். யோவான் ஸ்நானகன் நாட்களிலே பரிசேயர்கள் படித்தவர்கள், வேதாகமத்தை அறிந்தவர்கள். பரிசேயன் என்றாலே பரிசுத்தவான் பிரித்தெடுக்கப்பட்டவன் என்று அர்த்தம். இப்படிப்பட்டவர்கள் தான் இந்த யோவானுடைய பிரசங்கத்தைத் தள்ளி விட்டார்கள். யோவான் ஸ்நானகனின் ஆலோசனையைத் தள்ளிவிட்டார்கள். யோவானின் ஊழியத்திலே அசட்டைப் பண்ணும் ஆவியோடு போராடினான். அன்பு தேவ பிள்ளைகளே இந்த போராட்டம் இன்று உங்களுக்கும் எனக்கும் உண்டு. லேயாள் அற்பமாய் எண்ணப்பட்டது போல சில இடங்களிலே உங்களை அற்பமாய் நினைப்பார்கள். ஆனால் நீங்கள் அந்த வேளையில் சோர்ந்து போகக் கூடாது. மனமடிவு அடையக் கூடாது.

சவுல் என்பவன் சமஸ்த இஸ்ரவேலிலும் அவன் தோளுக்குச் சமமானவன் ஒருவனும் இல்லை. கர்த்தர் அந்த சவுலை அழைத்து இஸ்ரவேலின் முதல் ராஜாவாக அபிஷேகம் பண்ணினார். ராணுவத்திலே அநேகர் அந்த சவுலைப் பின்பற்றிப் போனார்கள். ஆனால் பேலியாளின் மக்களோ அவனுக்குக் காணிக்கை கொண்டு வராமல் அவனை அசட்டை பண்ணினார்கள் என்று வேதம் சொல்லுகிறது. அசட்டை பண்ணும் ஆவி சவுலோடும் போராடியது.

யோவான் ஸ்நானகனின் வாழ்க்கையில் அலட்சியப் போக்குள்ள மனிதர்களால் அவர் அசட்டை பண்ணப்பட்டது போலவே உங்களுடைய வாழ்க்கையிலும் ஊழியத்திலும் அசட்டை செய்யும் ஆவிகள் போராடக் கூடும். ஆவிக்குரிய ஊழியத்தை அங்கீகரிக்க சிலருக்கு முடியாது. ஆவிக்குரிய வளர்ச்சியையும் மேன்மையையும் சிலருக்கு ஏற்றுக் கொள்ள முடியாதபடி திமிர்வாதம் பிடித்திருக்கும். யோவானின் மேன்மையை அங்கீகரித்தால் தங்களுடைய மரியாதை குறைந்து விடும் என்று எண்ணுபவர்கள் உண்டு. இப்படிப்பட்டவர்கள் யார் என்பதற்கு ஒரு விளக்கம் தருகிறேன். பரிசேயன் என்பதற்கு ஆங்கிலத்தில் Hharisee என்று உள்ளது. அதற்கு

| | | | | |
|---|---|---|---|---|
| H | - | Hypocrites | - | பெருமைக்காரர்கள் |
| H | - | Hypocrites | - | வேசதாரிகள்; மாய்மாலக்காரர்கள் |
| A | - | Arragants | - | ஆணவக்காரர்கள் |
| R | - | Religious | - | மதப்பற்றுடையவர்கள் |
| I | - | Insulters | - | நிந்திப்பவர்கள் |
| S | - | Self rightous | - | சுயநீதிக்காரர்கள் |
| E | - | Evil murders | - | தீய கொலைபாதகர்கள் |
| E | - | Eye pleasers | - | முகஸ்துதி பண்ணுகிறவர்கள் |

இத்தனை சுபாவத்தை உடையவர்கள் தான் பரிசேயர்கள். அவர்கள் உண்மையாயிருக்கிற பரிசுத்தவானுடைய ஊழியத்தை அசட்டைப் பண்ணுவது நிச்சயம். ஆனால் யோவானிடத்திலே ஆயக்காரரான பாவிகள், எளிய ஏழை மக்கள் போய் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு அவனிடத்தில் ஞானஸ்நானம் பெற்றார்கள். ஆகவே அன்பு சகோதரனே! சகோதரியே! எதிர்மறையாக இருக்கும் காரியங்களைக் கண்டு நம்முடைய பணிவிடை ஓட்டத்தை நிறுத்திவிடக் கூடாது. மாற்றிவிடக் கூடாது. அநுகூலமான ஒரு சிலக் காரியங்களைக் குறித்து சந்தோசப்பட்டு, தேவனைத் துதித்து நம்முடைய ஆவியிலே உற்சாகமாய்ப் போவோமாக.

## 5. அந்தகாரலோகாதிபதிகளோடு போராட்டம் :
## (The Spirit of Present World)

"ஏரோது அவனை கொலை செய்ய மனதாயிருந்தும் ஜனங்கள் அவனைத் தீர்க்கதரிசி என்று எண்ணினபடியால் அவர்களுக்குப் பயந்திருந்தான்" (மத். 14 : 5) என்று பார்க்கிறோம். ஏரோது ராஜா யோவானை கொலை செய்ய மனதாயிருந்தான். அதற்குரிய வாய்ப்பை தேடினான். யோவானுக்கு ராஜாக்களோடு போராட்டம் இருந்தது. ராஜா ராஜாவோடு தான் யுத்தம் செய்வார். உங்களை சில பெரிய மனிதர்கள் பகைக்கிறார்கள் என்று சொன்னால் நீங்கள் பெரிய மனிதர்கள் ஆகிவிட்டீர்கள் என்று அர்த்தம். சில முக்கியமானவர்கள் (VIP) உங்களைப் பகைக்கிறார்கள் என்றால் நீங்கள் முக்கியமானவராக உயர்ந்துவிட்டார்கள் என்றுதான் அதன் பொருள். நீங்கள் சாதாரணமானவர்கள் அல்ல.

அப். 12 : 1-ல் ஏரோது சபையிலே சிலரைத் துன்பப்படுத்தினான். யாக்கோபை பட்டயத்தால் கொலை செய்தான். பேதுருவைப் பிடித்து சிறையிலேப் போட்டான். ஏரோது ராஜாவைப் போல் சபையாரே நீங்களும் ராஜாக்கள் தான். நீங்கள் ராஜாக்களும், ராஜாத்திகளுமாய்

இருக்கிறபடியால்தான் ராஜாக்கள் உங்களோடு போராடுகிறார்கள். சங். 2 : 1 முதல் உள்ள வசனத்தைப் பார்த்தால் பூமியின் ராஜாக்கள் தாவீதுக்கு விரோதமாய் எழும்பினார்கள் என்று உள்ளது. அப். 4 : 25, 26-ல் பூமியின் ராஜாக்களெல்லாம் தாவீதுக்கு விரோதமாய் எழும்பினது போல எங்களுக்கு விரோதமாய் எழும்பி உள்ளார்கள் என்று சபையாரெல்லாம் சொல்லி ஜெபித்தார்கள். ஆண்டவரே! எங்களைக் கொஞ்சம் கண்ணோக்கிப் பாரும் என்று ஜெபித்தார்கள். ஆகவே தேவ ஜனமே! தேவ சபையே! உங்களுடைய தரத்தைக் கர்த்தர் உயர்த்தியிருக்கிறார். ஒரு காலத்தில் அறியப்படாதவர்களாய், காணப்படாதவர்களாய், ஏழையாய், எளியவர்களாய், மறக்கப்பட்டவர்களாய், கடன்பட்டவர்களாய், முறுமுறுப்பு உள்ளவர்களாய் இருந்தீர்கள். இன்று தேவன் உங்களை இரட்சித்து, அபிஷேகித்து ராஜாக்களாய், ஆசாரியர்களாய் உயர்த்தி இருக்கிறார். ஆகவே உங்களை சில மனிதர்களுக்குப் பிடிக்காது. கர்த்தர் உங்களை உயர்த்தியதற்காக நன்றி செலுத்துங்கள்.

ஏரோது ராஜா இயேசுவைப் பகைத்தான். யோவான் ஸ்நானகனையும் பகைத்தான். பூமியின் ராஜாக்கள் எல்லாம் தாவீதைப் பகைத்தார்கள். பெரிய ராஜாக்கள் பகைக்கிறார்கள் என்றால் அவர்கள் அல்ல. அவர்களுக்குப் பின்னே மறைந்திருக்கும் உலகத்தின் ஆவிகள் தான் நம்மோடு போராடுகிறது என்று தெரிந்து கொள்ளுங்கள். எசேக்கியேல் 28ஆம் அதிகாரத்தைப் பார்த்தால் நீ தீருவின் ராஜாவைக் குறித்துப் புலம்பிச் சொல்வது: லூசிபரே! அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியே! என்றெல்லாம் போட்டுள்ளதைப் பார்க்கிறோம். தீருவின் ராஜா, தீருவின் அதிபதி, பெர்ஷிய ராஜ்யத்தின் அதிபதி இவர்களுக்குள் இருப்பது பொல்லாத லூசிபரின் ஆவிகள்தான். ஆகவே அவர்கள் மனிதர்கள் அல்ல. அந்த மனிதர்களுக்குள் மறைந்திருக்கும் லூசிபரின் ஆவிகள் தான் இன்று உங்களுக்கும், எனக்கும் அதாவது தேவனுடைய பிள்ளைகளுக்கும், தேவனுடைய சபைக்கும் விரோதமாய்ப் போராடுகிறது. ஆகவே தான் திடீரென்று பிரச்சனைகள் எழும்புகிறது. குழப்பங்கள் குறுக்கிடுகிறது. சூழ்நிலைகள் மாறுகிறது. மனிதர்கள் நமக்கு விரோதிகளாகிறார்கள். கஷ்டங்களும், சத்துருவின் தாக்குதலும் வருகிறது.

ஆகவேதான் பவுல் எபேசு 6 : 12-ல் "மாம்சத்தோடும், இரத்தத்தோடும் அல்ல. துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு" என்று சொல்லியுள்ளார். ஆனால் ஜெயம் உண்டு. உலகத்தின் இருப்போனிலும்

நமக்குள் இருப்பவர் பெரியவர். பரிசுத்த ஆவியானவர் நமக்குள் இருப்பதால் நமக்கு ஜெயம் உண்டு. யோவான் ஸ்நானகனை ஏரோது கொலை செய்ய மனதாயிருந்தும் அவனைத் தீர்க்கதரிசி என்று ஜனங்கள் சொன்னபடியினால் அவனால் அப்படிச் செய்ய முடியவில்லை. எனவே தேவபிள்ளைகளே! நமக்கு முன்னே குறுக்கிடும் ஆவிகளை தோற்கடிக்க பரிசுத்த ஆவியானவர் நம்முடன் இருக்கிறார். உலகில் இருப்போனிலும் உங்களுக்குள் இருப்பவர் பெரியவர். பெரியவராகிய பரிசுத்த ஆவியானவர் நமக்கு ஜெயம் தருவார். இவ்விதமாக யோவான் ஸ்நானகன்,

1. விபசார ஆவிகளோடு போராடினார்
2. அவிசுவாச ஆவிகளோடு போராடினார்
3. சோர்வின் ஆவிகளோடு போராடினார்
4. அசட்சையின் அவிகளோடு போராடினார்
5. அந்தகாரலோகாதிபதிகளோடு போராடினார்

என்று பார்க்கிறோம். அனைத்து எதிர் ஆவிகளைவிட நமக்குள் வாசம் பண்ணும் பரிசுத்த ஆவியானவர் சர்வ வல்லவர். இவரைக் கொண்டு நாமும் நமது எதிர்வல்லமைகளோடு போராடுவோமாக! பரிசுத்த ஆவியானவர் நமக்கு ஜெயம் தருவார். ஆமென்!

அல்லேலூயா.

## ஆசிரியரின் பிற வெளியிடுகள்

1. ஆவி, ஆத்துமா, சரீரம்
2. கொடியேற்றுங்கள்
3. மகிமையின் மேல் மகிமை
4. உறுதியான அஸ்திபாரம்
5. வாழ்வளிக்கும் வயல்
6. எழுப்புதலும் நியாயத்தீர்ப்பும்
7. திறப்பில் நிற்கும் ஊழியன்
8. திசை மாறிய தீர்க்கதரிசி
9. உலகம் மாமிசம் பிசாசு
10. கடைசிக் கால பாபிலோன்
11. கிறிஸ்துவின் மணவாட்டி
12. சிந்தனையில் பரிசுத்தம்
13. சீயோன் கோட்டையை பிடியுங்கள்
14. ஏதேன் தோட்டம்
15. பரலோக, பாதாள வாசல்
16. ஆவியின் வரங்கள்
17. ஆவியின் கனிகள்
18. யூதா நிருபம்
19. சிறையிலிருந்து சிங்காசனம் வரை
20. இரட்சகனாகிய தீர்க்கதரிசி
21. தேவாலயத்தின் தூண்கள்
22. இதோ மணவாளன் வருகிறார்
23. சொப்பனங்களும் தரிசனங்களும்
24. மேய்ப்பனாகிய தீர்க்கதரிசி
25. ஸ்தல சபையின் வளர்ச்சி
26. எபிரெயர் நிருபம்
27. யோவான் ஸ்நானகன்
28. கானான் யாத்திரை
29. போய் சுதந்தரித்த ஆபிரகாம்
30. துணையாளராகிய ஆவியானவர்
31. சாலமோன் ராஜா
32. ஆசீர்வாதமான கிறிஸ்தவம்
33. பாவம்
34. கர்த்தரின் பட்டயம்
35. தேவனுடைய இராஜ்யம்
36. இலக்கை அடைந்த தாவீது?
37. விசுவாசத்தை வளர்ப்பது எப்படி?
38. பரிசுத்த ஜீவியம்
39. அபிஷேகத்தை அனல்மூட்டுவது எப்படி?
40. எழுந்து கட்டுவோம் வாருங்கள்
41. மன்னாதி மன்னன் இயேசு
42. ஆராதனைக்கு ஓர் அழைப்பு
43. சிறிய தீர்க்கதரிசனங்களின் விளக்கவுரை
44. வல்லமையை பெற்றுக் கொள்வது எப்படி?
45. ஜெயஜீவியமும் செழிப்பான வாழ்வும்
46. ஆராதிப்பது எப்படி?
47. பிரோயஜனமுள்ளவனாவது எப்படி?
48. யேசபேலின் ஆவி
49. நமது அதிகாரங்கள்
50. பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்
51. சீஷர்களாக்குங்கள்
52. பாரம்பரியமா? பரிசுத்த ஆவியானவரா?
53. புதிய ஏற்பாட்டு சபை
54. எப்பாபிரா
55. நீதிமானாவது எப்படி?
56. ஊழிய வரங்கள்
57. மேலான இயேசுவின் நாமம்
58. வேதம் கற்பது எப்படி?
59. ஆவிக்குரிய போராயுதங்கள்
60. தேவன் யார்? எப்படிப்பட்டவர்?
61. தசமபாகம் கொடுக்க வேண்டுமா?
62. வெற்றியுள்ள கிறிஸ்தவன்
63. பரலோக ராஜ்யத்திற்குள் பிரவேசிப்பவர்கள் யார்?
64. ஓடு ஓடு ஓடு ?
65. திரும்பி வரும் தேவ மகிமை
66. விழுந்தவன் எழும்ப முடியுமா?
67. மரணத்திற்கு பின் சம்பவிப்பது என்ன?

## இந்நூலைப் பற்றி...

இன்றைய ஊழியக்காரர்களை வேதாகம கால ஊழியக்காரர்களோடு ஒப்பிட்டு பார்த்தால், மலைக்கும், மடுவுக்கும் உள்ள வித்தியாசம் போல் இருக்கிறது. வேதாகம கால விசுவாசிகளை, இன்றைய கால விசுவாசிகளோடு ஒப்பிட்டால், வானத்திற்கும், பூமிக்கும் எட்டாத உயரம் போல இருக்கிறது. மல்கியா தீர்க்கதரிசனத்திலிருந்து மத்தேயு சுவிசேஷம் வரை 400 வருடங்கள் உலக சரித்திரத்தில் இருண்ட காலம். சபையின் சரித்திரத்தில் அந்தகாரம் சூழ்ந்த நேரம். அந்த நாட்களில் எந்த தீர்க்கதரிசியும் எழும்பவில்லை. ஆராதனை நடத்த ஆசாரியன் இல்லை. தொழுது கொள்ள ஆலயம் இல்லை. எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. அந்த நேரத்தில் அருணோதயமாய் உதித்தவர் தான் யோவான் ஸ்நானகன். இவருக்கு

- உணவில் பிரதிஷ்டை இருந்தது
- உடையில் பிரதிஷ்டை இருந்தது
- உருவத்தில் பிரதிஷ்டை இருந்தது
- உபதேசத்தில் உன்னதம் இருந்தது
- பிரசங்கத்தில் வீரம் இருந்தது
- பாவியை கடிந்து கொள்ள பயம் இல்லாதவர்
- ஸ்திரியினிடத்தில் பிறந்தவர்களில் இவரே பெரியவர்

இன்றைய ஊழியர்களுக்கும், விசுவாசிகளுக்கும் தெய்வீக குணங்களை படிப்பித்துக் கொடுக்கும் ஆவிக்குரிய குணசீலர். இவரைப் பற்றிய தியானம் நம்மை தெய்வீக மானிடராக்கும். எரிந்து பிரகாசிக்கிற ஊழியராக்கும்.

### ஆசிரியரை பற்றி...

**சின்னவன் ஆயிரமும், சிறியவன் பலத்த ஜாதியுமாவான். ஏசா. 60:22**



என்ற வாக்குத்தத்தை தரிசனமாக பெற்று கர்மேல் பெந்தெகொஸ்தே சபையை ஸ்தாபித்து அதின் மூத்த போதகராக பணியாற்றும் இவர் கடந்த 34 ஆண்டுகளாக சபையின் மேய்ப்பராக, வேதாகம போதகராக, சபைகளை ஸ்தாபிக்கும் அப்போஸ்தலராக தேவனால் பயன்படுத்தப்படுகிறார்.

அகில உலகமும் பயணம் செய்து மத். 28:19ன் படி கிறிஸ்துவுக்கு சீஷர்களை உருவாக்க கருத்தரங்களில் போதித்து வருகிறார். ஆசிரியர் எழுதிய புத்தகமே உங்கள் கையில் தவழும் இப்புத்தகம் இவரின் புத்தக செய்திகள் உலகின் 85 நாடுகளுக்குள் கடந்து சென்று எழுப்புதல் தீயை பற்ற வைத்துள்ளது.


CARMEL PRAYER FELLOWSHIP
ZIM
ZIONFORT INTERNATIONAL MINISTRIES

ஆக்கியோன்
**பாஸ்டர் மா. ஜான்ராஜ்**
**சீயோன் கோட்டை சர்வதேச ஊழியங்கள்**
26, D, காந்தி ரோடு, சிவகாசி - 626 123.
தமிழ்நாடு - இந்தியா.
போன்: 0091 - 4562 - 277209